# தமிழர் வாழ்வு

டாக்டர்
மா. இராசமாணிக்கனார்

000204

சாந்தி நூலகம்
2/122, பிராட்வே • சென்னை-1.

சாந்தி வெளியீடு எண் 33
இரண்டாம் பதிப்பு: நவம்பர் 1961
உரிமை ஆசிரியருக்கே.

நூலகப் பதிப்பு
**விலை ரூ. 3-00**

பாரதி பிரிண்டர்ஸ், 119, பிராட்வே, சென்னை-1.

# முகவுரை

தமிழர் வாழ்வுக்குரிய கட்டுரைகள் இதன்கண் இடம் பெற்றிருப்பதால், இப் பல பொருள் கட்டுரைநூல் தமிழர் வாழ்வு என்னும் பெயர்பெற்றது. இதன்கண் தமிழ் வளர்ச்சிக்குரிய வழிகள், சிறு தெய்வ வணக்கத்திற்குரிய காரணங்கள், முதலியன தக்க சான்றுகளோடு விளக்கப்பட்டுள்ளன. புதிய தமிழக முன்னேற்றத் துறைகள் சில இதன்கண் இடம் பெற்றுள்ளன. சுருங்கக் கூறின், தமிழ், தமிழர், தமிழ்நாடு பற்றிய செய்திகள் இந்நூலில் நிரம்ப இடம்பெற்றுள்ளன. இம் மூன்றிலும் அவாவுடைய தமிழ் மக்களுக்கு இந்நூல் நல்விருந்தாகும்.

மா. இராசமாணிக்கனார்

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நாடும் மக்களும் | 1 |
| 2. | நடுகல் | 6 |
| 3. | இலக்கியமும் சமயமும் | 11 |
| 4. | புதிய தமிழகம் | 17 |
| 5. | தமிழ் வளர் வழிகள் | 23 |
| 6. | திருக்குறள் | 29 |
| 7. | பண்டைத் தமிழர் விழாக்கள் | 35 |
| 8. | மொழிவழிப் பண்பாடு | 42 |
| 9. | அன்றைய தமிழகமும் இன்றைய தமிழ்கமும் | 50 |
| 10. | தமிழர் வாழ்வு | 57 |
| 11. | தமிழ் வளர்க்கும் தனவணிகர் | 63 |
| 12. | டாக்டர் சோமசுந்தர பாரதியார் | 69 |
| 13. | அகப்பொருளும் பக்தி நெறியும் | 76 |
| 14. | திருக்குறள் இன்பத்துப்பால் - களவு | 83 |
| 15 | மார்கழி நோன்பு | 91 |
| 16. | காதலும் வீரமும் | 100 |
| 17. | பண்டிதர் சவரிராயர் | 111 |
| 18. | பாரதியார் | 124 |
| 19. | சிறுதெய்வ வணக்கம் | 136 |
| 20. | தமிழில் பழமொழிகள் | 148 |

# 1. நாடும் மக்களும்

சிலப்பதிகாரத்தில் புகார் நகரத்துச் சிறப்பினைக் கூறுகையில் இளங்கோவடிகள் புகார் நகரத்து மக்கள் தங்கள் நாட்டை விட்டுப் பிற நாடுகளுக்குக் குடியேற வேண்டும் என்று நினைத்ததும் இல்லையென்று குறிப்பிடுகின்றார். பகைவர் பற்றிய அச்சம், அரசனின் கொடுங்கோன்மை, பிணியின் துயர், வறுமையின் கொடுமை ஆகிய நான்கின் அடிப்படையில்தான் ஒரு நாட்டு மக்கள் பிற நாடுகளுக்குக் குடியேற வேண்டும் என்று நினைப்பர். புகார் நகரத்து மக்கள் பிற நாடுகளுக்குக் குடியேற நினைக்கவும் இல்லை என்பதால், மேற்கூறிய நான்குவகைப்பட்ட துயர்களையும் அறியாததாகப் புகார் நகரம் விளங்கியது என்பதை நாமறிய முடிகிறதல்லவா?

திருவள்ளுவர் பொருட்பாலில் நல்ல நாட்டின் வாழ்க்கையையே கூறுகின்றார்; இன்பம், அறம் என்ற இரண்டு பகுதிகட்கும் இடைப்பட்டதாகிய ஒரு பகுதியினைப் 'பொருள்' என்று குறித்து, அதில் நல்ல நாட்டின் வாழ்க்கையைக் கூறுகின்றார். ஒரு நாட்டின் நல்வாழ்வு அந்நாட்டின் பொருளாதார வளத்தையே முதலாகக் கொண்டது. ஆதலால் நாட்டின் வாழ்க்கையைக் கூறும் பகுதிக்குப் பொருளையே சுட்டிப் 'பொருட்பால்' என்றார்.

தமிழ் இலக்கியங்கள் யாவற்றிலும் நாடு என்பதன் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. இலக்கியம் மனித வாழ்விலிருந்து பிறந்து மனித வாழ்விற்கே உரியதாகி மனித வாழ்விற்காகவே நிலைபெற்றுள்ளது என்று இலக்கியத் திறனாய்வாளருள் ஒருவரான ஹட்சன் கூறியுள்ளார். இலக்கியம் தன் மொழியைக் காப்பதுபோல்

தன் நாட்டையும் தன் நாட்டின் வழக்க வொழுக்கங்களை யும் பிறவற்றையும் காத்துவரும் மாண்புடையதாகும்.

ஒருநாடு எல்லாச் சிறப்புக்களையும் ஒருங்கே கொண்டுள்ளது என்பதை மட்டும் கொண்டு அந்நாட்டு மக்களும் சிறந்தவர்கள் என்று கூறிவிடமுடியாதல்லவா? எல்லா வளங்களையும் ஒருங்கே கொண்டுள்ள நாடுகளே போரைப்பற்றிய அச்சம் மிகக் கொண்டுள்ளன. எனவே, நாட்டின் வளப்பம் நாட்டு மக்கள் மனப்போக் கிற்கேற்பச் சிறப்புப் பெறும் என்பதை நாமறிதல் வேண்டும்.

உலகில் பிறந்த யாவர்க்கும் உரிய பொதுச் சொத் துக் கவலை. ஆனால், ஒரு சிலர் யாவர்க்கும் பொதுச் சொத்தான கவலையைப் பங்கிட்டுக்கொள்ளாமல்,

> "ஊர் எலாம் அட்ட சோறு நம்மதே;
> உவரி சூழ்ந்த பார்எலாம் நமது பாயல்"

என்று கூறி மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். "நாளை உணவுக்கு என்ன செய்வது!" என்ற கவலையே இல்லா மல் யாழைக் கையிலேந்தி இன்னிசை பாடி ஓரிடமா யில்லாது நாடெங்கும் சுற்றித் திரிந்த பாணர் மரபே பண்டைத் தமிழகத்தின் செல்வ வளத்தைக் குறிக்கப் போதியதாகும்.

மக்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுவதற்கு அந் நாட்டின் செல்வ வளமே காரணமாகும் என்பதையறிந் தோம். பழந்தமிழ் நாட்டு மக்கள் போதுமென்ற மன முடையவராய், பிறரும் தம்மைபோலச் சிறந்து வாழட் டும் என்ற எண்ணமுடையவராய் இருந்த காரணத்தால் தான் அந்நாட்டில் இலக்குமிக்கு வேலையில்லாது

போயிற்று என்கிருர் கம்பர். மக்கள் பொருள் தேடு தலேயே நோக்கமாகக் கொண்டிருப்பின், செல்வத் திரு வுக்கு ஓய்விராதல்லவா? ஆதலால் மக்கள் மனத் தையும் வாழ்வையும் மிகச் சுருக்கமாகக் கம்பர், இலக் குமியைக்கூட (செல்வ வளத்தை) விரும்பாத ஓர் அமைதியை அடைந்துவிட்டார்கள் என்று கூறி நிறுத்திஞர்.

குடியரசு முறை அமைந்த நாட்டில் வாழும் நாம் கனவுக் காட்சிகளேப்போல இவற்றையெல்லாம் படித்து மகிழுகின்ருேம். கம்பன் கண்ட கோசல நாடாக நாம் ஏன் நடைமுறையில் நம் நாட்டினே மாற்றுதல் கூடாது என்ற எண்ணம் நமக்கு எழுவதில்லே. அந்த எண்ணம் எழுமாயினும் இயல்பாயுள்ள வாழ்க்கைப் போராட்டங் கள் அந்த எண்ணத்தை வளரவொட்டாது தடுக்கின் றன. மக்கள் மனம் பண்படாத காரணத்தால்தான் தமிழினமும் நாடும் மொழியும் வளம் பெருதுள்ளன.

மற்றவர்களேவிடத் தாங்கள் மட்டும் உயர்வாக வாழ வேண்டும் என்றும் எதிரிகளே நசுக்கித் தாழ்த்த வேண்டுமென்றும் இறைவழிபாடு புரிபவர்களே நம்மில் மிகுதியாக உள்ளனர். கடவுள் நெறி, தனிப்பட்ட தங் கள் விழைவெல்லாம் நிறைவேறப் பயன்படும் என்பதே அவர்கள் எண்ணம். இத்தகையவர் மக்கள் தொண்டே இறையன்பு என்பதை எக்காலத்தும் ஏற்கவே மறுப்பர். இந்த மனமே அரசியலில் உள்ளது. தன்னம்பிக்கையும் கடமையும் கொள்கையும் பொதுமக்களால் மறக்கப்படு வதால்தான் நாட்டில் தீமைகள் மல்க வழியேற்படுகின் றது. அரசியல் துறையில் நாட்டுப்பற்ருே உலகப்பற்ருே

வாழக் காண்பது அரிதாக உள்ளது. தேர்தல் முதல் நீர்வாயுக் குண்டு வீசும் அடாத செயல் வரையில் எங் கும் அச்சமும் ஆவலுமே ஆட்சி புரிகின்றன. இந்த நிலை யில் உண்டாகும் தீமைகளுக்கெல்லாம் உரிமை அற்ற மக்கள் நிலையும் அதனால் ஏற்படும் அடிமை மனப் பான்மையுமே காரணமாகும்.

நம்நாடும் மொழியும் நாகரிகமும் மக்களும் வளமாக வாழ்ந்து வளர்ந்து சிறக்க வேண்டுமானால், புதிய தமிழ கம் விரைவில் உருவாக்கப்படுதல் வேண்டும். புதிய தமிழகத்தில் சமயம் காரணமாகவோ, சாதி காரண மாகவோ வேறு எக்காரணம் பற்றியோ மக்களிடையே வேற்றுமை காணப்படுதல் கூடாது. அவ்வாறு வேற்று மைகள் வளருமாயின், அந்நிலை புதிய தமிழகம் என்ற உடலின்மேல் உண்டாகிய புண்கள் என்று கருதி, அவற்றை உடனே ஆற்றுவிடின், அவை புரை கொண்டு உடலை அரித்துத் தொலைத்துவிடும் என்னும் எண்ணம் வளரவேண்டும். நம்முடைய புதுவாழ்வு நல் வாழ்வாக அமைய வேண்டுமாயின் — இலக்கியத்தில் கவிஞர்களால் கூறப்பட்ட நாட்டையும் நாட்டு மக்களை யும் காணவேண்டுமெனின்—அரசியலாரும் சமூகத் தலைவர்களும் நாடெங்கும் கல்விக் கூடங்களை ஏற்படுத்த வேண்டும். கல்வி கற்கும் வயதுடைய எந்தச் சிறுவ னும் சிறுமியும் கற்காமல் இருத்தல் கூடாது. சாதியும் சமயமும் பொதுவாழ்வில் தனியிடம் பெறுதல் கூடாது. அரசியலாரின் செயலனைத்தும் மக்களை ஒற்றுமையுட னும் நல்வாழ்வுடனும் வாழச் செய்யும் நோக்கமும் பல னும் பெற்றவையாய் இருத்தல் வேண்டும். புதிய தமிழ கத்து மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கை அறிவு, உண்மை, அன்பு கமழ்வதாக இருக்கும்படி பார்த்துக்

கொள்ளவேண்டும். எல்லோரும் இந்த முயற்சியில் ஈடுபடும்போது சமுதாயம் தானாகவே முன்னேறிவிடும். அப்போதுதான் புதிய தமிழகம் முழுப் பொலிவுடன் அமைந்து, பிற நாடுகட்கு வழிகாட்டியாக விளங்கும் வாய்ப்பைப் பெறும்.

# 2. நடுகல்

## பழைய வழிபாடு

போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்க்குக் **கல்** எடுத்து விழாச் செய்தல் மரபு. அதுவே தமிழகத்துள் சிறப்புற்ற தெய்வ வணக்கமாக இருந்ததென்பது தொல் காப்பியர் விரிவாகக் கூறலால் நன்கு விளங்கும். (1) கற்காண்டல் (2) கால்கோள் (3) கல்லை நீர்ப்படுத் தல் (4) கல்லை நடுதல் (5) வீரன் பெயர்—செயல் முத லியவற்றைக் கல்மீது பொறித்தல் (6) கால் கொண்ட தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தல் என இக **கல் எடுப்பு விழா** ஆறுவகைப்படும் என்பர் **தொல்காப்பியர்.** நடுகல்லைப் பீலியாலும் மலராலும் அணிசெய்து, பல்லி யம் ஒலிக்க விழவுச் செய்தல் தமிழர் மரபு. இங்ஙனம் நாட்டப்படும் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புக்களும் செய்தலும் பழந் தமிழர் மரபு. இத னைச் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்த தனைக்கொண்டு விளக்கமாக அறியலாம்.

இங்ஙனம் வீரர்க்குக் கல் நட்டமை—நட்டு வழி பட் டமை பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பலவிடத்தும் பரக்கக் காணலாம்.

## பலவகைப் போர்கள்

ஒரு நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் அரசன், பகைவன் நாட்டில் உள்ள ஆனிரைகளைக் கவர்தல் வழக்கம். இம்முயற்சி **வெட்சித் திணை** எனப்படும். இம் முயற்சியில் ஈடுபடும் வீரர்கள் வெட்சிப் பூவையோ, வெட்சிப் பூ மாலையையோ அடையாளமாகக் கொள்வர்.

ஆனிரைகளுக்கு உரிய வீரர்கள் இம்முயற்சியை எதிர்த்து நிற்பர். இங்ஙனம் எதிர்த்தல் **கரந்தைத் திணை** எனப்படும். இதற்குரிய வீரர்கள் கரந்தைப் பூவையோ மாலையையோ சூடிக்கொள்வர்.

இதற்கு அடுத்தபடி, படையெடுக்க விரும்பிய அரசன் பெரும்படையுடன் பகைவர் நாட்டின்மீது செல்வான். அவனும் அவன் வீரனும் வஞ்சிப் பூவையோ, வஞ்சிப் பூமாலையையோ அணிந்துகொள்வர். இப்போர் முயற்சி **வஞ்சித் திணை** எனப்படும். இப்படையெடுப்பை எதிர்த்து நிற்றல் **காஞ்சித் திணை** எனப்படும். இதற்குரிய வீரர் காஞ்சிப் பூவையோ, காஞ்சிப் பூமாலையையோ சூடிக் கொள்வர்.

நாடு பிடிக்கவந்த மன்னனும், வீரரும் கோட்டையை முற்றுகையிடுவர். அம்முயற்சி **உழிஞைத் திணை** எனப்படும். அவர்கள் உழிஞைப் பூவையோ, உழிஞைப் பூமாலையையோ சூடிக் கொள்வர். கோட்டைக்குள் இருக்கும் அரசனும், அவன் வீரரும் கோட்டை மதில்மீதிருந்து போரிடுவர். அம்முயற்சி **நொச்சித் திணை** எனப் பெயர் பெறும். அவர்கள் நொச்சிப் பூவையோ, நொச்சிப் பூமாலையையோ அணிந்துகொள்வர்.

பரந்த வெளியில் இரு வேந்தரும் அவர்தம் வீரரும் கடும்போர் புரிவர். அது **தும்பைத் திணை** எனப்படும். அப்போது இரு திறத்தாரும் தும்பைப் பூவையோ, தும்பைப் பூமாலையையோ சூடிக்கொள்வர். இரு திறத்தாருள் ஒருவர் வெற்றிபெற வேண்டுவது இயற்கையன்றோ? அங்ஙனம் வெற்றி பெறுதல் **வாகைத் திணை** எனப் பெயர் பெறும். வெற்றி பெற்றவர் வாகைப் பூவையோ, வாகைப் பூமாலையையோ சூடிக் கொள்வர்.

சங்க காலத் தமிழர் இங்ஙனம் பல போர்கள் செய்து வந்தனர் என்பதைப் பழம் பாடல்கள் தெரிவிக்கின்றன. போரைக் குறிக்கும் ஒவ்வொரு திணைக்கும் அவர்கள் பல துறைகள் அமைத்துள்ளனர். ஒவ்வொரு துறையும் அப்போருக்குரிய ஒரு படியாகும்.

## கல் நாட்டு விழா

இப்போர்களில் தம் வீரத்தைக்காட்டி இறந்த வீரர் பாராட்டுக்குரியவராவர். ஒரு படை சிதறி ஓடு கிறது. உடனே ஒரு வீரன் தோன்றி அப்படைக்கு முன்நின்று, பகைவரைத் தாக்கி, அலைக்கழித்து, இறுதி யில் பகைவர் தாக்குதலால் மடிகிறான். இத்தகைய வீரத்தை அவனைச் சேர்ந்த அரசனும் மற்ற வீரரும் பாராட்டுவர். அவன் இறந்த இடத்தில் அல்லது அவன் உடலை எரித்த இடத்தில் அவனது வீரத்திற்கு அறிகுறி யாக ஒரு கல்லை நடுவர். அக்கல்லில் அவனது உருவம் பொறிக்கப் பெறும். அவ்வுருவத்தின்கீழ் அவன் பெய ரும் வீரச் சிறப்பும் குறிக்கப் பெறும். இங்ஙனம் நடப் பெறும் கல், முன்பு கூறியபடி நன்கு தேர்ந்தெடுக்கப்பட் டும், நீராட்டப்பட்டும் இருக்கும். அக்கல்மீது மயிற் பீலி சூட்டப்படும். கல் நடப்பட்ட அன்று அக்கல்லைச் சுற்றிலும் மேலே துணிப் பந்தர் அமைக்கப்பெறும்.

> ''உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே
> மடஞ்சால் மஞ்ஞை அணிமயில் சூட்டி
> இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
> படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே''

என்பது புறநானூறு.

## அரசர் நடுகற்கள்

போரில் விழுப்புண்பட்டு இறந்த அரசனுக்கும் இவ்வாறே கல் நடுதலும், பின்பு அதனை வழிபடுதலும் வழக்கமாகும். தகடூரை ஆண்ட **அதியமான் நெடுமா னஞ்சி** போரில் இறந்துபட்டான். அவன் நினைவாகக் கல் நடப்பட்டது. நடப்பட்ட அக்கல்லின்மீது பீலி சூட் டப்பட்டது. நாரால் அரிக்கப்பட்ட தேறல் சிறிய கல சத்தில் வைத்துப் படைக்கப்பட்டது.

*"நடுகற் பீலி சூட்டி நாரரி*
*சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ"*

என்பது புறநானூறு.

தன் மக்களோடு வேறுபட்ட கோப்பெருஞ் சோழன் அரசைத் துறந்து வடக்கிருந்து உயிர் நீத்தான். அவன் உயிர்விட்ட இடத்தில் அவன் நினைவாகக் கல் நடப்பட் டது என்பதும் புறநானூறு கூறும் செய்தியாகும். கோப் பெருஞ் சோழன் போரில் இறக்கவில்லை. ஆயினும் அவ னுக்குக் கல் நடப்பட்டது. சிறந்த ஒழுக்கமும் செங் கோன்மையும் உடைய வேந்தர்க்குக் கல் நடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்பதை இது உணர்த்து கிறது அன்றோ?

## நடுகல் வழிபாடு

தன் ஆனிரையைக் கவரும் முயற்சியில் ஒரு வீரன் முனைந்தான். வெட்சியார் தாக்கியவுடன் இவ் வீரனைச் சேர்ந்தோர் ஓடலாயினர். ஆயினும், இவன் மட்டும் வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் அணைபோலப் பகை வரை எதிர்த்து நின்று போரிட்டு இறுதியில் இறந்தான். அப்பெரு வீரனுக்குக் கல் நடப்பட்டது. வீரர்கள் அக்

கல்லை வழிபட்டு வந்தனர். அவ்வழியே செல்லும் வீர னைப் புலவர் ஒருவர் பார்த்து, மேலே கூறப்பெற்ற வீரச் செயலை அவனுக்கு விளக்கிக் கூறி, "நீ அவ்வழியே செல்வையாயின், அவனது கல்லைத் தொழாமற் செல் லாதே" என்று அறிவுறுத்தினுர். †

ஒரு பெண்ணின் குடியைச் சேர்ந்த முன்னேருள் ஒரு வீரன் நடுகல்லாக வழிபடப்பட்டான். அப்பெண் அந்நடுகல்லின் முன்பு நின்று அதற்கு வழிபாடு செய்து கைகுவித்து, "என் இல்லத்திற்கு விருந்தினர் வருவா ராக; என் கணவனது வீரம் போரில் விளங்கும்படி எம் அரசன் பகையரசனைப் பெறுவனுக," என்று வேண்டி னுள் என்று புறநானூறு புகல்கின்றது. ‡

இப்பெண்மணிக்கு விருந்து பேணும் ஆவலும், போரில் தன் கணவன் புகழ் எய்த வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தவாறு என்னே!

"பாணனே, நீ செல்லும் வழியில் மிகச் சிறந்த வீரன் கல்லாகி நிற்கின்றுன். அவன் அத்திசைக்குத் தெய்வமாய் நிற்கின்றுன். அவனைத் கைதொழுது செல் வாயாக" என்பது ஒரு பாடல்.

> "அரும்புகழ் பாடி அழுதழுது நோனு(து)
> இடும்பையுள் வைகி இருந்த—கடும்பொடு
> கைவண் குரிசில்கல் கைதொழூஉச் செல்பாண!
> தெய்வமாய் நின்றுன் திசைக்கு"
>
> —புறப்பொருள் வெண்பாமாலை

இங்ஙனம் நடுகல் பெற்ற வீரர் பலராவர். அவ்வீர ரது போர்ப் புகழைப் புலவர் பலர் உளமாரப் பாராட்டிப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் நம் தமிழகத்து மறவரது மறத்தையும் புகழையும் நன்கு எடுத்து நவில்வன வாகும்.

---

† புறநானூறு செ. 263.

‡ ,, செ. 306.

# 3 இலக்கியமும் சமையமும்

## இலக்கியம்

மக்களை நல்வழிப்படுத்துவதையே இலக்காகக் (குறிக்கோளாகக்) கொண்டது இலக்கியம் எனப்படும். அறிவு வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி முதலிய நல்ல அடிப் படைகளைப் புகுத்தவே பெரும்பாலும் இலக்கியம் தோன்றும். தொடக்கத்தில் மாறுபட்ட நெறியில் கதை கூறிச் செல்லும் இலக்கியமும், இறுதியில் ஒரு படிப்பினை பயக்கத்தகும் முறையில் முடிவு பெறுவதைக் காணலாம். எனவே, மனிதர் வாழ்வைச் செம்மைப்படுத்தும் இலக்கு ஒன்றினையே கொண்டு செய்யப்பெறுவதுதான் இலக் கியம் என்பது அறிஞர் கருத்து.

## சமையம்

'சமை' என்பது ஆக்கு, பக்குவப் படுத்து, நெறிப் படுத்து, முறைப்படுத்து முதலிய பொருள்களைத் தரும். 'சமையல்' என்பது ஆதல், பக்குவப்படுதல், நெறிப் படுதல், முறைப்படுதல் என்னும் பொருள்படுவதைக் காணலாம். 'பெண் சமைந்தாள்' என்பது பெண் வாழ்க்கைக்குப் பக்குவமடைந்தாள் என்று பொருள்படும். 'பெண் பக்குவமாகியிருக்கிருள்' என்பது கொங்கு நாட்டு வழக்கு. எனவே 'சமையம்' என்பது பக்குவப்படுதல் எனத் தொழிற்பெயராகி, சான்ருேரால் வாழ்க்கைக் கேற்ற முறையில் பக்குவப்படுத்தப்பட்ட (சமைக்கப் பட்ட) நெறிக்குத் தொழிலாகு பெயராகி அமைந்த தெனக் கொள்வதே பொருத்தமாகும்.

தொடக்கத்தில் தனித்தனி இனத்தவராக வாழ்ந்த மக்களிடம் பல்வேறு பழக்க வழக்கங்களும், வழிபாட்டு

முறைகளும் இருந்தன. அவர்கள் அனைவரும் ஒரு சமுதாய அமைப்பை அமைத்துக்கொண்டு ஒன்று கூடி வாழத் தொடங்கியபொழுது கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்த சான்ருேர் அவர்தம் பல்வேறுபட்ட பழக்க வழக்கங்களையும், வழிபாட்டு முறைகளையும் ஒரு நெறிப் படுத்தி அமைத்தனர். இங்ஙனம் நெறிப்படுத்தப்பட்டது 'சமையம்' என்று கொள்வதே அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துவதாகும்.

## எது சமையம்?

மக்களது நேர்மையான வாழ்க்கைக்குத் தேவைப் படும் கொள்கைகளின் திரட்சியும், ஒழுகலாறுகளின் திரட்சியுமே சமையம் எனப்படும் என்று விவேகானந்த அடிகள் போன்ற சான்ருேர் விளம்பியுள்ளனர். அதாவது நேர்மையான வாழ்க்கைக்கு இன்னின்ன கொள்கைகள் தேவையானவை — அக்கொள்கைகளுக்கேற்ற ஒழுகலாறுகள் இன்னவை என்று வரையறுத்துக் கூறுவதே சமையமாகும். இதனை உளங்கொண்டு நோக்கின், ஒவ்வொரு மனிதனுக்கும் சமையம் தேவை என்பது கூருதே அமையுமன்ருே? ஒவ்வொரு மனிதனும் நேர்மையான வாழ்க்கையையே வாழ விரும்புகிருன். அந்நிலையில் அவ்வாழ்க்கைக்குத் தேவையான கொள்கைகளையும் ஒழுகலாறுகளையும் பின்பற்ற வேண்டுவது அவன் கடமையாகிறது. எனவே ஒவ்வொரு மனிதனது நல்வாழ்க்கைக்கும் சமையம் உயிர்நாடியாகின்றது.

## சமையமும் இலக்கியமும்

இலக்கியம் என்பது மனிதனை நல்வழிப்படுத்துவதையே இலக்காகக் கொண்டது என்பதனை மேலே

கண்டோம். சமையம் என்பது அம்மனிதனது நல் வாழ்க்கைக்கு உயிர்நாடி என்பதனையும் கண்டோம். எனவே, அறிவிற் சிறந்த நம்முன்னோர் மனித நல்வாழ்வுக்குத் தேவையான சமைய உண்மைகளை (நல்வாழ்வுக்குத் தேவையான குறிக்கோள்களையும் ஒழுகலாறுகளையும்) கூறிச்சென்றது பொருத்தமே அன்றோ? சமையம் இல்லாமல் இலக்கியமில்லை—சமையம் இல்லாமல் நல்வாழ்க்கையும் இல்லை என்னும் இவ்விரண்டு உண்மைகளையும் நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். எனவே சங்கப் பாடல்கள் முதல் இன்றுள்ள நாட்டுப் பாடல்கள் ஈறுக உள்ள எல்லாவகை நூல்களிலும் சமையக் கருத்துக்களும் ஒழுகலாறுகளும் பின்னிக் கிடத்தலைக் காணலாம்.

## சங்க நூல்கள்

மனிதன் நெறிப்பட்டு வாழ்வதற்கு மனை வாழ்க்கை இன்றியமையாதது. மக்களைப்பெற்று மனையறம் காத்தல் மனிதன் கடமையாகும். உலகம் ஆண்மை, பெண்மை என்னும் இரண்டு ஆற்றல்களின் சேர்க்கையால்தான் இயங்குகின்றது என்னும் உண்மையை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனர். மனைவியோடு இல்லறம் நடத்தும் இடமே தீயவற்றினின்று விடுதலை பெற்றுள்ள இடம் என்னும் பொருளில் அவன் வாழும் இல்லத்தை வீடு என்று நம் முன்னோர் குறித்தனர். அத்தகைய இன்ப வாழ்வே நேர்மையான வாழ்வு என்பதை வற்புறுத்தவே சங்க காலச் சான்றோர் அகப்பொருள் பற்றிய பாக்களை மிகுதியாகப் பாடினர்.

அறம், பொருள், வீடு என்னும் மூன்றைப்பற்றிய செய்திகளையும் ஒழுகலாறுகளையும் புறப்பாடல்களில்

நம் முன்னோர் கூறிப்போந்தனர். மனிதன் பெறத்தக்க இப்பேறுகள் நெறிப்பட்ட வாழ்க்கையால்தான் எய்தற் பாலன. **நெறிப்பட்ட வாழ்க்கையே சமைய வாழ்க்கை.** எனவே சங்க நூல்களில் சமையச் செய்திகளே மிகுந்திருக்கக் காணலாம்.

மேலே கூறப்பெற்ற சமையம் என்னும் சொல்லுக்கு அமைந்த இலக்கணம் கொண்டு, திருக்குறளை ஆய்வோ மாயின், அப்பெருநூல் உலக மக்கள் அனைவர்க்கும் உரிய சமைய நூல் என்பதைத் துணிந்து கூறலாம். அதன்கண் மனிதன் வாழ்வாங்கு வாழத்தகும் நெறி முறைகள் செம்மையான முறையில் விளக்கப் பட்டுள்ளன. இன்று சமுதாயத்தில் தமிழர் அனைவரும் திருக்குறளை விரும்புகின்றனர். திருக்குறளை விரும்பும் அனைவரும் செம்மையான சமையத்தை விரும்புவோரே ஆவர். ''திருக்குறளில் எல்லாச் சமைய உண்மைகளை யும் காணலாம். எனவே இது எல்லாச் சமையத்தார்க் கும் உரிய பொதுநூல்'' என்ற மேனாட்டறிஞர் கூற்று இங்குக் கவனிக்கத்தக்கது.

## சமைய நூல்கள்

மக்களை நெறிப்படுத்துவதற்கே சமுதாயத்தில் பல சமையங்கள் சான்றோரால் தோற்றுவிக்கப்பட்டன. அவைதம்முள் சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆயி னும் அவையனைத்தும் நன்னோக்கம் கொண்டே சமைக் கப்பட்டன. ஒவ்வொரு சமையத்தையும் சேர்ந்த புலவர் பெருமக்கள் தம் சமையக் கருத்துக்களை ஆங்காங்கு விர வச் செய்து பல நூல்களைத் தமிழில் ஆக்கியுள்ளனர். அந்நூல்களிலும் எல்லா மக்களும் பின்பற்றத் தகும் உய ரிய கொள்கைகளும் ஒழுகலாறுகளும் பலவாக இருத்த

லைக் காணலாம். நெஞ்சையள்ளும் **சிலப்பதிகாரம்,** இளங்கோவடிகள் என்ற சமணத் துறவியரால் பாடப் பெற்ற பெருங் காவியமாகும். **மணிமேகலை** என்ற பௌத்த காவியம் சாத்தனுர் என்ற பௌத்த சமயப் புலவரால் பாடப்பெற்றது. இங்ஙனமே **திருமுறைகள்** சைவ சமைய குரவரால் பாடப்பெற்றவை. **திவ்யப் பிரபந்தம்** ஆழ்வார் களால் அருளப்பெற்றது.

இவ்வாறே பின்னூற்ருண்டுகளிலும் சமையச் சார்பு கொண்ட சிந்தாமணியும் (சமணம்), பெரிய புராணம் (சைவம்), கம்ப ராமாயணம் (வைணவம்), தேம்பா வணி (கிறித்துவம்), சீருப்புராணம் (இசுலாம்) முதலி யவை தோன்றின. இங்ஙனமே சமைய அடிப்படை யைக்கொண்டே காஞ்சிப் புராணம் முதலிய தல புரா ணங்கள் தோன்றின; உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், அந்தாதி, பலமணிமாலைகள், குறம், பள்ளு முதலிய சிறு நூல்களும் தோற்றமளித்தன.

## இலக்கியத்தைப் பயன்படுத்தும் முறை

சைவம் வைணவம் முதலிய சமையங்களையே சார்ந்த நூல்களாயினும், எச்சமையத்தையும் சாராத சங்கத் தொகை நூல்களாயினும் — இவையனைத்தும் மனிதனது வாழ்க்கையையே நெறிப்படுத்தும் நோக்கத் தால் எழுந்தவை. எனவே இவற்றை எல்லாச் சமையத் தவரும் படித்துணர்வது பொருத்தமாகும். தம் சமையக் கருத்துக்களினின்றும், ஒழுகலாறுகளினின்றும் வேறு படும் அல்லது முரண்படும் கருத்துக்களையும் ஒழுகலாறு களையும் மறந்து, பொதுநோக்கிற் செல்லும்கருத்துக்களை யும் ஒழுகலாறுகளையும் அனைவரும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா? ஆகவே இசுலாமிய இலக்கியத்தையோ

கிறித்துவ இலக்கியத்தையோ பிற சமையத்தார் நன்கு படித்துச் சுவைக்கலாம். இவ்வாறே ஒவ்வொரு சமையத்தாரும் பிற சமையச் சார்புடைய இலக்கியத்தைப் பொது நோக்கக் கண்கொண்டு கற்றுப் பயன்பெறலாம். சுருங்கக்கூறின், சமையம் இன்னது என்று அதன் உண்மைப் பொருளைக் கண்டு உணர்ந்தவர் எல்லாச் சமைய நூல்களையும் தமக்கு உறுதி பயக்கும் நூல்களாகவே கருதி மகிழ்வர் எனலாம். அத்தகைய தூய மனப்பான்மையே சமையப் பூசல்களை ஒழித்துச் சமைய ஒற்றுமையை உண்டாக்கி இலக்கியச் சுவையை உணரும் விரிந்த மனப்பான்மையை உண்டாக்கவல்லது.

# 4. புதிய தமிழகம்

## வட எல்லை

அடுத்தாற்போல் அமையவிருக்கும் புதிய தமிழகமே† தமிழர் வாழ்க்கைக்குகந்த வளமான நாடாகும். "வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்ற பனம்பாரனார் பாயிரத்திற் கண்ட படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தின் வடஎல்லை வேங்கடமாக இருந்தது. அன்று முதல் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு வரையில்—வெள்ளையர் ஆட்சி ஏற்படும் வரையில் வேங்கடமே வடஎல்லை என்பதைத் தமிழ் இலக்கியங்களும் திருப்பதியில் உள்ள எண்ணிறந்த கல்வெட்டுக்களும் வடமொழி இலக்கியமும் வலியுறுத்துகின்றன. விசயநகர ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும் உண்டான பாமினி சுல்தான்களின் படையெடுப்பினால் அலைக்கழிக்கப்பட்ட தெலுங்கு மக்கள் திருப்பதி, திருத்தணிகை, காளத்தி, சித்தூர் முதலிய இடங்களிற் குடியேறினரே தவிர, அப்பகுதி முழுவதும் தமிழ் நாட்டைச் சேர்ந்ததே என்பதற்கு ஆங்காங்குள்ள கல் வெட்டுக்களே ஏற்ற சான்றாக இன்றளவும் அமைந்துள்ளன. ஆதலின் எக்காரணம் கொண்டும் வேங்கடம் வரையில் உள்ள தமிழ் நிலத்தினைத் தமிழகத்தோடு சேர்த்தே தீர வேண்டும். இத்துறையில் முழு உணர்ச்சியுடன் போராடி வரும் நண்பர் சிவஞானம் அவர்களையும் அவர்தம் குழுவினரையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

---

† தமிழகம் அமைவதற்கு முன்பு இது எழுதப்பட்டது.

## தென்மேற்குப் பகுதிகள்

பண்டைத் தமிழகத்தின் தெற்கெல்லை குமரி முனை. அது சில நூற்றாண்டுகளாகச் சேர நாட்டுடன் சேர்ந்திருந்தது. அப்பகுதி முழுவதிலும் தமிழ் மக்களே வாழ்கின்றனர் என்பது நாடறிந்த உண்மை. அவ்வாறே தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் என்பவையும் தமிழ் மக்களே மிகுந்துள்ள இடங்களாகும். இப்பகுதிகளிலிருந்து திருவாங்கூர்ச் சட்ட சபைக்குத் தமிழரே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதிலிருந்தும், அப்பகுதிகள் தமிழரை மிகுதியாகக்கொண்ட பகுதிகளே என்பதைச் சாதாரண அறிவுடைய மக்களும் எளிதில் அறிந்து கொள்ளலாம். எனவே, தெற்கிலும் மேற்கிலும் உள்ள இப்பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டுவதே நேர்மையாகும். இவை அனைத்தும் சேர்ந்த ஒன்றே புதிய தமிழகம்.

## தமிழக வரலாறு

'வடவேங்கடம் தென்குமரி' என்ற அளவில் தமிழகம் அமைந்துவிடுதல் போதாது. அத்தமிழகத்துக்குரிய பண்புகளும் குடிமக்களிடம் அமைதல் வேண்டும்; குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினரிடமும் அமைதல் வேண்டும். நாட்டு நலத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவ்வுறுப்பினர்கள் சங்க நூல்களில் காணப்படும் பண்டைத் தமிழக வரலாற்றையும் சமுதாய அமைப்பையும் அறிதல் நலம். இடைக்கால வரலாற்றையும், அக்காலச் சமுதாய கேடுகளையும், அக்கேடுகள் நிகழ இருந்த காரணங்களையும் அறிதல் இன்றியமையாதது. இவற்றை வரலாற்று முறையிலும் மொழி அமைதியிலும் சமுதாய உணர்ச்சியிலும் அறிவார்

களாயின், இந்நாட்டுக்குரிய நற்பணிகளைப் பிறர் கூறு மலே தாமே மேற்கொள்ள வசதி ஏற்படும்.

சங்க காலத்தில் தாய்மொழிப் பற்றும் மான வுணர்ச்சியும் வீர வுணர்ச்சியும் தமிழரிடம் மிக்கிருந்தன. இன்றுள்ள பல நூறு சாதிகள் அக்காலத்தில் இல்லை. குடிகள் ஒரு தாய் ஈன்ற மக்களாக மன ஒற்றுமையோடு வாழ்ந்தனர். எல்லோரும் கல்வி கற்றிருந்தனர். இந்தியாவின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட அசோகன் காலத்திலும் தமிழ்மக்கள் தம்மாட்சி பெற்று விளங்கினர் என்பதை அசோகன் கல்வெட்டுக்களாலேயே அறியலாம். இத்தகைய தமிழகம் நாளடைவில் பிறர் நுழைவால் மொழிவளம் குன்றி ஒற்றுமையிழந்து சமைய வெள்ளத்தில் ஆழ்ந்து கரையேற முடியாமல் தவித்தது. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. பிறராட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. பிறருடைய எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் தமிழர் அடிமைகளாயினர். சமுதாயத்தில் எண்ணிறந்த சாதிப் பிரிவுகள், ஒருவரை ஒருவர் அழுத்தல், சாதிக் கொடுமைகள் சமையக் கொடுமைகள் எனப் பல தீமைகள் தோன்றித் தோன்றிக் களிநடம் புரிந்தன. இக்கேடுகளே இந்நாட்டில் இஸ்லாத்தையும் கிறித்தவத்தையும் ஊட்டி வளர்த்தன.

## மறுமலர்ச்சி

நாம் செய்த நல்வினைப் பயனால் உலக அறிவு வளரத்தக்க ஆங்கில ஆட்சி ஏற்பட்டது. ஆங்கிலம் கற்ற பலபேர் உலகத்தையும் தம்மையும் அறியலாயினர். தம் மொழியின் பழைமையும் சிறப்பும் தம் இலக்கியப் பெருமையும் உணரத் தொடங்கினர். புலவர் கல்லூரி

கள் தோற்றமெடுத்தன. எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாய பாடமாக்கப்பட்டது.

தாய் மொழியின் வளத்தைத் தமிழர் அறியத் தொடங்கியதும் அதன் தூய்மையையும் பழைமையையும் காக்க முனைந்துள்ளனர். அம்மொழி வழங்கும் நாட்டையும் பாதுகாத்து முன்னணிக்குக் கொண்டுவர முயலுகின்றனர்.

## வளர்ச்சிக்குரிய வழிகள்

தமிழகத்து ஆட்சி தமிழிலேயே இயங்கவேண்டும். எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஆங்கிலம் ஒழிந்த எல்லாப்பாடங்களையும் தமிழில் கற்பித்தல் வேண்டும். இத்துறையில் மிகுந்த ஊக்கம் கொண்டு உழைக்கும் முதலமைச்சர் காமராசரையும் கல்வியமைச்சரையும் நாம் உளமாரப் பாராட்டுகின்றோம். இப்பெருமக்கள் தமிழக வரலாற்றில் இடம் பெறுதல் உறுதி. எல்லா மக்களும் கல்வி கற்கவேண்டும் என்னும் சீரிய கருத்தால் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க முன்வந்த **காமராசருக்குத்** தமிழ் மக்கள் வாழ்த்து உரியதாகும். சமுதாயத்தில் ஒரு பாதி பெண் மக்கள். அவர்களுக்கெனப் பல பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் அப்பள்ளிகளில் தமிழ்ப்பணி ஆற்றப் பெண் புலவர்கள் வேண்டுமல்லவா? அவர்களைத் தயாரிக்கும் **பெண்பாற்** புலவர் கல்லூரி ஒன்றுகூடத் தமிழகத்தில் இல்லை என்பதை மிக்க வருத்தத்தோடு தெரிவிக்கவேண்டுபவரா யிருக்கின்றோம். பெண்களுக்கென்று உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் இருக்கின்ற இத் தமிழகத்தில் - ஆண்பாற் புலவர்களைத் தோற்றுவிக்கப் பல கல்லூரிகள் உள்ள இத்தமிழகத்தில் - பெண்பாற் புலவர்களை உண்டாக்க ஒரு கல்லூரியும் இல்லையென்பது வெட்கப்படத்தக்கதன்றோ?

தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் உள்ள அரசாங்கம் உடனே இதனைக் கவனிக்க வேண்டுகின்றோம். அடுத்த ஆண்டில் சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் பெண்களுக்குப் புலவர் கல்லூரிகள் நிறுவும்படி அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டு வரலாறு சாத்திரீய ஆராய்ச்சிக்கு உட்பட்ட முறையில் செவ்வையாக இதுகாறும் எழுதப்படவில்லை. இது வரலாற்று ஆசிரியரும் ஆராய்ச்சிப் புலமை மிகுந்த தமிழ்ப் பேராசிரியரும் கலந்து செய்ய வேண்டும் பணியாகும். இதற்கென ஒரு துறையை அரசாங்கம் வகுத்துச் சில ஆண்டுகளுள் இப்பணியை முற்றுப்பெறச் செய்வித்தல் நல்லது.

பாடல் பெற்ற பழம் பதிகளின் பெயர்கள் மீண்டும் வழக்கில் வரும்படி செய்வது தமிழ் அரசாங்கத்தின் கடமையாகும். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்" என்ற பாரதியார் பொன்னுரையை நடைமுறைக்குக் கொண்டுவரத்தக்க முறையில் நகராண்மைக் கழகங்கள் செயலாற்றலில் இறங்க வேண்டும் என்று அரசாங்கம் சுற்றறிக்கை விடுதல் நல்லது. அறங்கூறவையங்களில் தமிழ் மக்கள் திருக்குறளை வைத்தே உறுதி கூறவேண்டும் என்னும் நிலைமை ஏற்படுதல் வேண்டும். தமிழ் நாட்டில் இருந்து மறைந்த காவிரிப் பூம்பட்டினம், கொற்கை, உறையூர் முதலிய பண்டைப் பெருநகரங்களை அகழ்ந்து ஆராய்ச்சி நடத்த இந்திய அரசாங்கத்தைத் தமிழக அரசாங்கம் தூண்டுதல் வேண்டும்.

## முடிவுரை

விஞ்ஞான மனப்பான்மையை ஊட்டி வளர்க்கும் முறையில் அமைந்த பாட நூல்களையே பிள்ளைகள்

படிக்கும்படி செய்தல் வேண்டும். உலக நாடுகளோடு தன் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் குறைகளை நிறை வாக்கும் மனப்பாங்கு வளரும்படியான முறையில் கல்வி அளிக்கப்படல் வேண்டும். அறிவுக்குப் பொருத்தமற்ற வைகளும் கேட்டு நகைக்கத் தக்கவையுமான ஆபாசக் கதைகளைச் சமயத்தின் பெயராலும் பிறவற்றின் பெயரா லும் புகுத்தாமல், கடவுள் பற்றும் நல்லொழுக்கமும் சமு தாய வளர்ச்சியில் நாட்டமும் ஊட்டத்தக்க கல்வியை ஏற்ற திட்டங்கொண்டு, நடைமுறைக்குக் கொண்டு வருதல் வேண்டும். இங்ஙனம் ஒவ்வொரு துறையிலும் தமிழ்வளம் சிறக்க அரசாங்கம் உள்ளக் கிளர்ச்சியுடன் வேலைசெய்யின், புதிய தமிழகம் உருப்பெறும்.

# 5. தமிழ் வளர வழிகள்

## முன்னுரை

தமிழ் நமது தாய்மொழி. ஈன்ற தாயைப்போற்றுதல் மக்களது கடமை. அதுபோலவே நமது பிறப்பு முதல் இறப்பு வரையில் நமக்கு உறுதுணையாக இருந்து நம்மை வாழச் செய்யும் மொழியைக் காப்பதும் வாழ்விக்கச் செய்வதும் தமிழராகிய நமது கடமை.

## பேச்சுத் தமிழ்

இற்றைத் தமிழரது வாழ்வில் தமிழ் எவ்வாறு இருக்கின்றது? ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு பேசும் போது பெரும்பாலும் பிறமொழிச் சொற்களைக் கலந்தே பேசுவதைக் காண்கின்றோம். "டிபன் ஆய்விட்டதா? உங்களுக்கு விவாகம் எப்பொழுது? நாஷ்டா ஆய்விட்டதா?" என்று பேசுவதைக் கேட்கின்றோம். இப் பிற மொழிச் சொற்கள் நம் மொழியிற் கலந்து தமிழ் நடையைக் கெடுத்துவிடுகின்றன. "சிற்றுண்டி" என்னும் தூய தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக "டிபன்" (Tiffin) என்னும் ஆங்கிலச் சொல்லையோ, "நாஷ்டா" என்னும் உருதுச் சொல்லையோ பேச்சு வழக்கில் பயன்படுத்தலால், சிற்றுண்டி என்னும் சொல்லின் தமிழ் வழக்கு நாளடைவில் ஒழிந்துவிடுகின்றது. இவ்வாறே "திருமணம்" என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக "விவாகம்" என்னும் வடமொழிச் சொல்லையோ, "மாரேஜ்" (marriage) என்னும் ஆங்கிலச் சொல்லையோ பயன்படுத்தலால், திருமணம் என்ற சொல் நாளடைவில் வழக்கு ஒழிந்துவிடும். நம் வீட்டுக் கத்தியைப் பயன்படுத்தத் தவறி, எதிர் வீட்டுக் கத்தியையோ

பக்கத்துவீட்டுக் கத்தியையோ பயன்படுத்தலால், நமது கத்தி பயன்பட வகையின்றித் துருப்பிடித்து நாளடைவில் கெட்டொழிதலைக் காண்கிறோம். இவ்வாறு பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதில் தலைசிறந்தவர் தமிழரே ஆவர். மொழிக்கொலை புரிவதில் முதற் பரிசு பெறத்தக்கவர் நம் தமிழரே ஆவர்.

சிலர் ஒருவரையொருவர் காணும்போது வணக்கம் என்கின்றனர். ஆனால் பலர் "நமஸ்காரம்" என்றும், "நமஸ்தே" என்றும், "வந்தனம்" என்றும் சொல்லுகின்றனர். வணக்கம் என்பது தமிழ்ச்சொல்; ஏனையவை மூன்றும் தமிழ்ச் சொற்களல்ல. அங்ஙனமிருந்தும் படித்த தமிழருள் பலரும் பிடிவாதமாகப் பிறமொழிச் சொற்களையே பேசி வருகின்றனர்; வணக்கம் என்று கூறும் தமிழரைப் பிறமொழிகளை வெறுப்பவர் என்றும் ஏசுகின்றனர். இவர்களுக்குக் கடுகளவாவது தாய்மொழிப் பற்று இருக்குமாயின், இங்ஙனம் ஏசுவரோ? எண்ணிப் பாருங்கள். இவ்வாறு மக்களது பேச்சு வழக்கில் பிறமொழிச் சொற்கள் பல புகுந்து நிலைபெற்றுவிட்டன; சில நிலைபெற முயலுகின்றன.

பேச்சுத் தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படை. ஆதலால் நமது பேச்சுத் தமிழ் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் எழுதும் தமிழ் நல்ல தமிழ் நடையில் இருக்கமுடியும். இவ்வுண்மையைத் தமிழ் மக்கள் நன்கு நினைவிற்கொண்டு, தமது பேச்சுத் தமிழைத் திருத்திக்கொள்ளுதல் நல்லது.

**செய்தித் தாள்கள்**

நம் தமிழ் நாட்டுச் செய்தித் தாள்களில் தமிழ்ப் புலமையுடையார் பெரும்பாலும் இல்லையென்றே கூற

லாம். அதனாலும், நல்ல தமிழை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் இன்மையாலும், மிகப் பலவாகிய பிற மொழிச் சொற்களைக் கலந்து தமிழ் எழுதி வருகிறார்கள். இவற்றைத் "தமிழ்ச் செய்தித் தாள்கள்" என்று கூறு வதற்குப் பதிலாக "கலப்பு மொழிச் செய்தித் தாள்கள்" என்று கூறுதலே பொருந்தும். இவ்வாறு செய்தித் தாள் களில் மொழிக்கொலை புரிவோர் வேற்று நாட்டவரல்லர், வேறு மொழி பேசும் அயலாரல்லர், தமிழகத்தில் பிறந்து தமிழிலேயே பேசிவரும் மக்களாவர் என்பதை வெட்கத் துடன் கூறவேண்டுபவராக இருக்கின்றோம். இவர்கள் இத் தமிழ்க்கொலையுடன் நில்லாது, நல்ல தமிழில் எழுது வோரைப் பிறமொழி வெறுப்பாளர் எனக் கூறுதலும், பிறமொழிச் சொற்கள் கலந்தால்தான் தமிழ் வளரும் எனக் கூறுதலும் வியப்பினும் வியப்பு! இத்தகைய தமிழ் இதழ்களின் இழிந்த நடைப்போக்கு, படிப்பவர் உள்ளங் களில் நாளடைவில் வளர்ந்து நல்ல தமிழைக் கெடுத்து விடுகின்றது. ஆதலால் தாய்மொழி வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் கவலைகொண்ட தமிழ் மக்கள் இக்கலப்பு மொழிச் செய்தித் தாள்களை வெறுத்து ஒதுக்குவாராயின், அவற்றின் நடை திருத்தப்படும்; அல்லது அத்தாள்களே அழிந்தொழியும். எனவே, தமிழ் வளர்ச்சிக்கோ, அல்லது கேட்டிற்கோ பொதுமக்களே பொறுப்பாளி களாவர். தமிழ்க்கொலை புரிவோருக்குத் தக்க பாடங் கற்பித்தல் தமிழ்ப் பொதுமக்களின் கடமையாகும்.

**தமிழாசிரியர்கள்**

தமிழில் பேசித் தமிழ் கற்பிப்பதையே அலுவலாகக் கொண்டு தமிழால் வாழ்க்கை நடத்தும் தமிழாசிரியர் சிலர், தம்மிடம் கற்கும் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பற்றை ஊட்டுவதில்லை. "தமிழில் என்னடா இருக்கிறது? எல்லாம்

பிறமொழிகளில்தான் இருக்கின்றன" என்று கூறுதலையே தாம் பிறவியெடுத்ததின் பயனாகக் கருதுகின்றனர். இவர்கள் தங்களைத் தமிழ் மக்கள் என்று வெட்கமின்றிக் கூறிக்கொள்கின்றனர். இவர்கள் தமிழுக்கு மட்டும் பகைவரல்லர்; தமிழினத்திற்கே பகைவராவர். இவர்கள் அறிவு பெறும் நாள் எப்பொழுது வரும்?

## ஆட்சி மன்றங்கள்

நகரவைகளிலும் ஊராட்சி மன்றங்களிலும் இருப்பவர் அனைவரும் தமிழரே. அவர்கள் தெருக்களுக்குப் பெயரிடும்பொழுது, இளங்கோ தெரு, வள்ளுவர் தெரு, கம்பர் தெரு, சேக்கிழார் தெரு, ஔவையார் தெரு, எனத் தமிழ்ப் புலவர் பெயர்களை வைத்து வழங்கலாம். ஆனால் இந் நினைவு பெரும்பாலோருக்கு இல்லை. தமிழறிவும் தமிழுணர்ச்சியும் இவர்களிடம் குடிகொள்ளின் தமிழகம் சிறக்குமன்றோ? இவர்கள் மேற்பார்வையில் உரிமைபெற்று நடைபெறும் உணவு விடுதிகட்கும் சிற்றுண்டி விடுதிகட்கும் பிறவற்றிற்கும் தமிழ்ப் பெயர்கள் இட்டு வழங்கும்படி செய்யலாம். காபி கிளப், மிலிடேரி ஓட்டல் போன்ற பெயர்கள் சிற்றுண்டி விடுதி என்று மாற்றப்படல் வேண்டும். புலாலுணவு விடுதிக்கு மறுதலையாகச் "சைவாள் ஹோட்டல்" என்று எழுதுதல் தவறு. ஏனெனில் 'சைவம்' என்ற சொல் சமயத்தைக் குறிப்பதே அன்றி மரக்கறியுணவைக் குறியாது. பன்றி வேட்டை ஆடிய கண்ணப்பர் சைவர் என்பதை அறிக.

சாதிகள் ஒழியவேண்டும் என்று குடியரசுத் தலைவர் முதல் குப்பை யள்ளுபவன் ஈருக உள்ள அனைவரும் பேசிவருகின்ற இக்காலத்தில், 'பிராமணாள் காபி கிளப்' என்று சாதியைக் குறிக்கும் விளம்பரப் பலகைகள் இருத்தல் மிகவும் இழிவாகுமல்லவா? 'பிராமணர்' என்ற

சொல்லாவது சரியாக எழுதப்படுகிறதா? சில பலகை களில், 'பிருமணுள்' என்று எழுதப்பட்டிருத்தல், தமிழ் வளர்ச்சியில் நமக்குள்ள பொறுப்பின்மையைக் காட்டுகின்றதன்றோ? இப் பிழைகளையெல்லாம் ஆட்சி மன்றத்தார் மனம் வைத்தால் அறவே நீக்கிவிடலாம். ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலும் தமிழ்ப் புலவர் ஒரு வரை அமர்த்தி, இப்பிழைகளை நீக்குமாறு செய்வது நல்லது.

## அச்சகங்கள்

நாடகம், படக்காட்சி முதலியனபற்றி வெளியிடப் படும் துண்டுத்தாள்களை அச்சிடும் அச்சகங்களில் தமிழ்ப் புலவர் இருப்பாராயின், அத்தாள்கள் நல்ல தமிழில் வெளிவருதல் கூடும். அவை பொது மக்களிடையே நல்ல தமிழைப் பரப்பும் ஆற்றல் பெறும். அச் சகங்களில் அச்சிடப்படும் தமிழ் நூல்களும் பிழையின்றி வெளி வருதல் இயலும். பொது மக்களிடம் தமிழைப் பரப்பும் கடமைபூண்டுள்ள அச்சகங்கள் இத்துறையில் கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

## நூலாசிரியர்

'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்பதுபோன்ற நிலையில், எவர் வேண்டுமாயினும் தமிழ் நூல்களை எழுத லாம் என்னும் நிலை இன்றைய தமிழகத்தில் காணப்படு கின்றது. ஒரு குறிப்பிட்ட துறையில் வல்லவராய் இருப் பவர்க்குப் பிழையற்ற தமிழ் எழுதப் புலமை இல்லை; பிழையற்ற தமிழ் எழுதத் தெரிந்தவர்க்கு அக்குறிப் பிட்ட பொருளறிவு இல்லை. இந்நிலையில் பொருளறிவும் மொழியறிவும் உடையார் இருவரும் நூலைச் செப்பனிட்டு வெளியிடுதலே மொழி வளர்ச்சிக்கு ஏற்றதாகும். இம் முறையில் அரசாங்கக் கல்வித்துறை கருத்துச் செலுத்தா

திருப்பது பெரிதும் வருந்தத் தக்கது. இவ்வாறே எவர் எந்த நூல் எழுதினுலும், கலவை மொழியில் எழுதாமல் தமிழ்மொழியில் எழுதல் வேண்டும் என்ற வற்புறுத்தலை அரசாங்கம் விதித்தாற்ருன் தமிழ் நடை வளர்ச்சியுறும்; பாதுகாப்பும் பெறும்.

## முடிவுரை

உண்மையில் தமிழ் வளர வேண்டுமாயின், மேற்சொன்ன திருத்தங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படல் வேண்டும். தமிழரது வாழ்வுக்கு உயிர்நாடியாக உள்ள திருமணம், கோயில் வழிபாடு முதலியன தமிழ் மொழியில் நடைபெறுதல் வேண்டும். சுருங்கக் கூறின், தமிழன் தனது வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் தமிழை வளர்த்தல் வேண்டும். அதன் தனித் தன்மையைப் பாதுகாத்தல் வேண்டும். இங்ஙனம் இவற்றைச் செய்யத் தமிழ் மக்கள் முற்படும் நாளே தமிழ் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உரிய நன்னுளாகும்.

# 6. திருக்குறள்

திருக்குறள் இன்றைய உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற நூல். நமது இந்தியாவில் இந்தி, வங்காளி, தெலுங்கு முதலிய மொழிகளிலும், வெளி நாடுகளில் ஆங்கிலம், செருமானியம், பிரெஞ்சு முதலியமொழிகளிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்நூல் மக்கள் இனத்துக்கே பொது நூலாக விளங்குகின்றது. இத் தகைய ஈடும் எடுப்புமற்ற பெருநூல் எழுதப்பட்ட காலத்தை அறிதல் மிகவும் இன்றியமையாதது அன்றோ?

திருக்குறளில், வட மொழியில் வரையப்பட்டுள்ள தர்ம சாத்திரங்களைக் கொண்டு அறத்துப் பாலும், சாணக்கியர் வரைந்த அர்த்த சாத்திரத்தைக் கொண்டு பொருட்பாலும், வாத்சாயனர் வரைந்த காம சூத்திரங்களைக் கொண்டு காமத்துப் பாலும் வரையப்பட்டன என்று, சில ஒப்புமைப் பகுதிகளைக் காட்டி ஒரு சார் அறிஞர் கூறுவர். அவர்கள் குறிக்கும் நூல்கள் அனைத்தையும் நடுவு நிலை நின்று ஆராயின்,

> "வள்ளுவர்செய் திருக்குறளை
> மறுவறநன் குணர்ந்தோர்கள்
> உள்ளுவரோ மனுவாதி
> ஒருகுலத்துக் கொருநீதி"

என்னும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் செய்யுள் அடிகளே நினைவுக்கு வருகின்றன. 'பொய் புகலுதல் ஆகாது' என்பதும், உயிர்கள் ஆண், பெண் என்னும் இரு பிரிவின என்பதும், எந்த நாட்டாரும்—எந்த மொழியினரும் ஒப்புக்கொண்ட உண்மைகள். இத் தகைய உண்மைகள் சில எம்மொழி நூல்களிலும் இருத்

தல் கண்கூடு. இவை பொதுப் பண்புகள் என்பதை அறிந்தும், ஒருசார் அறிஞர் இவற்றிலிருந்து அவை வந்தன என்றும், அவற்றிலிருந்து இவை வந்தன என்றும் கூறுதல் அழிவழக்காகும். ஆதலின் அத்தகையோர் கூற்றை விடுத்து, வட நூலோரின் காலத்தைக்கொண்டு திருவள்ளுவரின் காலத்தை முடிவு கட்டாது, தமிழ் நூற் சான்று கொண்டே வள்ளுவர் காலத்தை வரையறை செய்வது சாத்திரீய ஆராய்ச்சியின்பாற்படும்.

புறநானூறு முதலிய சங்க நூல்களில் திருக்குறட் சொற்களும் தொடர்களும் காணப்படினும், சிலப்பதிகாரத்தோடு இணைந்துள்ள மணிமேகலை என்னும் காவியத்தில்தான் ஒரு திருக்குறள் முழுமையும் அப்படியே வைத்து ஆளப்பட்டுள்ளது. அது,

> "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை" என்ற அப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"

என்பது. இம் மணிமேகலை அடிகளில்,

> "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற திருக்குறள் அப்படியே ஆளப்பட்டிருத்தலைக் காண்க.

இனி இக்குறள் மணிமேகலையில் எடுத்தாளப்பட்டுள்ள சந்தர்ப்பம் கவனிக்கத்தக்கது. சங்க காலச் சோழ அரசருள் புகழ்பெற்ற கரிகால் வளவனுக்கும் மிக முற்பட்ட ககந்தன் காலத்தில், மருதி என்னும் பார்ப்பனி காவிரியாற்றில் நீராடித் தனியே சென்றுள். அவளைக் ககந்தன் மகன் வேட்கைக் குறிப்புடன் நோக்கினுன். மாருதி அச்சம்கொண்டு அந்நகரில் ,கோயில் கொண்டிருந்த—குற்றம் செய்தாரைத் தண்டிக்கும்—சதுக்க பூதத்

திடம் சென்று முறையிட்டாள். அதற்கு அப்பூதம் அளித்த விடையே முன்சொன்ன மூன்று அடிகள். ஒரு சாதாரண பார்ப்பனப் பெண்ணுன மருதி என்பவள் இத்திருக்குறளின் கருத்தை அறிந்திருத்தல் வேண்டும் என்று சதுக்கபூதம் எதிர்பார்த்தது என்பது சாத்தனுர் கருத்தாதல் தெளியலாம். இவ்வாறு ககந்தன் காலத் திலேயே திருக்குறள் சாதாரண மக்களாலேயும் அறியத் தக்க நிலையில் இருந்தது என்பதைத் சாத்தனுர் சதுக்க பூதத்தின் வாயிலாக நமக்கு உணர்த்தும் திறன் வியந்து பாராட்டற்குரியதன்ரே! இங்ஙனம் சாத்தனுர் உணர்த் துவது உண்மை என்பதை மணிமேகலைக்கு முற்பட்ட எட்டுத் தொகை பத்துப்பாட்டு முதலிய நூல்களி லுள்ள குறட்சொற்களையும் தொடர்களையும் கொண்டு நன்கு அறியலாம். மணிமேகலையின் காலம் ஏறக்குறை யக் கி.பி. 2 ஆம் நூற்ருண்டெனக் கூறலாம். கரிகாலன் காலம் கி.மு. முதல் அல்லது கி.பி. முதல் நூற்ருண் டெனச் சொல்லலாம். அக்கரிகாலனுக்கும் முற்பட்ட ககந்தன் காலம் ஐயத்திற்கு இடமின்றிக் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்ருண்டாகக் கூறுதல் பொருந் தும்.

## திருக்குறளும் உரையாசிரியரும்

ஒரு நூலின் உரையை நம்புவதற்கு முன் உரையா சிரியர் காலத்தையும் நூலாசிரியர் காலத்தையும் இவ் விரு காலங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட நாட்டு நடப்புக்களையும் அறிந்துகொள்ளுதல் உண்மை உரையைக் காணப் பெருந்துணை செய்வதாகும். திரு வள்ளுவர் காலம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்பதை மேலே கண்டோம் அல்லவா? புகழ்பெற்ற உரையாசிரியராகிய பரிமேலழகரது காலம்

கி.பி. 13-ஆம் நூற்றுண்டெனக் கூறலாம். அதாவது நூலாசிரியர்க்கும் உரையாசிரியர்க்கும் இடையில் ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு அல்லது நானூறு ஆண்டுகள் கழிந்தன என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. இப்பரந்துபட்ட காலத்தின் நடப்புக்களை அடுத்து ஆராய்தல் வேண்டும். இக்காலத்தேதான் பக்தி மார்க்கம் யாண்டும் பரவி, தமிழகத்தில் நூற்றுக்கணக்கான கோவில்கள் தோற்றமெடுத்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி மறைந்தனர். சமய சாத்திரங்கள் பெருகின. வள்ளுவர் காலத்தில் சாதியையே அறியாத தமிழ் இனம் பல்வேறு சாதிகளாகப் பிரிக்கப்பட்டது. வடவரது கூட்டுறவு மிகுதியால் பண்டைத் தமிழர் பழக்கவழக்கங்கள் மாற்றமடைந்தன. புராண இதிகாசக் கதைகள் நாட்டில் மலிந்தன. மநு தர்ம சாத்திரம் போன்ற வடமொழி நூல்கள் தமிழகத்தில் வழக்குப்பெற்றன. இங்ஙனம் பெருமாற்றங்கள் ஏற்பட்ட பின்னர்த் தோன்றிய பரிமேலழகர், இப் பெருமாற்றங்கட்கு முற்பட வாழ்ந்த திருவள்ளுவர் செய்த திருக்குறளுக்கு உரை காண்கையில், தம் காலத்திலிருந்த நூல்களையும், நாட்டு நடப்புகளையும், ஆட்சி முறையையுமே பின்பற்ற வேண்டிய நிலையில் இருந்தனர். இக் காரணத்தாற்ருன், அரும்பாடுபட்டு அவர் எழுதிய பேருரை பல இடங்களில் பொருத்தமற்றதாயிற்று. சான்று ஒன்று காண்க:-

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்னும் குறளில் உள்ள "தென்புலத்தார்" என்னும் சொல்லுக்குப் 'பிதிரர்' எனப் பொருள் கூறிப் 'பிதிரராவார்—படைப்புக் காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின் 'தென் புலத்தாரென்ருர்' எனப் பொருள் விரித்தார்.

பிதிரர் என்போர் பல்வேறு காலங்களில் இறந்துப்பட்ட நம் மூதாதையர் என்று நாம் கருதி அவர்கட்கு மாதந் தோறும் 'மாசியம்'' ஆண்டுதோறும் 'திவசம்'.முதலியன செய்து வருதல் எத்துணைப் பொருந்தாச் செயல் என் பதை இவ்வுரை தெளிவுறச் சுட்டுகின்றது என்பதைக் காண்க. படைப்புக் காலத்திலேயே அயனுற் படைக் கப்பட்ட கடவுட் சாதியை இறந்துபட்ட நம் முன்னேர் எனக் கருதுதல் பொருந்துமா? 'தென் புலத்தார்' பரி மேலழகர் கூறுகின்ற கட்வுட் சாதியா? அல்லது இறந்த நம் முன்னேரா? அல்லது தமிழகத்தின் தெற்கே இருந்த கடல்கொண்ட குமரி நாட்டில் வாழ்ந்த நம் முன்னேரா? திருவள்ளுவர் தென்புலத்தார் என்று எவரைக் குறிக் கின்ருர்? இதற்கு அறிஞர் விடை காணுதல் இன்றியமை யாதது.

## நூலாசிரியரின் நுண்ணறிவு

திருக்குறட் பாக்களை ஊன்றிப் படித்துக் கொண்டே போவோமாயின், ஆசிரியர் வாழ்க்கையின் பல அனுப வங்களையும் நுண்ணிதாக ஆய்ந்து உணர்ந்தவர் என் பதையும், மிகச் சிறிய பொருளையும் கூர்ந்து கவனித்து அதன் இயல்பை நன்கு அறிந்தவர் என்பதையும் நாம் நன்கு அறியலாம். செய்யுட் கருத்துக்களைவிடுத்து, அவர் எடுத்தாளும் உவமைகளை நோக்கினும் இவ்வுண்மை புலனுகும். சான்ருகஒன்று காண்மின் :

ஒழுக்கத்தினின்றும் தவறியவர்களின் நிலைமையை உணர்த்த திருவள்ளுவர் ஒரு உவமை தருகிருர். தலை மயிர் தலையில் இருக்கும்வரையில் அது அடையும் மேன் மையையும், அது தலையினின்று கீழே விழுந்தபின் புறக் கணிக்கப்படுதலையும் நாம் அறிவோம். தலையிலிருந்து

மயிர் கீழே விழுந்ததும் அதனைப் பாதுகாத்தவனாலேயே புறக்கணிக்கப்படுதல், தன் நிலையிலிருந்து தவறிய பெரியார் பொது மக்களிடைப் புறக்கணிக்கப்படும் நிலைக்கு ஒப்புவதாகும் என்று உவமை கூறப்படுகிறது. தலையில் இருந்து மயிர் உதிர்தல் மிகச் சிறிய செய்தி. ஆயினும் இச்சிறிய செய்தியைப் பொருத்தமான உவமையாக்கிப் பெரியவர் தம் நிலையிற்றாழின் இம்மயிர் நிலையையே அடைவர் என்பதை விளக்கும் திறம் எவ்வளவு அழகாகவும் சுவை பயப்பதாகவும் இருக்கின்றது என்பதை,

> "தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்தம்
> நிலையின் இழிந்தக் கடை"

என்னும் திருக்குறளால் தெளியலாம்.

இங்ஙனம் ஒவ்வொரு குறளையும் நமது நுண்ணறிவைக் கொண்டும், நிகழ்ச்சிகளைக் கொண்டும், இலக்கியச் சான்றுகளைக் கொண்டும், அமைதியாக ஆராயின், திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பேறுகளையும் விளக்குவதிலும் மக்கள் உள்ளங்களில் அவைபற்றிய உண்மையைப் பதியவைப்பதிலும் இணையற்ற பெரும் புலவர் என்னும் உண்மையை இனி துணரலாம்.

# 7. பண்டைத் தமிழர் விழாக்கள்

சங்க காலத் தமிழகத்தில் திருவிழாக்கள் கடவுள் வழிபாடு என்னும் பெருநோக்கினையே முதன்மையாகக் கொண்டு நடைபெற்றன. அக்காலத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களுக்கு ஏற்பக் கடவுளர் அமைந்திருந்தனர். முல்லை நில மக்கள் திருமாலையும், குறிஞ்சி நிலமக்கள் முருகனையும், மருத நிலமக்கள் இந்திரனையும், நெய்தல் நிலமக்கள் வருணனையும் தத்தம் வழிபடு கடவுளராகக் கொண்டிருந்தனர்.

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்''

என்று தொல்காப்பியர் தமிழுலகம் கண்ட கடவுட் காட்சியைக் கூறுகின்றார். இக்கடவுளர்க்குத் தமிழ் மக்கள் எடுத்த சிறப்புக்கள் பல விழாக்களாக விளங்கின. பாலை நிலத்திற் கொற்றவைக்கு விழா நடத்தல் மரபு.

## விழாவில் கலைச் சிறப்பு

கடவுள் வழிபாட்டுடனே கலைச் சிறப்பும் திருவிழாவில் முதன்மை பெற்றிருந்தது. தமிழ் மக்கள் தமக்கென வரையறுத்துக் கூறிய கருப்பொருள்களுள் தெய்வத்தையும் பறை, யாழ் முதலிய இசைக் கருவிகளையும் கொண்டிருந்தனர். தெய்வமும் கலையும் கருப்பொருள்கள்

என்று கொண்ட தமிழ் மக்களுடைய உயரிய எண்ணம் வியந்து பாராட்டற்பாலது.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். ஈண்டுத் தெய்வத்தோடு யாழின் பகுதியும் சேர்த்துரைக்கப்பட்டது என்னே? தெய்வவுணர்வும் கலையுணர்வும் வாழ்க்கையில் மிக இன்றியமையாதவை என்று நமது முன்னோர் கருதி அவற்றைக் கைக்கொண்டு வாழ்ந்தனர்; எனவே தாம் கொண்டாடிய விழாக்களிலும் தெய்வத்தையும் கலையையும் சிறப்பித்தனர். சிற்றூரிலும் பேரூரிலும் நடந்த விழாக்களில் விறலியர் (நடனமகளிர்) பங்குகொண்டு பலவகை நடனங்கள் புரிந்தனர் என்று சங்க நூல்கள் உரைக்கின்றன. பெரிய ஊரில் நடக்கும் திருவிழாவில் பொருநர் (வேடம் புனைந்து ஆடுவோர்) பலர்கூடித் தமது கலைத்திறனைக் காட்டிய பின்பு ஊருக்குத் திரும்புவது வழக்கம் என்பதைப் பொருநராற்றுப் படையின் பின்வரும் தொடக்கவரிகள் தெரிவிக்கின்றன:

"அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாள் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந!

(சாறு-விழா)"

தெய்வ வுணர்வால் பெற்ற மகிழ்ச்சியும் கலையுணர்வால் பெற்ற மகிழ்ச்சியும் மக்களிடம் விழாக் காலங்களில் நிரம்பியிருக்குமன்றோ? 'விழா' என்னும் சொல்விழைவு என்னும் சொற்பொருளின் அடியாகப் பிறந்தது என்பதைக் காணும்போது இவ்வுண்மை முற்றும் புலனாகும்.

இக்காலத்தும் கொண்டாட்டம் என்ற சொல்லை விழா வின் பொருளில் நாம் பயன்படுத்துகின்றோம்.

**நகரத்தில் விழாக்கள்**

காலப்போக்கில் தெய்வ விழாக்கள் சிற்சில நகரங் களில் சிறப்புடன் நடந்தேறின. திருமால் வழிபாடு திரு மாலிருஞ்சோலை, திருவரங்கம், திருவேங்கடம் முதலிய இடங்களிலும், சிவ வழிபாடு தில்லை முதலிய இடங்களி லும், முருக வழிபாடு திருப்பரங்குன்றம் முதலிய இடங் களிலும், சிறப்பாகச் செய்யப்பட்டுவந்தன. அதே சமயத்தில் பூம்புகார் போன்ற பேரூர்களில் பல கோயில் களில் விழாக்கள் கொண்டாடப்பட்ட நிலையினையும் நாம் இலக்கியச் சான்றுகள் கொண்டு அறிகின்றோம். காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழாவின்போது பற் பல கோயில்களிலும் நடந்த விழாக்களைச் சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது:

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
நீல மேனி வாலியோன் கோயிலும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறு சிறந்தொருபால்."

அதே காலத்தில் சான்றோர், அரசர், பத்தினிப் பெண்டிர் ஆகியோர் தெய்வங்களாக வழிபாடு இயற் றப் பெற்றனர். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டம் கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் எடுத்த கோயிலை யும் அதில் அவன் நடத்திய விழாவையும் தெரிவிக்கின் றது. உரைபெறு கட்டுரை என்னும் பகுதியில் கொங் கிளங் கோசர், இலங்கைக் கயவாகு; ஆகியோரும்

பத்தினிக்கோட்டம் சமைத்து விழாவணி நிகழ்த்திய செய்தி காணப்படுகிறது. பிற்காலச் சோழமன்னர்கள் தமது பெற்றோர்கட்கும், சிறப்புறு மனைவியர்க்கும் கோயில்களை அமைத்து விழாச் செய்தமையைக் கல் வெட்டுக்களால் அறிகின்றோம்.

## இந்திர விழா

அரசன் பிறந்தநாள் விழா, முடிபுனை விழா, கார்த் திகை விழா முதலிய பலவகை விழாக்கள் சங்கநூல்களிற் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இந்திர விழாவும் புது நீர் விழாவும் குறிக்கத்தக்கவை.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திரவிழாவின் சிறப்பைத் தனித்தனிக் காதைகளில் அமைத்துக் கூறு கின்றன.

*"மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்*
*ஆயிரத் தொரெட் டரசுதலைக் கொண்ட*
*தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை*
*புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி*
*மண்ணக மருள வானகம் வியப்ப*
*விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி"*

எனச் சிலப்பதிகாரமும்,

*"விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று......*
*மேலோர் விழைய-விழாக்கோள் எடுத்த நாலேழ்நாள்..."*

என மணிமேகலையும் இந்திரனுக்கு நடந்த விழாச் சிறப்பினைப் போற்றி யுரைக்கின்றன.

காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் ஆகிய இடங்களில் வாழ்ந்த தொழிலாளரும், கலைஞரும் வணிகரும் இந்திர விழாவின் பொருட்டுத் தத்தம் இருப்பிடங்களைத் தூய்மை செய்தனர். சிலர் காவற்பூதத்தின் பீடிகையில் அவரை, துவரை, எள்ளுருண்டை, பூ, புகை, பொங்கல் முதலியவற்றைச் சொரிந்து துணங்கைக் கூத்தாடினர். மறக்குடி மகளிர்,

> "பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"

ஆரவாரத்துடனே பூப்பலியிட்டுப் போயினர். பற்பல கடவுளர்க்கு விழாக்கள் ஒருபால் நடந்தன. அருகர் தானங்களில் அறமுரைத்தலும் பிற திருக்கோயில்களில் வழிபாடுகளும் ஒருபால் சிறப்புற்றன. பகை மன்னர்கள் தமது அடிமைத்தளை நீங்கப்பெற்று ஒருபால் விடுதலை பெற்றனர். பலவகை இசை வல்லார் ஒருபால் இனிய இசைவிருந்தளித்தனர்.

இந்திர விழாவில் சமயக் கணக்கரும் சோதிடரும் பலமொழி பேசும் மக்களும் ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தரும் கலந்துகொண்டனர். தோரண வீதிகளிலும், பல மன்றங்களிலும் பூரண கும்பம் பொற்பாலிகை பாவை விளக்கு முதலியன பரப்பப்பட்டன. கமுகு, வாழை, கரும்பு முதலியன நடப்பட்டன. பசும்பொன்னாலாகிய தூண்களில் மூத்துமாலைகளை முறையாக மக்கள் தொங்கவிட்டனர்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலைமாற்றிப் புது மணலைப் பரப்பினர்; மாடங்களிலும் வாயில்களிலும் கொடிகளைக் கட்டினர். குளிர்ந்த மணலையுடைய பந்தல்களிலும், அம்பலங்களிலும் பல

அறிவுரைகளைக்கேட்க விரும்புவோர் கூடினர்.' சமய வாதிகள் தத்தம் சமயத்தில் பொருந்திய பொருள்களைக் குறித்துப் பட்டி மண்டபங்களில் அமர்ந்து விவாதம் புரிந்தனர்.

## புதுநீர் விழா

ஆண்டுதோறும் ஆடித்திங்களில் ஆறுகளில் புதுநீர் வருதல் மரபு. நீர் மக்களுக்கு உயிர்போன்றதன்றோ? அதனால் அப் புதுநீர் வரவை, விழாவாகக் கொண்டாடு தல் தமிழர் மரபு. இவ்விழா மதுரையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதைப் பரிபாடல் தெரிவிக் கின்றது. முகைப் பருவத்தர், முகை அவிழ்ந்தன்ன பருவத்தர், நங்கையர் நம்பியர் இளைஞர் முதலிய எல் லோரும் தத்தம் வசதிக்கேற்றவாறு ஊர்திகளிலோ நடந்தோ ஆற்றுக்குச் செல்வர். மகளிர் வையையில் நீராடி 'வையையென்னும் பொய்யாக் குலக்கொடி'க்கு வழிபாடு செய்வர். ஆடல் மகளிர் ஆடல் புரிவர்; பாடல் மகளிர் பாட்டிசைப்பர்; இளைஞர்கள் ஆற்று வெள்ளத் தில் குதித்து நீந்துவர்; சிலர் மிதவைகளைக்கொண்டு அக்கரைக்கும் இக்கரைக்கும் சென்று வந்து விளையாடு வர். ஆடவரும் மகளிரும் தத்தம் பொருள்நிலைக் கேற்ற வாறு பொன், வெள்ளி, செம்பு இவற்றால் செய்த மீன், இறால், நண்டு இவற்றை வையையை வாழ்த்திக் கொண்டே புது வெள்ளத்தில் எறிவர்.

வையையின் இரண்டு கரைகளிலுமுள்ள சிற்றூர் களில் வாழும் உழவர்கள் வெள்ளத்தைக்கண்ட மகிழ்ச்சி யால் கூத்தாடித் தத்தம் வயல்களில் நீரைப்பாய்ச்சுவர். உழத்தியர் புது வெள்ளத்தில் கண் சிவப்பேறக் குடைந்து நீராடுவர். இங்ஙனம் பாண்டியநாட்டு மக்க

ளுக்குச் செவிலித்தாயாக விளங்கும் வையையென்னும் எழில் பெறுநங்கை, தன் மக்கள் தன்னை வாழ்த்தலும் வழிபடுதலும் கண்டு மகிழ்ந்தவளாய்ச் செய்ய பூவாடை போர்த்து அசைந்தாடி அன்ன நடை நடந்து செல்லுவள்.

★

# 8. மொழிவழிப் பண்பாடு

## முன்னுரை

ஒரு மொழி பேசும் மக்களுடைய பண்பாட்டை அறிய, அம்மக்கள் பயன்படுத்திய சொற்கள் - பயன்படுத்தும் சொற்கள் - அவர்தம் இலக்கியம் - அவர்கள் நாட்டில் உள்ள கோவில்கள்-அக்கோவில்களில் காணப்படும் சிற்பம் ஓவியம் முதலிய கலைகள் - அந்நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியால் அறியப்படும் உண்மைகள் - அந்நாட்டைப்பற்றிப் பிறர் எழுதியுள்ள குறிப்புக்கள் முதலியன பெருந்துணை செய்யும் கருவிகளாகும். இவற்றுள் ஒவ்வொன்றைக் கொண்டும் அவற்றுக்குரிய மக்களின் பண்பாட்டை ஓரளவு அறியலாம். இங்கு **மொழிவழிப் பண்பாட்டை** மட்டும் பற்றிய சில செய்திகளைக் காண்போம்.

நூல் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் உள்ள சொற்பொருளைக் கொண்டு மக்களது பண்பாட்டை அறிதலே 'மொழிவழிப் பண்பாடு' என்பது.

## ஞாலம்

"ஞாலம் மூன்றடித் தாய முதல்வன்"

என்பது கலித்தொகை. 'ஞாலம்' என்பது இங்கு 'உலகம்' என்னும் பொருளில் வந்துள்ளது. ஞால் - தொங்கு. ஞாலம் - தொங்குதல்.

"ஞான்றன வயிரமாலை" என்பது சீவகசிந்தாமணி.

ஞாலம் - தொங்குதல், தொழிற்பெயர். இச்சொல் தொழில் ஆகு பெயராய்த் **தொங்குகின்ற உலகத்துக்கு** ஆகி

வந்தது. உலகம் எதன்மீதும் தங்கவில்லை என்பதும் அது ஈர்க்கும் ஆற்றலால் தொங்கிக்கொண்டிருக்கிறது என்பதும் அறிவியல் வல்லார் கண்டறிந்த உண்மை யாகும். இந்த உண்மையை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நம் முன்னோர் கண்டறிந்தனர் என்பதை அறிய, அப்பெரு மக்களது **வானநூல் அறிவு** நாம் வியந்து பாராட்டுதற்குரியதன்றோ !

## கிளைஞர்

மரம் ஒன்று; அதற்குக் **கிளைகள்** பல. இக்கிளைகள் ஒரு மரத்திலிருந்து கிளைப்பன. இவ்வாறே ஒரு குடும் பத்திலிருந்து மகன் - மருமகள் வாயிலாகவும், மகள் - மருமகன் வாயிலாகவும் பிள்ளைகள் தோன்றுகின்றனர். காலப்போக்கில் இப் பிரிவினர் பரந்து விரிகின்றனர். ஒரே மரத்திலிருந்து கிளைகள் பிரிதல் போல இவர் அனை வரும் ஒரே குடும்பத்திலிருந்து **கிளைக்கின்றனர்**; எனவே, **கிளைஞர்** என்று அழைக்கப்படுகின்றனர். "எங்கள் கிளை தஞ்சை, குடந்தை, நாகை, மயிலை முதலிய இடங்களில் பரவி இருக்கிறது," என்று இன்றும் தமிழர் தம் உறவின் முறையைக் குறிப்பதைக் கேட்கலாம்.

## கொழுந்தனார் - மூத்தார்

இலையின் முதற்பருவம் **கொழுந்து** என்பது. அதற்கு அடுத்த பருவம் பசுமை வாய்ந்த இலை. அதற்கு மேற் பட்டது **மூத்த இலை** (முதிய இலை). இந்த முறைவைப்பை உறவின் முறையில் காணலாம். ஒரு பெண் தன் கணவ னுக்குத் தம்பியைக் **கொழுந்தன்** (கொழுந்து+அன்) என்று அழைக்கிறாள்; கணவனுக்கு மூத்தவனை (கணவ னிலும் முதியவர்) **மூத்தார்** என்று குறிப்பிடுகிறாள். இவ்

வாறே கணவன் தன்மனைவியின் தங்கையைக் **கொழுந்தி** (கொழுந்து+இ) என்று குறிப்பிடுகிறான். இலையின் பருவப் பெயர்களைக் கொண்டு இப்பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

## (திரு) மணம்

**மணம்** - நறுநாற்றம். இந்நறு நாற்றம் அரும்பு போதாகி, போது மலர்ந்த பிறகே அதிலிருந்து வெளிப்படும். மலர்தல் - பூவின் மொட்டு அவிழ்தல். **மலர்** - மலர்தல் - மலர்ச்சி பெறுதல்.

பெண் புஷ்பவதியானாள் என்பதற்குப் பெண் மலர்ச்சி பெற்றாள், அதனால் வாழ்க்கை மணம் **வீசப்** பெற்றாள் - என்பது பொருள். மணத்திற்கு அடிப்படை **பெண்மை மலர்தல்** ஆகும். "யான் மலராத பெண் அல்லவோ" என்பது. ஒப்பாரியில் ஒரு வாசகம். இவற்றால் அறியப்படும் உண்மை யாது? தமிழர், பெண்மை மலர்ச்சி பெற்றபிறகே வாழ்க்கைக்கு மணம் உண்டு என்னும் உண்மையை உணர்ந்திருந்தனர் - ஆதலால் பெண்மை மலர்ந்த பெண்களுக்கே திருமணம் செய்து வந்தனர் என்னும் உண்மை இவற்றால் வெளிப்படுகிறது அன்றோ?

## இல்வாழ்க்கை

காதலனுடன் வாழ்வு நடத்தும் காதலிக்கு **மனைவி, இல்லாள்** என்னும் பெயர்கள் உண்டு. **மனை**+என்பது வீடு. **மனை** - இல்வாழ்க்கை.

"மனைத்தக்க மாண்புடையள்" என்பது குறள். எனவே, மனைவி என்னும் சொல், **வீட்டுக்கு உரியவள்**

எனவும் மனையில் நடைபெறும் வாழ்க்கைக்கு உரியவள் எனவும் பொருள்படும். மனைவி என்னும் சொல்லுக்கு நேரான ஆண்பாற் சொல் இல்லை. எனவே, மனையின் செயல்களுக்கு - மனைவாழ்வின் நடைமுறைகளைச் செயற் படுத்தற்கு உரிமையுடையவள் காதலியே என்பது நம் முன்னோர் கருத்து.

**இல்** - வீடு, இல்லறம். "**இல்** வாழ்வான் என்பான்" என்பது குறள். **இல்** - மனைவி, புகழ்புரிந்த **இல்** இலோர்க்கு இல்லை" என்பது குறள். இல்லாள் - இல் லத்துக்கு உரியவள். இச் சொல்லுக்கும் நேரான ஆண் பாற் சொல் இல்லை. இல்லான் என்பது இதுகாறும் ஆண் மகனைக் குறிக்க வழங்கவில்லை. 'இல்லான்' என்பது 'இல்லாதவன்' என்பதையே குறிக்கும்.

மனைவி, இல்லாள் என்னும் இரு சொற்களும் இல் வாழ்க்கைக்குக் காதலியே உரியவள், அஃதாவது, காதலியே வீட்டு நடைமுறைகளைக் கவனிக்கும் உரிமை உடையவள் என்னும் உண்மையை உணர்த்துகின்றன. இதனால் நாம் அறிவது யாது?

கணவன் பொருள் தேடிவரும் உரிமை உடையவன். அப்பொருளைக் கொண்டு காதலி வீட்டில் இருந்து கொண்டு வீட்டு வாழ்க்கைக்குரிய எல்லாம் (சமையல், பிள்ளை வளர்ப்பு, முதலிய வீட்டுக்குரிய எல்லாம்) செய்து முடிக்கும் உரிமை உடையவள். எனவே, ஆடவனது வாழ்வுக்கு - **இல்வாழ்வுக்கு அரசி** அவளே என்பன நம் முன்னோர் எண்ணங்களாக இருந்தன என்பது இச்சொற் களால் புலனாகின்றது. மனைவிக்கு **வாழ்வரசி** என்னும் பெயர் இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் வழக்கில் இருப்பதும் இவ்வுண்மையை வற்புறுத்துவதாகும்.

'வாழ்வரசி' என்னும் தொடர் அங்கு 'வாவரசி' என்று இன்றும் பாமர மக்களால் வழங்கப்படுகிறது.

கணவன் தன் வருவாயைத் தானே வைத்துக் கொண்டு வீட்டுக்கு வேண்டும்போது மனைவிக்குப் பணம் கொடுக்கும் நிலை அக்காலத் தமிழர்களிடம் இல்லை - கணவன் தன் வருவாயை மனைவியிடம் கொடுத்து வீட்டுக் கவலையின்றி வாழ்ந்தான் - வீட்டுக் கடமைகளைக் குறைவறச் செய்துகொண்டு கணவனுக்கு இன்பத்தை விளைத்துக்கொண்டு வாழ்வரசியாக மனைவி வாழ்ந்தாள் என்னும் உண்மைகள் மேற் கூறப்பெற்ற மூன்று சொற்களாலும் இனிது புலனாகும்.

## வீடு

அறம், பொருள், இன்பம், வீடு என மனிதன் அடையவேண்டும் பேறுகள் நான்கு என்று நம் முன்னோர் கூறினர். வீடு என்பது விடுதல், விடுதலை பெறுமிடம் எனப் பொருள்படும். உலகக் கட்டுக்களிலிருந்து விடுதலைபெற்று இன்பமாக இருக்குமிடம் வீடு (மோட்சம்) எனப்பட்டது. இவ்வாறே பொருளீட்டும் தொல்லைகளிலும் கவலைகளிலுமிருந்து கணவன் விடுதலைபெற்று மனைவி மக்களோடு இன்புறும் இடமும் வீடு எனப்பட்டது. நம் முன்னோரான அறிவுடைத் தமிழர் எத்தகைய விழுமிய பொருளில் இல்லத்தை 'வீடு' என்று அழைத்தனர் என்பது இங்கு எண்ணி யெண்ணி வியக்கத்தகும்.

இதனால் 'வீடு' என்பது 'கவலையற்ற இடம்' என்று தமிழர் எண்ணினர் என்பதும், மனைவி மக்களோடு இன்பமாக வாழும் இடத்தையே வீடாகக் கருதினர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன அல்லவா ?

## ஊருணி

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

**ஊருணி** - (ஊர் + உணி - ஊர் + உண்ணி) இது ஊரா ரால் உண்ணப்படுவது; 'ஊராரால் உண்ணப்படும் நன் னீர் உள்ள குளம்' எனப் பொருள்படும். இவ் ஊருணி என்னும் சொல் தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத் தில் மட்டும் வழக்கில் இருந்து வருகிறது. ஊருணி என் னும் சொல் மக்கள் பருகுதற்குரிய நன்னீர்க் குளத்தை மட்டுமே குறிக்கும். எனவே, இச்சொல், ஊரார் குளிப்ப தற்கு வேறு தனிக் குளம் இருக்கவேண்டும் என்பதை நன்கு உணர்த்தி நிற்றலைக் காணலாம். இங்ஙனம் ஊரில் இரண்டு குளங்கள் இருத்தலைப் பல ஊர்களில் இன்றும் காணலாம்.

மக்கள் குளிக்கவும், உடைகளைத் துவைக்கவும் பயன் படுத்தும் நீர், உண்ண உதவாது; உண்ணுதற் கென்றே தனிக் குளம் தேவை என்ற உண்மையை உணர்ந்தல்லவா, மக்கள் தனித்தனிக் குளத்தை அமைத்தனர். நம் முன்னோரிடம் உடல்நலம் பேணும் அறிவு எந்த அளவு உயர்ந்திருத்தல் வேண்டும் என்ற உண்மையை இவ்வூருணி என்னும் சொல் நன்கு உணர்த்துகின்றது அன்றோ!

## சமையம்

**சமை** - நிரம்பு, ஆயத்தமாகு, பொருத்தமாகு, பக்கு வப்படு எனப் பொருள்படும். **சமைதல்** - நிரம்புதல், ஆயத்தமாதல், பொருந்துதல், பக்குவப்படுதல் எனப்

பொருள்படும். பெண் **சமைந்தாள்** என்பது, பெண் வாழ்க்கைக்குரிய நிலை நிரம்பினாள், பக்குவமடைந்தாள், வாழ்க்கையைத் தொடங்க ஆயத்தமானாள், வாழ்க்கைக்குப் பொருத்தமானாள் எனப் பொருள்படும்; **சமையல்** பக்குவப்படுதல் **சமையம்** - பக்குவமான கொள்கைகளின் திரட்சிக்கு ஆகு பெயராய் அமைந்த பெயர். பழைய மக்கள் தத்தம் அறிவு நிலைக்கு ஏற்றவாறு மதக் கொள்கைகளில் ஈடுபட்டிருந்திருக்கலாம், நாகரிகமும் ஒரு தலைவனுக்கு அடங்கிய வாழ்க்கை முறையும் உண்டான பிற்காலத்தில் சான்றோர் அச் சமுதாய மக்களின் மதத் தொடர்பான கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒரு நெறிப்படுத்தியிருக்கலாம் இங்ஙனம் சான்றோரால் நெறிப்படுத்தப்பட்டதே - பக்குவப்படுத்தப்பட்டதே சமைக்கப்பட்டதே **'சமையம்'** எனப்பட்டது என்று கருதுதல் பொருத்தமாகும்.

## இறை

**இறை** - தங்குதல் தொழிற் பெயர். இது தொழிலாகு பெயராய் எங்கும் நீக்கமறத் தங்கியுள்ள பேராற்றலை உணர்த்தி நிற்கிறது.

"எம் **இறை** வீணை வாசிக்குமே" என்பது தேவாரம். இச்சொல் தேவார வழக்குப் பெற்றதாயினும், அதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழில் வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று சொல்வது பொருத்தமாகும்.

பேராற்றலை ஆணாக உருவகித்த காலத்தில் **இறைவன்** என்னும் சொல் தோன்றியது; பேராற்றலைப் பெண்ணாக உருவகப்படுத்தியபோது **இறைவி** என்னும் சொல் தோன்றியது என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

உலகத்தைப் படைத்து, காத்து, அழிக்கும் பேராற்றல் எல்லாப் பொருள்களின் இயக்கத்திற்கும் உயிர்நாடி- அப்பேராற்றல் தங்கப் பெறுதலால்தான் பொருள்களின் இயக்கம் தோன்றுகிறது என்னும் உண்மையை நன்கு உணர்ந்தே, நம் முன்னோர், அப் பேராற்றலுக்கு இறை என்று பெயரிட்டனர். இத்தகைய பேராண்மையை உணர்ந்து பெயரிட்ட அப்பெருமக்களின் பேரறிவையும் சீரிய பண்பாட்டையும் என்னென்பது!

## முடிவுரை

இங்ஙனம் தமிழ்ச் சொற்கள் தமிழ் மக்களுடைய சமையம், வானநூலறிவு, இல்வாழ்க்கை, நலத்துறை அறிவு முதலிய (பண்பாட்டின்) பல பகுதிகளைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களை விளக்கி, அவர்தம் பண்பாட்டை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்துதலைக் காணலாம். தமிழ் அறிஞர்கள் இத்துறையில் உழைத்து உண்மை காணல் மிக்க பயனைத் தரும்

# 9. அன்றைய தமிழகமும் இன்றைய தமிழகமும்

## தலைப்பு விளக்கம்

'அன்றைய தமிழகம்' என்னும் தொடர் 'சங்க காலத் தமிழகம்' எனப் பொருள்படும்; 'இன்றைய தமிழகம்' எனும் தொடர் நாம் வாழும் 'இக்காலத் தமிழகம்' எனப்பொருள்படும்.

## சங்க காலத் தமிழகம்

சங்ககாலம் என்பது கி. பி. 300-க்கு முற்பட்ட காலம். அக்காலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தர் ஆண்டு வந்தனர். அவர்கள் தமிழர் ஆதலால் நாட்டுமக்களைத் தம்மைப்போலவே கருதினர்; அவர்கள் நன்னிலையில் வாழ்ந்தால்தான் தாம் நன்னிலையில் வாழமுடியும் என்பதை நம்பினர்; ஆதலால் அவர்களுக்குக் கல்வி வசதியை அளித்தனர்; ஆற்று நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லும் கால்வாய்களை வெட்டினர்; ஏரி குளங்களைத் தோண்டினர்; ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டினர்; இங்ஙனம் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய வசதிகளை அளித்தனர்.

அக்காலத் தமிழரசர் தமிழைத் தம் உயிரெனப் போற்றினர்; முத்தமிழ் வல்ல புலவர்—பாணர்—கூத்தர் ஆகிய மூவரும் நல்வாழ்வு வாழ்ந்தால்தான் அவர்களால்

முத்தமிழும் வளம்பெற முடியும் என்பதை எண்ணி, அம்முத்தமிழ்வாணரை முறையறிந்து போற்றினர்; நல்ல உணவும் சிறந்த பரிசுகளும் வழங்கி அவர்க்கு ஊக்கம் அளித்தனர். மன்னர்தம் சோற்றுச் செருக்கால் புலவர்கள் செழுமை நிறைந்த பாடல்களைப் பாடிக் குவித்தனர். அவையே இன்று சங்ககால நூல்களாகத் திகழ்கின்றன.

அன்றைய தமிழகத்தில் வடமொழி வாணர் மிகுதியாக இல்லை; வட சொற்களும் மிகுதியாகக் கலக்கவில்லை; அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் தொழில் பற்றிய பெரும் பிரிவுகள் சங்ககாலத்தில் இருந்தன. ஆனால் இக்காலத்தில் உள்ளபடி நூற்றுக்கணக்கான பெருஞ்சாதிகளும் ஒவ்வொரு பெருஞ்சாதியிலும் பல உட்பிரிவுகளும் அக்காலத்தில் இருக்கவில்லை.

பறை அறைந்து அரசன் ஆணையை ஊரார்க்கு உரைத்தவன் பறையன்; கிணை என்னும் பறையை வாசித்தவன் கிணையன்; படையை ஆட்சி புரிந்தவன் படையாட்சி; இடை நிலத்தில் வாழ்ந்தவன் இடையன்; மறப்பண்பு மிக்கவன் மறவன். இங்ஙனம் சங்ககாலத்தில் அலுவல் பற்றியும், பண்பு பற்றியும், இடம் பற்றியும் பெயர்கள் உண்டாயின. இவர்கள் ஒருவரையொருவர் தொடக்கூடாது என்றோ, நெருங்கக்கூடாது என்றோ அக்காலத்தில் விதி இல்லை. சங்க காலச் சமுதாயம் இக்காலச்சாதி அறியாத சமுதாயம். ஆனால் அச்சமுதாயத்தில் தலைமக்கள் என்றும் பொதுமக்கள் என்றும் இருதிறத்தார் இருந்தனர். பெரும்பாலும் காதல் திருமணம் வழக்கில் இருந்தது.

ஆண்களைப் போலவே பெண்களும் சமமாகவே கல்வி கற்றனர். பாணர் மரபில் பிறந்த ஒளவையார் அதியமானிடமிருந்து தொண்டைமானிடம் அரசியல்

தூதுவராகச் சென்றூர் என்று புறநானூறு கூறுகிறது. பெண்பாற் புலவர் சிலர் ஆண்பாற் புலவரைப் போலவே மூவேந்தரால் சிறப்புப் பெற்றனர். குறத்தி, பாணத்தி, வேட்டுவச்சி, மறத்தி போன்ற குடிப்பெண்கள் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் எனின், அக்காலப் பெண் கல்வியின் சிறப்பை என்னென்பது! எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களுள் யாப்பிலக்கண நூல் செய்தல் கடினமாகும். அந்த யாப்பிலக்கண நூல்களுள் இரண்டைத் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்த பெருங்காக்கை பாடினியாரும், அவருக்குப் பின் வந்த சிறுகாக்கைபாடினியாரும் செய்து புகழ் பெற்றனர். சங்ககாலப் பெண்கல்வியின் சிறப்பை அறிவதற்கு இஃதொன்றே ஏற்ற சான்றுகும் அன்றே!

நெல், வரகு, கம்பு, சோளம் முதலிய கூலவகைகளை விற்ற வணிகரும், ஆடை வணிகரும், மருத்துவரும், இரும்பு அடித்த கொல்லரும், நாணயப் பரிசோதகரும் அக்காலத்தில் செய்யுள் இயற்றும் புலமை பெற்றிருந்தனர்.

அக்காலத்தில் தமிழகம் மேல் நாடுகளுடனும் கீழ் நாடுகளுடனும் சிறந்த முறையில் கடல்வாணிகம் செய்து வந்தது. தமிழர் அலைகடலுக்கு அப்பாலும் சென்று வாணிகம் செய்து பெருமை பெற்றனர்; அவ்வந்நாட்டு மொழியைக் கற்றனர்; இந்தியாவில் மகத நாட்டுடனும் மற்ற நாடுகளுடனும் உள்நாட்டு வாணிகத்தை நன்முறையில் நடத்தினர். இத்தகைய வளம் மிகுந்த வாழ்க்கையால் வணிகர் ‘மன்னர் பின்னோர்’ என்று மதிக்கப்பட்டனர். அவர்கள் நேர்மையாகவே வாணிகம் செய்து பொருளீட்டினர் என்று பட்டினப்பாலை பகர்கின்றது.

அக்கால மக்கள் சிவநெறி, மால்நெறி, பௌத்தம், சமணம் ஆகிய நெறிகளைத் தம் விருப்பம் போல் பின்

பற்றினர். குறிப்பிட்ட சமயத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்ற வற்புறுத்துதல் அக்காலத்தில் இல்லை; சமய நெறியும் ஆங்கில்லை; விழாநாட்களில் பட்டி மண்டபத்தில் ஏறிச் சமய வாதிகள் தத்தம் சமயத்தின் சிறப்பைக் கூறுவது வழக்கம்; மக்கள் அவற்றைப் பொறுமையாகக் கேட்பார்கள்; தங்களுக்கு விருப்பமான சமயத்தைச் சார்வார்கள்.

> " எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்;
> மெய்ப்பொருள் காண்ப தறிவு "

என்ற கொள்கை அக்காலத்தில் நிலவி இருந்தது.

இத்தகைய மேம்பட்ட வாழ்க்கை பின் நூற்றுண்டுகளில் ஏற்படவில்லை. அதனுற்றுன் தமிழக வரலாற்றில் **சங்ககாலம் பொற்காலம்** என்று அறிவுடையோர் கூறுவர்.

## இடைக்காலத் தமிழ்

சங்ககாலத்திற்குப் பிறகு பல்லவர் என்ற புதிய மன்னர் (தமிழரல்லாதவர்) தமிழகத்தின் பெரும் பகுதியை ஏறத்தாழ 600 ஆண்டுகள் ஆண்டனர். அவர்கள் காலத்தில் சுற்றுப்புற நாடுகளிலும் தமிழகத்திலும் சமணர் செல்வாக்கு இருந்தது. சமணரும், பௌத்தரும், பிராக்ருத மொழியிலும் வடமொழியிலும் வல்லவர்: தருக்கக் கலையிலும் வல்லுநர்; அவர்கள் தமிழைக் கற்றுத் தமிழில் பல நூல்களைச் செய்தனர்; அவர்களைப் போலவே வேதங்களில் வல்ல மறையவரும் இந்நாட்டில் புகுந்து வடமொழியைப் பரப்பினர்; அவர்கள் நுழைவால் வடநாட்டுப் புராணங்களும் இதிகாசங்களும் இங்குச் செல்வாக்குப் பெற்றன. வடநாட்டில் தோன்றிய பக்திநெறி தமிழகத்திலும் பரவியது. தமிழகத்தில்

இருந்த சிவநெறியும், மால்நெறியும் சைவ, வைணவங் களாக மாறின.

பல்லவர்க்குப் பின் வந்த சோழர் காலத்திலும் வட மொழியின் செல்வாக்கும் வடவர் செல்வாக்கும் மிக உயர்ந்தன. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் முன்பு தொழில்பற்றி இருந்த பல பிரிவுகள் பிறவிபற்றிய பிரிவுகளாகக் கருதப்பட்டன. ஆதாவது, தொழில்பற்றி வந்த பறையன் என்னும் பெயர் பிறவி பற்றிய சாதிப் பெயராகவே மாறிவிட்டது

சோழர் காலத்தில் இப்பிரிவுகள் பெருத்துவிட்டன. இதனுல் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப் பட்டன. இன்ன பிற காரணங்களால், சங்ககாலத்தில் இருந்த சமுதாய ஒற்றுமை சோழர் காலத்தில் சிதைந்து விட்டது. தமிழர் பல நூறு சாதிகளாகப் பிரிந்து நெல் லிக்காய் மூட்டைகளாகிவிட்டனர்; அதனுல் மிக எளிதில் படையெடுத்து வந்தவர்க்கெல்லாம் அடிமை கள் ஆயினர். பல்லவர் காலத்திலும் சோழர் காலத்தி லும் பின் வந்த விசயநகர ஆட்சிக் காலத்திலும் தமிழ கத்தில் வடமொழிக் கல்லூரிகள் பெருத்தனவே தவிர, ஒரு தமிழ்க் கல்லூரியாவது இருந்தது என்று சொல்வ தற்குக் கல்வெட்டுச் சான்று இல்லை.

இங்ஙனம் சங்ககாலத்திற்குப் பிறகு காலப்போக்கில் தமிழ்மொழி, பிறமொழிச் சொற்களால் கலப்புண்டது செய்யுளிலும் உரைநடையிலும் பிறமொழிச் சொற்கள் கலப்புண்டன. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்தி லும் வழக்கில் இருந்த தமிழ் இசை நாயக்கர் காலத்தில் வழக்கு வீழ்ந்தது. கருநாடக சங்கீதம் அதன் இடத் தைக் கவர்ந்துகொண்டது. பல்லவர் காலத்தில் அரசி யலில் அடிமைப்பட்ட தமிழர் அடிமை மனப்பான்மை

யிலேயே ஊறலாயினர். நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் அவர்களிடம் தோன்றவில்லை; சமுதாய ஒற்றுமையும் இல்லை.

## இன்றைய தமிழகம்

இந்த நிலையில் வெள்ளையர் ஆட்சி ஏற்பட்டது. தமிழர் மேனாட்டுக் கல்வி கற்கலாயினர்; மேனாடுகளில் சமுதாயத்தை உருக்குலைக்கும் சாதிகள் இல்லை என்பதை உணர்ந்தனர்; அங்கு ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் கொண்டுள்ளனர் என்பதைத் தெளிந்தனர்; தாமும் சாதிகளை ஒழிக்கவும், தாய் மொழியை வளர்க்கவும் முற்பட்டனர்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகத் தமிழகத்தில் இனவுணர்ச்சியும் மொழிப்பற்றும் தோன்றி வருகின்றன. நல்ல தமிழில் பேசவேண்டும்—எழுதவேண்டும் என்னும் ஆர்வம் இளைஞரிடையே வளர்ந்துவருகிறது. இக்கால இளைஞர் சங்ககாலப் பெயர்களை ஆர்வத்துடன் வைத்துக் கொள்கின்றனர்; சங்ககால நூல்களைப் பெரு விருப்பத்துடன் படிக்கின்றனர்; இயலும் வரை நல்ல தமிழில் எழுதப் பெற்றுள்ள நூல்களையே விரும்பிப் படிக்கின்றனர்; சங்ககாலத்தைப் போலவே சாதிகளற்ற சமுதாயத்தை அமைக்க முயல்கின்றனர். அதன் பயனாகக் கலப்புத் திருமணங்கள் இப்போது பெருகி வருகின்றன.

காலத்துக்கு ஏற்பக் கவிஞர் தோன்றுவர் என்பது பெரியோர் வாக்கு. சீர்திருத்தம் தேவைப்படும் இக்காலத்தில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், முடியரசன் போன்ற கவிஞர்கள் தோன்றிச் சீர்திருத்தக் கருத்துக்களைத் தம் செய்யுட்கள் வாயிலா

கச் சமுதாயத்தில் நுழைத்துவிட்டனர்; இன்றும் கவிஞர் பலர் இத்துறையில் பாடுபடுகின்றனர்.

வழக்கொழிந்த தமிழிசை சர். அண்ணுமலேச் செட்டியார் அவர்களது பெருமுயற்சியினுல் இன்று அரங்கேறியிருக்கின்றது. அவர் குடும்பத்தார் அதனை வளர்ப்பதைத் தம் கடமையாகக் கொண்டுள்ளனர். தமிழுணர்ச்சி மிகுந்துள்ள இக்காலத்தில் தமிழிசை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகிறது. அறிவு சான்ற நமது கல்வி அமைச்சர் தமிழை ஆட்சி மொழியாக் கொண்டுவந்துள்ளார். தமிழர் தங்கள் திருமணங்களைத் தமிழிலேயே நடத்துகின்றனர். கோவில்களிலும் தமிழில் வழிபாடு வேண்டும் என்னும் கிளர்ச்சி நடந்து வருகிறது. தமிழை இழித்தும் பழித்தும் பேசியவர் கண்டிக்கப்படுகின்றனர். தமிழ் உணர்ச்சி தமிழரிடையே எந்த அளவு பரவியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள இவையெல்லாம் ஏற்ற சான்றுகளாகும்.

# 10. தமிழர் வாழ்வு

## தமிழ் இனம்

தமிழ் ஒரு தனி மொழி. எனவே, தமிழ் பேசிவந்த பண்டை மக்களும் ஒரு தனி இனத்தவர் ஆவர். வெளிநாடுகளில் ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் இன உணர்ச்சியோடும் மொழி உணர்ச்சியோடும் வாழ்ந்துவருதல் போலவே நமது தமிழ் மக்களும் 2000 ஆண்டுகட்கு முன் இனவுணர்ச்சியுடனும் மொழி உணர்ச்சியுடனும் நல்வாழ்வு வாழ்ந்துவந்தனர். இனம் என்பதும் நாடு என்பதும் மொழி கொண்டே அமைக்கப் படும் பெயர்கள். தமிழ் மொழியைக் கொண்டே தமிழினம், தமிழ்நாடு என்று குறிக்கின்றோம்.

ஒரு மொழியைப் பேசுகின்ற மக்கள் தம்முள் மனம் கலந்து ஒற்றுமையுடன் வாழ்வதால் அவர்தம் மொழி யும் கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் நாகரிகமும் பண்பாடும் தனி முறையில் வளர்ச்சி பெறுகின்றன; தங்கள் நாட்டிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற முறையில் வாழையடி வாழையாகத் தம்மிடையே இருந்துவரும் பழக்க வழக்கங்களையும் பிறவற்றையும் படிப்படியாக வளர்க்கின்றனர். இந்த முறையில்தான் பண்டைக் காலத்தில் நம் நாட்டில் பல இனங்கள் தனித்தனியே வாழ்ந்துவந்தன. ஒவ்வொரு இனத்திற்கும் தனியரசு இருந்தது; தனிப் பண்பாடு இருந்தது; இலக்கியம் இருந்தது.

## தொல்காப்பியம்

இன்று உள்ள நூல்களுள் காலத்தால் பழமை யானது தொல்காப்பியம் என்பது; ஏறக்குறைய 2000 ஆண்டுகட்கு முற்பட்டது. அதன் ஆசிரியரான தொல்காப்பியர் தமிழ் மொழியில் பல இலக்கண நூல்கள் இருந்தன என்று பல இடங்களில் கூறியுள்ளார். எனவே தொல்காப்பியர்க்கு முன்பே பல இலக்கண நூல்கள் இருந்தமை தெரியும். பழைமையும் பெருமையும் வாய்ந்த தொல்காப்பியத்திலேயே மிகச் சில வட மொழிச் சொற்களே காணப்படுகின்றன. எனவே, வட மொழி பேசிய மக்கள் தென்னாட்டில் வந்து தங்கிய பிறகே தொல்காப்பியம் செய்யப்பட்டது என்று கருதலாம். அவர்கள் தமிழ்நாடு வருவதன் முன்னர்த் தனித் தமிழ்தானே இங்கு ஆட்சி செய்திருத்தல் வேண்டும்? எனவே தொல்காப்பியரால் குறிக்கப்படும் இலக்கண நூல்கள் தனித் தமிழ் இலக்கண நூல்களாக அன்றோ இருந்திருத்தல் வேண்டும்? எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவதுபோல, இலக்கியத்திலிருந்து எடுக்கப் படுவது இலக்கணம். ஆதலால் தொல்காப்பியர்க்கு முன்னர் இருந்த தனித் தமிழ் இலக்கண நூல்கள் வரையப்படுவதற்கு மூலகாரணமாகத் தனித்தமிழ் இலக்கிய நூல்கள் மிகப் பலவாக இருந்திருத்தல் வேண்டும் எனக் கருதுதல் பொருத்தம் உடையது. எனவே, வடமொழி யாளர் தமிழகம் வருவதற்கு முன் தமிழ்மொழி வேற்று மொழிக் கலப்பின்றி இருந்தது, தமிழ் மக்கள் வேற்று மொழிக் கலப்பின்றி வாழ்ந்தனர் என்று கூறுதல் பொருத்தமாகும்.

ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முன் தமிழில் வட மொழிக் கலப்பு ஏற்பட்டது, தமிழகத்தில் வடமொழி யாளர் குடிபுகுந்தனர் என்று வரலாற்று அறிஞர் கருது

கின்றனர். அக்காலந்தொட்டு வடமொழியாளர் தமிழ் பயின்று தமிழ் மக்களோடு பழகினர் தமிழில் பேசினர்; தமிழில் எழுதினர்; தமிழிற் பாடினர். இம்மக்கள் தங்கள் வடமொழி யறிவாலும் பிற ஆற்றல்களாலும்—சிறப்பாகச் சமயத்துறை ஆற்றலாலும்—தமிழ் அரசர்களிடம் செல்வாக்குப் பெற்றனர். கபிலர், பரணர் போன்ற புலவர்கள் வடமொழியாளர். தமிழ் மக்களோடு நெருங்கிப் பழகி, அவர் மொழியைத் தம் மொழியாக்கிக் கொண்டு பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் தம்முடைய வடமொழிச் சொற்களைச் சிலசிலவாகத் தம் பேச்சிலும் பாக்களிலும் புகுத்தலாயினர். அவர்தம் வேதநெறி தமிழகத்தில் அரசரால் ஆதரிக்கப்பட்டது. எனவே அந்நெறிக்குரிய வட சொற்கள் தமிழில் புகலாயின.

### சாதிகளின் தோற்றம்

வடநாட்டில் ஏற்பட்டிருந்த பிராமணர், க்ஷத்திரியர், வைசிகர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகள் தமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் இருந்தில. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. வேளாளர் முதலிய எல்லாத் தமிழினங்களும் சூத்திரர் என்றே கருதப்பட்டன. இந்த இனங்கள் மற்ற மூன்று இனங்களையும் தம் தொண்டினால் வாழ்விக்கக் கடமைப்பட்டவை என்ற நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமை தமிழகத்திற்குப் புதியது.

நாடாண்ட தமிழ் அரசன் விஷ்ணுவின் அவதாரம் என்று கூறப்பட்ட காரணத்தால் அவன் இப்பிரிவுகளை வரவேற்றான் என்று நினைக்கத்தக்க நிலையில் இப்புதிய பிரிவுகள் வேரூன்றலாயின. நிலம்பற்றி உண்டான இடையர் போன்ற பெயர்களும், பண்புபற்றி வந்த

மறவர் போன்ற பெயர்களும், அலுவல் பற்றி வந்த பறையர் போன்ற பெயர்களும் நாளடைவில் பிறவி பற்றிய சாதிப் பெயர்களாக மாறிவிட்டன.

## சங்ககாலத்துக்குப் பின்

சங்ககாலத் தமிழன் சாதியறியாதவன் ; தமிழனும் தமிழச்சியும் ஒருவரை ஒருவர் விரும்பி மணந்துகொண் டனர் ; தொழில் பற்றிய பிரிவுகள் பிறவிபற்றிய சாதிக ளாக மாறிய பிறகு, ஒவ்வொரு சாதியிலேயே 'கொள் வினை கொடுப்பினை' ஏற்படலாயின. இந்த நிலைமை யைத் தேவார காலத்தில் காண்கிறோம். "குணம் பேசிக் குலம் பேசிக்" காரைக்கால் அம்மையார் திரு மணமும் திலகவதியார் திருமணமும் ஏற்பாடான செய்தி யைப் பெரிய புராணத்தால் அறிகிறோம்.

சாதியற்ற சமணத்தையும் பௌத்தத்தையும் ஒடுக் கப் புறப்பட்ட சைவமும் வைணவமும் தம்மிடையே தோன்றியிருந்த சாதி வேறுபாடுகளை மறைக்க முற்பட் டன; "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், சிவ பெருமானுக்கு அடியவராகில், அவரே யாம் வணங்கும் கடவுள்", என்று திருநாவுக்கரசர் கூறுவது காண்க. இவ்வாறே ஆழ்வார்களும் பாடியுள்ளனர். சமணமும் பௌத்தமும் ஒடுக்கப்பட்ட பிறகு, நாயன்மாராலும் ஆழ்வார்களாலும் அழுத்தப்பட்டிருந்த சாதி வேறுபாடு கள் தலைதூக்கிக் களிநடம் புரியத் தொடங்கின. பிற் காலச் சோழர் காலத்தில் இச் சாதிவேறுபாடுகள் மிகக் கடுமையான நடைமுறையில் கொண்டுவரப்பட்டன. இன்னின்ன வகுப்பார் காலில் செருப்பணிந்து தெருவில் நடக்கலாகாது, இன்னின்ன வகுப்பார் மாடிவீடு கட்ட லாகாது, இன்னின்ன வகுப்பார் இவ்வளவு தூரத்தில் நின்று பேசவேண்டும், இன்னின்ன வகுப்பார் கோவி

லுக்குள் வரலாகாது என்ற வரையறைகள் கடுமையா கக் கவனிக்கப்பட்டன. இப்பாழான வேறுபாடுகளால் சமுதாயம் ஒருமைப்பாட்டை இழந்து, உயிர் நாடி இழந்து வலிமையற்றுவிட்டது. இதனுற்ருன் மிகச் சிறிய தொகையினர் படையெடுத்து வந்தபோது தமிழ்ச் சமுதாயம் எதிர்த்து நிற்க ஆற்றலின்றி அடி பணிந்தது. தமிழரசர்கள் ''மநுநீதி தவருமல் அர சாண்டோம்'' என்று வெட்கமின்றித் தங்கள் கல்வெட் டுக்களிலும் பட்டயங்களிலும் கூறிக்கொண்டனர்.

ஒவ்வொரு சாதியாரும் தம் சாதியாரின் முன்னேற் றத்தைக் கருதினரேயன்றிப் பிற சாதியாரைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. இந்த இழிநிலை சித்தர்களால் கண்டிக்கப்பட்டது; இராமலிங்க அடிகளால் கண்டிக்கப் பட்டது; இந்தியா முழுவதிலும் இருந்த அறிஞர்களால் கண்டிக்கப்பட்டது.

ஆங்கிலக் கல்வியாலும், உலக அறிவாலும் இவ் வேறுபாடுகள் இன்று குறைந்து காணப்படுகின்றன. ஆயினும் இவற்றை அடியோடு ஒழிக்க இன்றளவும் சட்டம் செய்யப்படாதிருப்பது வருந்தத்தக்கது. இச் சமுதாயம் உயரவேண்டுமாஞல் கட்டாயக் கலப்பு மணச்சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலாக்கப்படுதல் வேண்டும். அது வராத வரையில் இச்சமுதாயம் உய ராது. பிரசாரத்தாலோ, அன்பு மொழியாலோ, பஜனை செய்வதாலோ இச்சாதி வேறுபாடுகள் ஒழியா.

இந்தியாவில் உள்ள நாற்பதிஞயிரம் சாதிகள் இருந்துகொண்டேதான் இருக்கும். நமது நற்பேற்றின் பயஞக முதல் அமைச்சராக உள்ள காமராசர் இத்துறை யில் மிக்க கவலை கொண்டிருப்பதைப் பாராட்டுகிருேம். ஒரு இனத்தாரே அரசாங்க அலுவல்களில் ஆதிக்கம்

பெறுவதையும் ஒரு இனத்தாரே தொழில் துறையில் ஆதிக்கம் பெறுவதையும் வளரவிடுதல் சமுதாயத்துக்குப் பெருங்கேடு பயப்பதாகும். எல்லா மக்களும் ஒன்றுபட்டு வாழவும் சம உரிமை பெறவும் எல்லோருக்கும் பொருளாதார நிலை சீர்படவும் சாதி ஒழிப்பு இன்றியமையாதது.

## முடிவுரை

தமிழகத்துத் தலைவர்கள் வாய்ச்சொல் வீரராக இருப்பதில் பயனில்லை; செயல் வீரர்களாக மாறவேண்டும். நாடு விடுதலைபெற்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் சமுதாய வாழ்வு இன்றளவும் சிறப்புறவில்லை. தமிழ் நாட்டில் தமிழன் தன் உரிமை இழந்து நிற்கின்றான்; இலங்கையில் இருந்து விரட்டப்படுகின்றான். தமிழனுக்குத் தன்மான உணர்ச்சி ஆமை வேகத்தில் உண்டாகிறது. இந்த இழிநிலை மாறவேண்டும். தமிழர் அனைவரும் ஒரு தாய் ஈன்ற மக்களாக எண்ணும் மனநிலை வளரவேண்டும். பாழான கட்சி வேறுபாடுகளால் தமிழ் இனம் அல்லல் படுகிறது. ஒருவரை ஒருவர் பொருத்தம் இன்றித் தாக்கிப் பேசுகின்றனர். இந்தச் சூழ்நிலை மாறவேண்டும். இவை யனைத்தும் நீங்கித் தமிழகத்துப் பல கட்சித் தலைவர்கள் அடிக்கடி சந்தித்துத் தமிழ் உணர்ச்சியோடு பழகுதல் வேண்டும். கட்சி வாழ்வைவிடத் தமிழ் வாழ்வே தமிழ் இனத்தை வளர்க்கும் அருமருந்தாகும். இந்த உண்மையைக் கட்சித் தலைவர்கள் உணரும் நாளே தமிழர் நல்வாழ்வு வாழும் நன்னாள் ஆகும்.

# 11. தமிழ்வளர்க்கும் தனவணிகர்

## முன்னுரை

தனவணிகர் திருச்சி மாவட்டத்திலும், புதுக்கோட்டைச் சீமையிலும், இராமநாதபுர மாவட்டத்திலும் 96 நகரங்களை அமைத்துக்கொண்டு பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகின்ற வணிகப் பெருங்குடி மக்களாவர். அவர்கள் திரைகடல் ஓடிப் பொருளீட்டி வருகின்றனர்; சைவ சமயத்தினர்; பெரும்பொருட் செலவில் பாடல்பெற்ற கோவில்களைப் பழுதுபார்த்துச் சமயப் புகழ்பெற்றவர்; தேவாரப்பள்ளி, வேதப்பள்ளி, பசுமடம் முதலியவற்றை ஆங்காங்கு அமைத்தவர்.

இங்ஙனம் சமயத்துறையிலே பொருளைச் செலவழித்துவந்த அவ்வணிகர் சென்ற முப்பது ஆண்டுகளாகக் கல்வித்துறைக்கும் செலவழித்து வருகின்றனர். இக்காலத்திற்கேற்ற அறச்செயல் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்தலேயாகும் என்பதை நன்குணர்ந்த அப்பெருமக்கள், தாங்கள் வாழும் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வோர் உயர்நிலைப்பள்ளியைத் தோற்றுவித்தனர். அதுகாறும் தொடக்கப்பள்ளியோடு நின்றிருந்த தனவணிகப் பிள்ளைகள் இவ்வறச்செயலால் உயர்நிலைக் கல்வி கற்க வசதி ஏற்பட்டது.

## அண்ணாமலையார் அறம்

தனவணிகச் செல்வருள் பெரும்புகழோடு விளங்கிய இராசா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தில்லையை அடுத்த திருவேட்

களத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். அப்பல்கலைக் கழகத்தில் கலைக் கல்லூரி, தமிழ்மொழிக் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, இசைக் கல்லூரி முதலியன செயற்பட்டன.

அப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலவர் தேர்வுகள் இருந்தனவே தவிர, தமிழைக் கற்பிக்கக் கல்லூரிகள் இல்லை. புலவர் பட்டம்பெற விரும்பியவர் தாமே படித்து இடர்ப் பட்டனர். இக்குறையை முதலில் நீக்கிய பெருமை அண்ணுமலை அரசர்க்கே உரியது. அப்போது தமிழகத்தில் புகழ்பெற்றிருந்த பெரும் புலவர்களையெல்லாம் தமிழ்க் கல்லூரியில் அமர்த்தி ஆதரித்த பெருமையும் அண்ணுமலை அரசரையே சாரும். தமிழாசிரியருக்கு ஆசிரியப் பயிற்சிப் பள்ளியும் அண்ணுமலையில் தோற்றுவிக்கப்பட்டது. ஆண்டு தோறும் தமிழாசிரியர்கள் பலர் அங்குச் சென்று பயிற்சி பெற்றுப் பயன்பெற்றனர். டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர், கா. சு. பிள்ளை, விபுலாநந்த அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டித மணி கதிரேசச் செட்டியார், பன்மொழிப் புலவர் மீனுட்சி சுந்தரனுர், டாக்டர் சிதம்பரநாதச் செட்டியார் என்னும் பெருமக்கள் தமிழ்த்துறைத் தலைவர்களாகப் பணியாற்றினர். அக் கல்லூரியிலிருந்து இந்த முப்பது ஆண்டுகளாகப் புலமை பெற்று வெளிவந்த புலவர் பல நூற்றுவராவர். தமிழில் எம் ஏ. வகுப்பும் அங்கு நடைபெற்று வருகின்றது. அதனில் படித்துத் தேறிய பட்டதாரிகள் இந்தியா முழுவதும் பரந்து இருக்கிறுர்கள். அவர்கள் நாளும் அண்ணுமலைப் பெருமானை வாழ்த்திவருகின்றனர்.

இன்று அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அண்ணுமலை அரசரின் திருமகனுரான இராசா. சர். முத்தைய செட்டியார் அவர்களது சீரிய மேற்பார்வையில் நடை

பெற்றுவருகிறது. இன்று தமிழ்த்துறை கலைப்பிரிவு, தமிழ்ப்பிரிவு, ஆராய்ச்சிப்பிரிவு, மொழிப்பிரிவு என நான்காகப் பிரிந்துள்ளது. கலைப்பிரிவுக்கும் மொழிப் பிரிவுக்கும் பன்மொழிப் புலவர் மீனாட்சி சுந்தரனார் அவர்களும், மொழிப்பிரிவுக்குப் பண்டித மணி இராமநாதச் செட்டியார் அவர்களும், ஆராய்ச்சிப் பிரிவுக்கு ஜி. சுப்பிர மணியப்பிள்ளையவர்களும் தலைவர்களாக அமர்ந்துள்ள னர். ஆராய்ச்சித் துறையிலிருந்து பயனுள்ள நூல்கள் வெளிவருகின்றன.

தமிழிசையை உயிர்ப்பித்த பெருமையும் அண்ணா மலை அரசர்க்கே உரியதாகும். பெரும்பாலும் இறந்து விட்டதென்று கருதப்பட்ட தமிழிசைக்குப் புத்துயிர் கொடுத்து நாட்டில் நடமாட விட, அண்ணாமலை அரசர் அரும்பாடுபட்டார். இன்று ஒவ்வோர் இசையரங்கிலும் தமிழ்ப்பாக்கள் பாடப்பெறுகின்றன. அப் பெரியார் தோற்றுவித்த இயக்கத்தை அவர் திருமகனாரான இராசா—சர்-முத்தைய செட்டியார் அவர்கள் தொடர்ந்து நடத்திவருகிறார்கள்.

அவர்களது பெருமுயற்சியின் பயனாகத் தோன்றி யதே சென்னையிலுள்ள அண்ணாமலை மன்றம். தமிழில் புலவர் கல்லூரி அமைத்ததும் தமிழிசைக்கு உயிர் கொடுத்ததும் ஆகிய இருபெருஞ் செயல்களுக்குத் தமிழ் மக்கள் அண்ணாமலை அரசர்க்கும் அவர் குடும்பத்தார்க் கும் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்ட வராவர்.

## அழகப்பர் அறம்

காரைக்குடியில் கல்லூரியை அமைத்து உயர் கல்வி மணத்தை அப்பகுதியில் பரவச் செய்த பெருமை அழகப்பச் செட்டியார் அவர்களையே சாரும். அவர்

பொறியியற் கல்லூரி, கலைக்கல்லூரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, நன்முறைப் பள்ளி முதலிய பல கல்வி நிலையங்களை அமைத்த பெரியார். அப்பெரியார் தமிழின்பால் மிக்க பற்றுள்ளம் கொண்டவர்; கலைத்துறையில் சிறப்புத் தமிழ் வகுப்புக்களை ஏற்படுத்தினர். அவர் மறைவுக்குப் பின்பு அக் கல்லூரியில் தமிழ் எம். ஏ. வகுப்பும் தொடங்கப் பெற்றது. சிறந்த தமிழ்ப் பேராசிரியர் அங்குப் பணி புரிகின்றனர். இங்ஙனம் இராமநாதபுர மாவட்டத்தில் தமிழுக்குச் சிறப்பிடம் தந்து அதனை வளர்த்துவரும் பெருமை அழகப்பருக்கும் அவர்தம் அறநிலைய ஆட்சியாளருக்குமே உரியதாகும்.

## தியாகராயர் அறம்

சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த மதுரையில் பாண்டித்துரைத் தேவரது முயற்சிக்குப் பின்பு தமிழ் வளர்ச்சி மிகவும் குன்றியிருந்தது. அக்குறையை நீக்க அம் மூதூரில் ஒரு பெருமகனுர் தோன்றினர். அவரே பஞ்சாலைகள் பலவற்றின் உரிமையாளராக விளங்கும் கருமுத்து-தியாகராசன் செட்டியார் அவர்கள். அப்பெரியார் பல லட்ச ரூபாய்களைச் செலவிட்டுப் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கலைக் கல்லூரியைத் தோற்றுவித்தார்; நாளடைவில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, நன்முறைப் பள்ளி, பொறியியற் கல்லூரி என்பவற்றை மதுரையில் தோற்றுவித்தார். இளமை முதல் தமிழில் மிக்க ஈடுபாடு கொண்ட தியாகராசர், தமது கல்லூரியில் இடைநிலை வகுப்புக்களிலும் இளங்கலை வகுப்புக்களிலும் சிறப்புத் தமிழை ஏற்படுத்தினர். சிறப்புத் தமிழுக்கு வரும் மாணவர் தொகை மிகக் குறைவாகும். ஆயினும் பாடம் நடத்த ஆசிரியர் பலர் தேவை. இவ்வகுப்பு நடத்தப் பொருளிழப்பு மிகுதியாகும். இக் காரணத்தால்தான் பல கல்லூரிகளில் சிறப்புத் தமிழ் இடம்

பெறுவதில்லை. தமிழைத் தம் உயிரெனக் கருதியுள்ள தியாகராசர் இப் பொருளிழப்பைப் பொருட்படுத்த வில்லை. அவர் நாட்டில் பெயர்பெற்ற தமிழ்ப் பேராசிரி யர்களைத் தேடிக் கொணர்ந்து தம் கல்லூரியிற் பணி செய்யும்படி ஏற்பாடு செய்தார். இப்போது அக்கல்லூரி யில் தமிழ் எம். ஏ. வகுப்புச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழ் எம். ஏ. வகுப்பு இருக்கும் பிற கல்லூரிகளைக் காட்டிலும் இக் கல்லூரியில்தான் மாணவர் பலராகப் படிக்கின்றனர்.

இப்பெருமகனுர் தம் தாய்மொழியாகிய தமிழை ஒரு கண்ணுகவும் சைவ சமயத்தை மற்ருெரு கண்ணுக வும் மதிப்பவர். இவர் இவ்விரண்டு வளர்ச்சிக்காக வம் பாடுபட்டு வருபவர்; தமிழில் நல்ல புலமை யுடையவர்; "தமிழ்ப் பண்பாடு" என்னும் ஆங்கில இதழை நடத்தும் அமைப்பின் துணைத்தலைவர். தமிழ் சீரும் சிறப்பும் பெறவேண்டும் என்பதே இவரது குறிக் கோள்; அக் குறிக்கோளுக்காகவே தம் கல்லூரியில் தமிழ்ச் சிறப்பு வகுப்புக்களை நடத்திவருபவர்.

இவர், மேனுட்டு அறிஞர்களைப் போலவே தாம் செய்யும் சொற்பொழிவுகளை முன்பே சிந்தித்து எழுதி அச்சிட்டுப் படிக்கும் சிறந்த பழக்க முடையவர். அவரு டைய சொற்பொழிவுகளில், கருத்துக்கள் பருந்தும் அதன் நிழலும் போல ஒன்றையொன்று பிணைந்து செல் லும் அழகைக் காணலாம். இன்ன இடத்தில் இன்ன சொல்தான் இருக்கவேண்டும் என்று வரையறுப்பதில் இவர் இணையற்றவர்;சொல்லோசையை மிகவும் நுட்ப மாகக் கவனிப்பதில் தலை சிறந்தவர். இச் சீரிய பண்பு ஒவ்வொருவரிடத்தும் இருக்குமாயின், தமிழ் உரை நடை சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பெரியாரைப் போலவே இவர் மக்களும் தமிழி லும் சைவத்திலும் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள். மூத்த

மகனுர் திரு சுந்தரர் உலகம் சுற்றியவர்; பல கூட்டங்களில் தமிழைப் பற்றிப் பேசுபவர். கட்டுரைகளை எழுதுபவர்; இளையவர் திரு. மாணிக்கவாசகரும் உலகம் சுற்றியவர்; மிக நுண்ணிய ஆராய்ச்சி அறிவுடையவர்; சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம் இவை பற்றிய ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளவர். ஜப்பானைப்பற்றி அழகிய நூலை வெளியிட்டவர்; கூட்டங்களில் பேசிவருபவர்.

இக் குடும்பத்தார் நடத்திவரும் "தமிழ்நாடு" என்னும் நாளிதழ் நல்ல தமிழில் வெளிவரும் செய்தித்தாளாகும். தென் மாவட்டங்களில் இத் தாள் நல்ல தமிழை மக்களிடையே பரப்பிவருகின்றது. நம் நாட்டில் உலவும் செய்தித் தாள்கள் இதனைப் பின்பற்றி நல்ல தமிழில் விளங்குமாயின், விரைவில் பொது மக்களிடம் நல்ல தமிழ் பரவிவிடும்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் ஆதரவில் புலவர் கல்லூரி ஒன்று பல ஆண்டுகளாக நடந்துவருகின்றது. அதனைத் தனவணிகர் அடங்கிய சன்மார்க்க சபையினர் நடத்திவருகின்றனர். ஆயினும் அதனைப் பெரும் பொருட் செலவில் நடத்திவருபவர் 'சித' என்னும் சிதம்பரம் செட்டியாராவர். சிறந்த தமிழ்ப் பேராசிரியர் அங்குப் பணி புரிகின்றனர். ஆண்டு தோறும் மாணவர் பலர் புலவர் பட்டம் பெற்று அக் கல்லூரியிலிருந்து வெளிவருகின்றனர்.

தமிழை வளர்த்துவரும்—இதுகாறும் கூறப்பெற்ற—தனவணிகப் பெருமக்களுக்குத் தமிழகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

# 13. டாக்டர் சோமசுந்தர பாரதியார்

## எட்டய புரத்தில்

தமிழகம் போற்ற வாழ்ந்த டாக்டர் சோமசுந்தர பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர்; எட்டய புரத்தில் எண்பது ஆண்டுகட்கு முன் பிறந்தவர். அவர் தந்தையார் எட்டயபுர அரண்மனையில் உயர் அலுவலராக இருந்தவர். எனவே இளமை முதல் அரண்மனைச் சூழலில் அவர் வளர்ந்துவந்தார் என்று கூறுதல் பொருத்தமாகும். எட்டயபுர மன்னர் தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்துவந்தவர். நாள் தோறும் அம்மன்னர் புலவர் புடைசூழ வீற்றிருப்பதும், தமிழ்ச் செய்யுட்களை ஆராய்வதும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன.

காலஞ்சென்ற கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரும் எட்டயபுரத்தில் பிறந்து வளர்ந்தவரேயாவர். அவர் நம் சோமசுந்தர பாரதியாருடன் பள்ளித் தோழராகவும், விளையாட்டுத் தோழராகவும் விளங்கினார். இந்த அனைவருடைய சேர்க்கையால் நம் பாரதியாருக்கு இளமை முதலே தமிழ்ப்பற்று வேரூன்றி வளரலாயிற்று. அவரும் கவியரசர் போலவே இளமையில் செய்யுட்கள் இயற்றுவதில் ஈடுபட்டிருந்தார்.

## நல்லார் இணக்கம்

நம் பாரதியார் உயர்நிலைக் கல்வி முடித்த பிறகு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து கல்விகற்க

லானுர். அக்கல்லூரியில் தமிழ்ப் புலமையிலும் ஆராய்ச்சியிலும் அக்காலத் தமிழகத்தின் இரு மணிகளாக விளங்கிய வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் என்ற பரிதிமாற் கலைஞரும், சுவாமி வேதாசலம் என்ற மறைமலையடிகளும் தமிழ்ப் பேராசிரியர்களாய் இருந்தனர். அப்பெருமக்களுடைய இனிய தமிழ்ச் சூழ்நிலையில் வளர்ந்த காரணத்தினுல் பாரதியார் தமிழ்ப்பற்று மிகுந்த இளைஞராக வளரலானுர்; தாமே முயன்று தமிழ் நூல்களைப் படிக்கவும், பிறர் உதவியின்றி ஆராய்ச்சி செய்யவும் போதிய பயிற்சி அக்கல்லூரிப் பருவத்திலேயே பெற்ருர்.

மறைமலையடிகள் தனித் தமிழில் எழுதும் ஆர்வம் மிக்கவர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; இலக்கியத்திலும் ஆராய்ச்சியிலும் தாம் கண்ட முடிவுகளை எவர்க்கும் அஞ்சாமல் எடுத்துக் கூறும் ஆற்றல் படைத்தவர். இவ்வாறே பரிதிமாற் கலைஞரும் விளங்கினுர். தண்ணீர், தான் சேர்ந்த இடத்தின் நிறத்தை அடைவது போல நம் பாரதியார் தம் பேராசிரியர்களின் பண்பு நலன்கள் கைவரப்பெற்றவராய் விளங்கினுர். அவரிடம் உண்மை பேசுதல், அஞ்சாமை, சிறந்த ஒழுக்கம் முதலிய நற்பண்புகளைக் கண்ட பேராசிரியர்கள், ‘பாரதியார் எதிர்காலத் தமிழகத்தின் சிறந்த தமிழ்ப் பேராசிரியராக விளக்கம் பெறுவார்’ என்று அக்காலத்திலேயே சோதிடம் கூறினர்.

## வழக்கறிஞர்

பாரதியார் பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு சட்டக் கல்லூரியிற் பயின்று பி. எல். பட்டம் பெற்ருர்; பின்பு தாமே படித்து எம். ஏ. பட்டம் பெற்ருர்; தூத்துக்குடியிற் குடியேறிப் பல்லாண்டுகள் வழக்கறிஞர் வேலை

பார்த்தார். திருக்குறள் படித்த பாவம், அவர் அத் தொழிலில் பெரும் பொருள் ஈட்ட முடியவில்லை. பொய்யை மெய்யாக்குவதும், மெய்யைப் பொய்யாக்கு வதும் வழக்கறிஞர் சிலர் வேலைகள் என்பர். ஆயினும் நம் பாரதியார் இதற்கு விலக்காக விளங்கினர். . அவர் தம்மிடம் வரும் வழக்கினை நன்கு ஆராய்ந்த பிறகே— தம்மிடம் வந்த ஆளுக்கு நியாயம் கிடைக்க வேண்டுவது நேர்மையானதுதான் என்பதை அறிந்த பிறகே—அவ்வழக்கின் சார்பில் வாதாட இசை வார்; தம் கட்சிக்காரர்களிடம் நேர்மையில்லைஎன்றறிந்த வுடன் அவர் பக்கம் பேச இசையார். இது அவர்பால் காணப்பட்ட மிகச் சிறந்த பண்பாகும். இளமை முதல் உண்மையே பேசிவந்த அப்பெருமகனர், உண்மை ஒன்றிற்கே வழக்கறிஞராக விளங்கினர் என்பது எவ் வளவு பொருத்தமாக இருக்கிறது!

இங்ஙனம் பாரதியார் ஏறத்தாழ முப்பது ஆண்டு களுக்குமேல் தூத்துக்குடி, மதுரை முதலிய இடங்களில் உண்மை வழக்கறிஞராக இருந்து நற்பெயர் பெற்றார்; நடுவுநிலை உள்ளம் வாய்ந்த நல்ல நீதிபதிகள் அவர்பால் மிக்க அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். பாரதியார் வாதத்திறமையிலும் நல்ல பெயர் பெற்றார்; ஆங்கிலத்தில் நன்ருகப் பேசும் ஆற்றல் பெற்றிருந்தார்; தெளிந்த உள்ளமும் நல்ல பேச்சாற்றலும சிறந்த ஒழுக்கமும் ஆகிய மூன்றுமே அவரது வழக்கறிஞர் வாழ்வை ஒளி பெறச் செய்தன.

## ஆராய்ச்சி அறிஞர்

பாரதியார் பெற்ற வழக்கறிஞர் அறிவு, தமிழ் நூல் களைப் படிக்கப் பேருதவி செய்தது. அவர் எதை எடுத்தாலும் ‘ஏன்? எப்படி?’ என்ற கேள்விகளைக்

கேட்டுக்கொண்டே அவ்வினுக்களுக்கேற்ற விடை காணுவதில் பெரும் பொழுதைச் செலவழித்தவர். இங்ஙனம் பல்லாண்டுகள் வழக்கறிஞர் தொண்டோடு தமிழ் ஆராய்ச்சியையும் நடத்திவந்த அப்பெரியார், கம்ப ராமாயணத்தில் ஆழ்ந்து படித்துப் பல அரிய உண்மைகளைக் கண்டார்; தாம் கண்ட . உண்மைகளின் கோவையைத் "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்ற தலைப்பில் அமைத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினர். பெரும் புலவர் களும் அநுபவம் வாய்ந்த வழக்கறிஞரும் அவ்வாராய்ச் சிச் சொற்பொழிவைக் கேட்டு வியப்புற்றனர்; பாரதி யாரை உளமாரப் பாராட்டினர். அப்பொழுதுதான் தமது ஆராய்ச்சி பயனுடையது என்ற எண்ணம் பாரதியாருக்கு வலுப்பட்டது. பின்பு அவர் அதனை ஒரு நூலாக வெளியிட்டார்.

சேரர் தலைநகரம், மேல் கடற்கரையில் இருந்து அழிந்த வஞ்சிமாநகரமா, அல்லது கொங்கு நாட்டில் இன்றுள்ள கரூர் எனப்படும் வஞ்சிமாநகரமா என்பது பற்றி அறிஞர் பலர் ஆராய்ந்துகொண்டிருந்தனர். பாரதியாரும் அவ்வாராய்ச்சியிற் புகுந்து, மேலைக் கடற்கரைக்கண் இருந்தழிந்த நகரமே சேரர் பேரூர் என்று முடிவுகொண்டு, "சேரர் பேரூர்" என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார்.

இக்காலச் சேர மன்னர்கள் மருமக்கள் தாய முறையை உடையவர். இம்முறை சங்க காலச் சேரரிடம் இருந் ததா என்பதை அறிய அக்கால அறிஞர் சிலர் தலைப் பட்டனர்; பாரதியாரும் அத்துறையில் நுழைந்து ஆராய்ந்தார்; சங்க காலத்தில் மருமக்கள் தாய முறை தான் இருந்தது என்று முடிபு கொண்டார். அம்முடிபு ஒரு சிறு நூலாக வெளிவந்துள்ளது.

திருவள்ளுவர் பிறப்பைப் பற்றிப் பல கதைகள் அக் காலத்தில் வழங்கிவந்தன. கண்டவர் கண்டவாறு கூறிவந்தனர். திருவள்ளுவர் காலத்தை அறுதியிடுவது மிகவும் இன்றியமையாதது என்பது பாரதியார் எண்ணம். அதனால் அப்பெருமகனார் நன்கு ஆராய்ந்து நடுவுநிலை பிறழாமல் பல சான்றுகளைக் காட்டி வள்ளுவர் உயர்ந்த அரசியல் அலுவலாளர் (உள்படு கருமத் தலைவர்—Under Secretary) என்பதை நிலை நாட்டினார்; வள்ளுவருடைய குறட்கருத்துக்களும் தொடர்களும் சொற்களும் எட்டுத் தொகை நூல்களில் புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதற்குரிய சான்றுகளைக் காட்டி, அதனால் அப் புலவர்களுக்கு முற்பட்டவர் திருவள்ளுவர் என்பதை அழகுற நிறுவியுள்ளார். இது பற்றிய சொற்பொழிவு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்ததாகும். அச்சங்கத்தார் அவ்வாராய்ச்சியை ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறு நூல்களாக வெளியிட்டு மகிழ்ந்தனர்.

## சிறந்த பாவலர்

வழக்கறிஞர் வேலைபார்த்த பாரதியாரை இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமது பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக ஐந்து ஆண்டுகள் இருந்து பணியாற்றும்படி வேண்டிக்கொண்டார். பாரதியார் அப்பேராசிரியர் பதவியில் ஐந்து ஆண்டு கள் இருந்தார். அப்பொழுது "மாரி வாயில்" என்னும் செய்யுள் நூலைப் பாடி அப்பல்கலைக்கழகத்தில் கூடிய புலவர் பேரவையில் அரங்கேற்றினார். அண்ணாமலை அரசர் பாரதியாருக்கு அப்பொழுது மரியாதை செய்தார்.

மாரி வாயில் என்பது யாது ? அருச்சுனன் தீர்த்த யாத்திரையின்போது பாண்டியன் மகளை மணந்து

சிறிது காலம் அவளுடன் வாழ்ந்து பிரிந்துவிட்டான் என்பது பாரதச் செய்தி. அவள் அவனைத் தேடிக் கொண்டு குமரி முனைக்குச் சென்றதாகவும், அங்கு அவன் காணப்படாமையால், அங்குத் தோன்றிய மேகத்தை அவன்பால் தூதுவிட்டதாகவும் இயங்கு வதே மாரிவாயில் என்பது. குமரி முனையிலிருந்து அத்தினபுரம் வரையில் வழியிலுள்ள மலைகளையும் நான்கு நிலப்பகுதிகளையும் அவற்றின் இயற்கை அமைப்புக்களை யும் இந்நூல் விரிவாகக் கூறிச் செல்கிறது. நமது தாய் மொழியான தமிழின் சிறப்பைத் தக்க இடங்களில் கவிஞர் கூறிச் செல்வது அவரது தமிழ்ப்பற்றை நன்கு விளக்குகின்றது. செய்யுட்கள் பாரதியாரின் கற்பனைத் திறனையும் பெரும் புலமையையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

பாரதியார் "மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி" என்னும் மற்றொரு செய்யுள் நூலையும் செய்துள்ளார்.

## தொல்காப்பிய உரையாசிரியர்

தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணத்தைப் பாடம் சொல்லுவதில் பாரதியார் சிறந்து விளங்கினர். நச்சினர்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் தவறு செய்த இடங்களைச் சுட்டிக்காட்டிப் பொருத்தமான உரை கூறுவதில் பாரதியார் பெயர் பெற்றவர் என்று டாக்டர் சிதம்பரநாதச் செட்டியார் போன்ற பாரதியார் மாணவர்கள் அடிக்கடி கூறுவது வழக்கம். இங்ஙனம் புதிய உரை கூறிவந்த பாரதியார் தொல்காப்பியம்— அகத்திணை இயல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றிற்கும் புத்துரை எழுதி முடித்துள்ளார். தமிழ் எம். ஏ. வகுப்பு மாணவர்களும் ஆராய்ச்சி மாண வர்களும், புலவர்களும் இப்புத்துரையைப் பாராட்டிப் பேசுகின்றனர்.

## பெருநாவலர்

முறுக்கிய மீசையோடு கூடிய பாரதியார் முகம் கண்ணைக் கவரத்தக்கது. அவரது பேச்சுக் கேட்கக் கேட்க இனிப்பாக இருக்கும். அவர் கூறும் செய்தி களோ நிறைந்த தமிழ்ப்பற்றை உள்ளடக்கி இருக்கும். அவருடைய ஒவ்வொரு சொற்பொழிவிலும் அதுகாறும் எந்தத் தமிழறிஞரும் கூறாத சில புதிய கருத்துக்கள் அடங்கி இருக்கும். "இவர் இன்னும் சிறிது நேரம் பேசாமல் பேச்சை முடித்துவிட்டாரே!" என்ற ஏமாற் றத்தோடுதான் கேட்பவர் கூட்டத்தினின்று செல்வர்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்னும் குறளுக்கு இவரது பேச்சுச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

## தமிழர் பாராட்டு

இப்பெருமகனாரின் நாவன்மையைப் பாராட்டித் தமிழறிஞர் "நாவலர்" என்ற பட்டத்தை அளித்து மகிழ்ந்தனர். இவரது சிறந்த புலமையைப் பாராட்டி மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் இவருக்குக் "கணக்காயர்" என்றும் பட்டத்தை வழங்கிச் சிறப் பித்தனர். இவரது புலமையையும் ஆராய்ச்சியையும் பாராட்டி அண்ணாமலைப் பல்கலைக்கழக அதிகாரிகள் "இலக்கியப் பேரறிஞர்" (D. Litt.) என்னும் பெரும் பட் டத்தை அளித்து மகிழ்ந்தனர்.

இப்பன்னலங்களும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற இப்பேரறிஞரது மறைவு நம் தமிழகத்திற்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாகும்.

# 14. அகப்பொருளும் பத்தி நெறியும்

## பொருள் இலக்கணம்

உலகத்திலுள்ள ஒவ்வொரு மொழியிலும் இலக்கண நூல்கள் உண்டு. எனினும் அவை மொழி இலக்கணத்தையே எடுத்தோதுவனவாகும். ஆயின் தமிழ் இலக்கணம் தமிழ் மொழியின் இலக்கணத்தையும் அம்மொழியினைப் பேசும் மக்களது வாழ்க்கையின் இலக்கணத்தையும் எடுத்துக் கூறுதல் வியத்தற்பாலது. இத்தகைய தனிச்சிறப்புத் தமிழ் மொழி ஒன்றுக்கே உண்டு. இஃதொன்றே தமிழரது நாகரிகம், உலக மக்களின் தனிப்பட்ட நாகரிகத்தைவிட மிகச் சிறந்தது என்பதற்குப் போதிய சான்ருகும். வாழ்க்கையின் இலக்கணம் - அக இலக்கணம், புற இலக்கணம் என இரு வகைப்படும். ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற வாழ்க்கையின் விவரங்களை விரித்துக் கூறுதல் அகப்பொருள் இலக்கணமாகும். அஃதாவது, இன்பப் பகுதியே அகப்பொருளாகும். அறம், பொருள், வீடு என்னும் மூன்று பேறுகளைப் பற்றிய செய்திகளைக் கூறும் இலக்கணம் புறப்பொருள் இலக்கணம் எனப்படும். அஃதாவது, ஒருவனது வாழ்க்கையின் இன்பப் பகுதி நீங்கலாக உள்ள ஏனைய செய்திகள் புறப்பொருள் என்று தொல்லாசிரியரால் கொள்ளப்பட்டன. ஆகவே, பண்டைத் தமிழர் பாங்குற வகுத்த அகம், புறம், என்ற இரண்டனுள் வட மொழியாளர் வகுத்துக் கூறும் பேறுகள் நான்கும் (அறம், பொருள் இன்பம், வீடு) அடங்குதல் காண்க.

### வாழ்க்கையின் உயிர்நாடி

மனிதப் பேறுகள் நான்கனுள் அகப்பொருளென்னும் இன்பப் பகுதியே வாழ்க்கையின் உயிர் நாடியாக விளங்குவது. மனிதன் இன்பம் பற்றியே பொருளைத் தேடுகிறான்; பொருள் கொண்டு அறஞ் செய்கிறான். இம் முப்பேறுகளும் செம்மையுறச் செய்பவன் நான்காம் பேற்றை இயல்பாகவே அடைவான். இதனாற்றான் பண்டைத் தமிழர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுமே வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்துவந்தனர் என்பது சங்கப் பழம் பாடல்களால் அறியக் கிடக்கிறது. தொல்காப்பியர்க்கு முற்பட்ட தொல்லாசிரியர்கள் வகுத்த அகம், புறம் என்னும் இரண்டு பகுதிகளையும் தழுவி, தம் காலத்திய மாறுதல்களையும் உள்ளடக்கித் தொல்காப்பியர் எழுதியுள்ள பொருள் இலக்கணம் ஒன்றே இன்றுள்ள சிறந்த அடிப்படை இலக்கண நூலாகும். அதனை இலக்கணமாகவும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலியவற்றையும், திருக் கோவையார் முதலியவற்றையும் இலக்கியமாகவும் கொண்டு ஆராயின், பழந் தமிழ்ப் பெருமக்கள் பகுத்தறிவோடு அமைத்த அகப்பொருளென்னும் அழகிய இன்பமாளிகையைக் கண்டு களிக்கலாம். இவற்றுடன் சைவசமய ஆசிரியர்கள் பாடியருளிய திருமுறைகளையும் ஆழ்வார்கள் பாடியருளிய அருட்பாடல்களையும் பக்கத்தில் வைத்து உணர்ச்சியோடு படிக்கப் படிக்க, அப்பக்த சிகாமணிகள் அகப்பொருள் இலக்கணத்தைத் தமது பத்தி நெறிக்கே உயிர் நாடியாகக் கொண்டிருந்தனர் என்பது தெள்ளிதில் உணரலாம்.

### அகப்பொருள் இலக்கணம்

இவ்வகப் பொருள் இலக்கணத்தை ஆராய்வதால் பண்டைத் தமிழ் மக்கள் மணம் செய்துகொள்ளும்

முறைமை, அவர்தம் காதல் வாழ்க்கை, தலைவன் தலைவியரது இன்பத்திற்கு உதவும் பாங்கன், பாங்கியர், களவுப் புணர்ச்சியில் தலைவியும் தோழியும் தலைவனைச் சோதிக்கும் முறைகள், தனக்கு உண்டாகும் பல இடுக்கண்களைப் பொருட்படுத்தாமல் தலைவியை அடைவதில் தலைவன் கொள்ளும் முயற்சி, களவு வெளிப்பட்டபின் இருதிறத்துப் பெற்றோரும் நடந்துகொள்ளும் முறைமை, பெற்றோர் உடன்படாதபோது தோழி தலைவியைத் தலைவனோடு கூட்டியனுப்புதல், அங்ஙனம் அனுப்பும் போது அவள் தலைவனிடம் கூறும் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவுரை, காதலர்க்குள் ஏற்பட்ட களவைத் தோழி தாய்மார்க்குக் குறிப்பாக உணர்த்தும் திறமை முதலியவற்றை நாம் அறிந்து மகிழலாம்.

## களவொழுக்கம்

இனி இவை பற்றிய செய்தியைக் காண்போம் :

ஓர் இளைஞன் (தலைவன்) பூம்பொழில் ஒன்றில் தனித்துப் பூக்கொய்யும் நங்கை (தலைவி) ஒருத்தியைக் காண்கிறான். இருவரும் ஒருவரையொருவர் நோக்குகின்றனர். இருவர் விழிகளும் சந்திக்கின்றன. இருவரும் மாறி இதயம் புகுகின்றனர். அவ்வமயம் உள்ளத்துத் தோன்றும் இன்ப உணர்ச்சியே அவர்தம் பிற்காலக் காதல் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றது. பார்வை ஒன்ற, உள்ளம் ஒன்ற, உணர்ச்சி ஒன்ற அவ்விருவரும் ஓருயிர் ஈருடல் ஆகின்றனர். அவ்வின்பப் பூங்காவில் உள்ள நறுமணமுள்ள மலர்களிடையே நங்கை-நம்பி ஆகிய இருவர்தம் காதல் அரும்பும் போதாகி மலர்ந்து மணம் வீசுகின்றது. அம்மட்டோ ! தேனும் பிலிற்றுகின்றது. காதல் மணமும் காதல் தேனும் அப் பூங்காவைப் பொன்னுலகமாக்குகின்றது

அன்று முதல் அவர்தம் காதல் வாழ்க்கை களவிலேயே நடந்துவருகின்றது.

எனினும் நீடித்த களவு வாழ்க்கைக்குத் தோழியும் தோழனும் உதவி செய்யும் பாத்திரங்களாக அமைகின்றனர். தோழி தலைவனது காதலைப் பரிசோதிக்கும் திறம் மிக வியந்து பாராட்டத் தக்கது. தலைவியைத் தலைவன் பெற முடியாது என்பதற்குப் பல நியாயங்களைத் தோழி கூறுகிருள். அவளைத் தான் பெருவிடில் மடல் ஏறுவதாகத் தலைவன் சூள் உரைக்கிருன். இங்ஙனம் பலவாறு முதற்கண் அவனது உள்ளத்தைச் சோதித்த தோழி அவனோடு தலைவியைக் கூட்டுகிருள்; அக்கூட்டம் நடைபெறும் பொழுதே மீண்டும் அவனைச் சோதிக்கக் கருதி, பகலில் வருகின்றவனை இரவில் வரும்படியும், இரவில் வருகின்றவனைப் பகலில் வருமாறும் மாறி மாறி வரச்செய்து, அவனுக்குத் துன்பத்தைத் தருகின்றுள்; "தலைவி வீட்டில் அடைக்கப்பட்டாள்; ஆதலின் அவளைப் பெற நள்ளிரவில் வருக" என்பாள். தலைவனும் அவள் சொற்படி நடப்பான். தோழி மீண்டும், "நீ வரும்பொழுது நாய் குரைக்கிறது; காவலர் திருடன் என்றெண்ணித் தேடுகின்றனர்; ஊர் விழித்துக் கொள்கிறது" என்றெல்லாம் கூறி அவனைத் துன்புறுத்துகிருள். தலைவன் இத்துணைச் சோதனைகட்கும் உட்பட்டு அவள் சொற்படி நடந்து, தான் தலைவிமீது கொண்ட களங்கமற்ற காதலின் உறுதியை வெளிப்படுத்துகிருன்.

## அறத்தொடு நிற்றல்

களவுப் புணர்ச்சியால் தலைவியின் வேறுபாடு கண்ட தாய்மார் தோழியை வினவுவர். தோழி களவை வெளிப்படக் கூருமற் கூறும் திறன் அறிந்து வியக்கற்

பாலது. (1) தலைவியும் நாங்களும் சுனையில் நீராடுகை யில் தலைவி கால் தவறிச் சுனையில் வீழ்ந்துவிட்டாள். நாங்கள் அலறினோம். அவ்வமயம் கட்டழகுள்ள இளைஞன் ஒருவன் அங்குத் தோன்றினான்; சரேலென நீரிற் குதித்தான்; தலைவியை அணைத்துக்கொண்டு சுனையினின்றும் வெளிப்போந்தான். தன் உயிரைக் காத்த அவ்வண்ணல்பால் தலைவி உள்ளம் நெகிழ்ந் தாள். (2) தலைவியும் யாங்களும் பூப்பறிக்குங்கால் தலைவி விரும்பியதொரு பூவை நாங்கள் பறிக்கக்கூட வில்லை. தலைவி வாட்டமுற்றாள். அப்பொழுது நம்பி ஒருவன் தோன்றி அம்மலரைப் பறித்துத் தலைவியின் கையிற் கொடுத்தான். தலைவி அவன்பால் நன்றியறிதல் உடையவள் ஆயினாள். (3) பண்டொருநாள் யாங்கள் விளையாடிக்கொண்டிருந்தபோது காட்டானை ஒன்று மதங்கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தது. தலைவி அலறினாள். அவளது மையுண்ட கண்களிலிருந்து நீர் அருவிபோலப் பெருகியது. அவ்வமயம் கையில் வேலேந்திய இளைஞனொருவன் அங்குத் தோன்றினான்; அச்சத்தால் அலறிய தலைவியைத் தன் இடக்கையால் அணைத்து நின்று வலக்கையில் தாங்கிய வேலால் யானையைக் குத்தினான்; யானை பிளிறிக்கொண்டு ஓடியது. தன் உயிரைக் காத்த அத்தலைவன்பால் தலைவியின் உள்ளம் ஈடுபட்டது. இங்ஙனம் கூறுதல் முறையே புனல் தரு புணர்ச்சி, பூத்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி எனப்படும். இங்ஙனம் தோழி கூறுதலை 'அறத்தொடு நிற்றல்' என்று இலக்கணம் கூறும்.

தான் காதல் கொண்ட காதலனுக்குத் தன்னைத் தன் பெற்றோர் தாராரெனத் தெரிந்ததும், தலைவி தலைவ னுடன் ஓடுதல் உண்டு. இஃது 'உடன் போக்கு' எனப்படும். அவன் அவளைத் தன் வீடுகொண்டு

சென்று மணம் முடித்துக்கொள்ளலுமுண்டு; போகும் பொழுதே தலைவியைச் சேர்ந்தவர் இடைமறித்துக் கொண்டு சென்று தலைவி வீட்டில் திருமணம் நடத்தலு முண்டு. சரியாகக் கூறுமிடத்து, இவ்வுடன்போக்கி லிருந்தே கற்புத் தொடங்கிவிடுகிறது. இதன்பின் நிகழ்வதெல்லாம் கற்பியற் செயல்களெனப்படும். கற்பு என்பது ஒருவன் ஒருத்தியோடு உள்ளம் ஒன்ற வாழ்க்கை நடத்தல்.

## பக்தி நெறியில் அகப்பொருள் துறை

சைவசமய ஆசாரியரும், ஆழ்வார்களும் பிற்கால அடியார்களும் பாடியுள்ள பாடல்களை நன்கு ஆராயின், அவற்றுள் அகப்பொருள் இலக்கணம் ஊடுருவி உள்ளது என்பதை அறிவுடையோர் நன்குணரலாம். சிறப்பாகத் திருநாவுக்கரசர் தேவாரத்திலும், நம்வாழ்வார் திருவாய்மொழியிலும் திருமங்கை மன்னன் பாடல்களிலும், அகப்பொருள் துறைகள் செறிந்திருக்கக் காணலாம். அடியார்கள் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் வைத்து அகப்பொருட்சுவை தோன்றப் பாடியிருத்தல் உள்ளத்தை உருக்குவதாகும். மாணிக்கவாசகர் பாடியருளிய திருக்கோவையார் ஒன்றே இவ்வுண்மையை எடுத்துக் காட்டப் போதியதன்றோ? தலைவியாகிய தன்னை (சீவான்மாவை)த் தேடித் தலைவனாகிய சிவபெருமான் (பரமாத்மா) வருந்தி வருதலும், வருந்தி அணைதலும், ஆட்கொள்ளலும் இன்ன பிறவும் உரைப்பதன்றோ திருக்கோவையார்!

போது மலராக மணம் மிகுந்து தேன் பிலிற்றும் இன்பப்பருவத்தில் அம்மலரை நாடி வண்டுகள் வருதல் உலக இயற்கை. அவ்வண்ணமே உலகக் கட்டுக்களினின்று விடுபட்டு அன்பென்னும் புற இதழ்களை விரித்து

அருளென்னும் தேன் பிலிற்றும் பரிபக்குவ நிலையை அடைந்த சீவான்மாவாகிய மலரைப் பரமாத்மா வலிய வந்தணைதல், அணைந்து ஆட்கொள்ளுதல் முதலிய அருஞ்செயல்கள் செய்தல் அகப்பொருள் துறைகளுடன் ஒன்றுபட்டு இருத்தல் கண்டு சுவைத்தற்குரியது. இராமலிங்க அடிகளாரும், "ஆடையிலே எனைமணந்த மணவாளா," என்று இறைவனைப் பாராட்டியிருத்தல் கவனித்தற்குரியது. தான் விரும்பிய தலைவியைப் பெறாத தலைவன் மடலேறத் துணிதல் என்பது ஒரு துறை. ஆனால் தலைவியாக உள்ள ஆழ்வார் தமக்கு இசையாத இறைவனை இசைவிக்க மடலேறுவதாகக் கூறுதல் எத்துணைச் சுவை பயப்பது! தோழி தலைவனைப் பல வழிகளில் சோதிப்பது போலவே இறைவனும் பக்தர்களைப் பல வழிகளில் பரிசோதித்தல் உண்டு. பக்தர்களை இறைவன்பால் சேரவொட்டாமல் தடைசெய்யும் ஐம்புலன்களும் தலைவியினது கூட்டத்தைத் தடைசெய்யும் ஆயத்துக்குச் சமம். தலைவி தலைவனுடன் போதல்போலவே ஆண்டாள் நம்மாழ்வார் முதலிய அடியார்கள் தம்மை இறைவன்பால் கொண்டு செல்லும்படியும், இன்றேல் அத்தலைவனைத் தேடி ஓடி விடுவதாகவும் தலைமகள் நிலையிலிருந்து பாடியிருத்தல் படித்து மகிழ்தற்குரியது.

பக்தி வழிக்கு அடிப்படை அருள்; இன்ப வழிக்கு அடிப்படை அன்பு. அன்பு கனிந்த இடம் அருள் மயமாகும். ஆகவே, இன்ப நிலையின் முகடு பக்தி வழியின் முதற்படியாகும். இறைவனில் ஆன்மாக்கள் இரண்டறக் கலந்து பேரின்பப் பிழம்பாதல் கருதியே போலும் பக்தி வழியைப் 'பேரின்பம்' என்றும், அதற்கு முதற்படியாக அமைந்துள்ள அகப்பொருள் இன்ப வாழ்க்கையைச் சிற்றின்பம் என்றும் ஆன்றோர் அறைந்தனர்.

# 14. திருக்குறள் இன்பத்துப்பால்—களவு

## இன்பம் என்பது யாது?

பல நலங்களும் ஒத்த ஒருவனும் ஒருத்தியும் நடத்தும் இல்லற வாழ்க்கை 'இன்பம்' என்னும் சொல்லாற் குறிக்கப்படும். மனிதன் பெறத்தக்க பேறுகள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவையே வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனப்படும். மனிதன் அறவாழ்க்கை வாழ்ந்து பொருளீட்டி இல்லறத்தை நடத்தி இறுதியில் உள்ளத் துறவுகொண்டு ஈறிலா இன்பம் எய்துதற்குரிய வழியை நாடவேண்டும் என்பதே இந்நான்கின் கருத்தாகும். அதனுற்ருன் நாடு—சமய—சாதி வேறுபாடற்ற ஒழுக்க நூலாகிய திருக்குறள் மனிதன் அடையத் தக்க இந் நாற்பேறுகளையும் விளங்க வுரைக்கிறது.

## முப்பாலுள் நாற்பேறு

அறம், இல்லறம், துறவறம் என இருபாற்படுதலின் அவை அறத்துப்பாலில் சேர்த்துக் கூறப்பட்டன. 'மோட்சமும் தருமம்' என்றே வியாசமுனிவர் பாரதத்தில் கூறியிருத்தல் இக்கருத்துப் பற்றியே ஆகும். அறம், வீடு நீங்கலாகவுள்ள ஏனைய இருபேறுகட்கும் இரண்டு பால்கள் குறளில் இடம்பெற்றுள்ளன. எனவே, வள்ளுவர் முப்பாலில் நாற்பேறுகளையும் விளக்கிக் கூறினர் என்பது அறியப்படும்.

## இன்பம் குறளில் இடம்பெறுமா ?

*திருக்குறள் போன்ற ஒழுக்க நூல்களில் பிறவிக்கு* ஏதுவாகிய காமத்தை விளக்கிக் கூறலாமோ? எனின், கூறலாம் என்று தாராளமாகக் கூறலாம். இன்பம் பிறவித்துன்பம் பயப்பதாயின், வாதவூரர் திருக்கோவையாரைச் செய்திருப்பாரா? சடகோபர் திருவிருத்தத்தைப் பாடியிருப்பாரா? இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு அடியார்கள், நாயக-நாயகி பாவத்தில் பாடியிருத்தலை நோக்க, இன்பம் வீடு பேற்றுக்கு அமைந்த நற்படி என்பதை நன்கறியலாம். ஒருவனும் ஒருத்தியும் வாழ்வு தொடங்குகையில், அது ஈறிலா இன்பம் தருவது என்று கருதுதல் இயல்பு. மக்களைப்பெற்று அறிவும் அநுபவமும் வளர வளர, இன்பப்பகுதி நிலையற்ற தென்பதை நன்கு அறிவர்; அறியவே, நிலையற்ற இன்பத்தை நாட முற்படுவர்; உள்ளத்துறவு பூண்டு வீடு பேற்றுக்குரிய நெறியில் வாழ்க்கை நடத்துவர். இவ்வுண்மையை உளங் கொண்டே நக்கீரரும் தமது களவியல் உரையில்,

"மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் காமம் பெரிதும் உறுதி பயக்குமாதலின், இக்காமம் பெரிதும் உறுதியுடைத்து," என்று கூறினர். மேலும், மனித சமுதாயத்திற்கே உயிர்நாடியாக இருக்கும் ஆண்—பெண் என்பவரது இல்லற இன்பத்தை விளக்கிக் கூறி, அதனை நன்முறையில் துய்க்குமாறு செய்தல் எங்ஙனம் தவறுடையதாகும்? மக்களை நன்முறையில் இன்பம் துய்க்கச் செய்தலே சமுதாய நல்லொழுக்கத்திற்கும் ஈறிலா இன்பம் எய்துதற்கும் ஏற்ற வழியாகும் என்பதை உளங்கொண்டன்றோ வாத்சாயனர் காம நூற்பாக்களைச் செய்தார்! வள்ளுவர் இன்பப் பாலை வகுத்தார்!

## இன்பம்: களவு—கற்பு

இங்ஙனம் ஆன்ருேரால் சிறப்பித்துக் கூறப்படும் இன்பம், (1) களவு, (2) கற்பு என இருவகைப்படும். களவு என்பது கொடுப்போரும் கொள்வோரும் இன்றிப் பல நலங்களாற் சிறந்த நங்கை ஒருத்தியும், நம்பி ஒருவனும் திடீரெனத் தாமே எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் காதலித்துப் பெற்ருேர் அறியத் திருமணம் நடைபெறும் வரை ஒழுகிவரும் ஒழுகலாருகும். கற்பு என்பது திருமணம் நடந்த பிறகு நடைபெறும் இல்வாழ்க்கையாகும்.

## களவு

திடீரென எதிர்ப்படும் தலைவன் தலைவியைக் கண்டதும், 'இவள் மண்மகளோ? விண்மகளோ?' எனப் பலவாறு ஐயுற்றுப் பின்னர், 'இவள் மானிட மகளே' எனத் தெளிகிருன். இது பற்றிய நிகழ்ச்சிகள் காட்சி-ஐயம்-தெளிதல்-தேறல் என நான்கு துறைகளாகக் களவியல் இலக்கணம் கூறும். தலைவியின் பேரழகைக் கண்டு தலைவன்,'இவள் மண்மகளோ? விண்மகளோ?' என்று எண்ணுதல் இயல்பு. இதனைப் புலவர்கள் தம் கற்பனைத் திறனல் மிகுத்து நான்கு துறைகளை வகுத்தனர். அத்துறைகளைப் பின்பற்றியே கோவை நூலாசிரியர்களும், சேக்கிழார் போன்ற பெருநூலாசிரியர்களும் பாடிச் சென்றனர்.

## முதற் சந்திப்பு

இங்ஙனம் தலைவனும் தலைவியும் திடீரென எதிர்ப்பட்டவுடன் ஒருவரை ஒருவர் தத்தம் விழிகளாரக் காண்கின்றனர். ஒருவர்மீது மற்றவர் காரணம் அறியாமலே அன்பு கொள்கின்றனர். அவ்வன்பே 'காதல்' என்பது. இஃது எவர் முயற்சியுமின்றித் தானே தோன்றலால்

'தெய்வக் காதல்' எனப்படும். இக் காதல் உண்மையை வெளிப்படையாக உணர்த்தவல்லது முகமாகும் (Face is the index of the mind); முகத்திலுள்ள விழிகளாகும். தலைவன் தன்னை நோக்காதபோது தான் அவனை நோக்கிப் புன்முறுவல் பூத்தும், அவன் தன்னை நோக்கும்பொழுது தான் நிலத்தை நோக்கியும் தன் காதலைக் குறிப்பாய் உணர்த்துவாள். இதனையே தலைவன்,

" யானோக்கும் காலை நிலநோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்."

என்று குறிக்கின்றான். இங்ஙனமுள்ள தலைவன்-தலைவியர் விழிகள் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன. இச்சந்திப்பு அவர்களை ஒன்றுபடுத்த வல்லது. அங்கு வாய்ப்பேச்சுக்கிடம் இல்லை; இதனையே வள்ளுவர்,

" கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல."

எனத் தெளிவுறக் கூறினர். மிதிலைக் காட்சிப் படலத்தில் இராமனையும் சீதையையும் வான்மீகி நெறிக்கு மாறாக—ஆயின் தமிழ் இலக்கணத்திற்குப் பொருந்து மாறு—சந்திக்கச் செய்யவே மிதிலைக் காட்சிப் படலத்தைத் தோற்றுவித்த கம்பர், அவ்விருவரும் கண்ட காட்சியை,

" எண்ணரு நலத்தினாள் இனைய நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணைக் கவ்வி ஒன்றையொன் (று)
உண்ணவும் நிலைபெறா(து) உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்."

" பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்(து)
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்."

என்று தெளிவாகக் கூறியிருத்தல், 'பார்வையின் ஒப்புயர்வற்ற தன்மையை நன்கு விளக்குவதாகும்; மேலும் வள்ளுவர் குறளுக்குச் சிறந்த விரிவுவரயாகவும் அமைவதாகும்.

## கற்பு

உள்ளத்தால் ஒன்றுபட்ட நம்பியும் நங்கையும் அன்றே — அப்பொழுதே — அவ்விடத்திலேயே உடலாலும் ஒன்றுபடுகின்றனர். உள்ளம் ஒன்றுபடும் பொழுதும் பின்னர் உடல் ஒன்றுபடும்பொழுதும் அவ்விருவர் உள்ளங்களும் காதல் ஒன்றுக்கே நிலைக்களனாக இருக்கின்றன. ஒருவர் மற்றொருவருடைய குடி—குணம் முதலியவற்றைப்பற்றி நினைக்க இடமில்லை. இதனை,

> '' யாயும் ஞாயும் யாரா கியரோ
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
> யானும் நீயும் எவ்வழி யறிதும் ?
> செம்புலப் பெயல்நீர் போல
> அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே''

என்னும் (குறுந்தொகைச் செய்யுள் கூறும்) மணமகன் கூற்றும்,

> '' கொடுப்பினன் குடைமையும் குடிநிரல் உடைமையும்
> வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது
> எமியேம் துணிந்த ஏமஞ்சரல் அருவினை''

என்னும் (குறிஞ்சிப்பாட்டு அடிகள் கூறும்) தோழி கூற்றும் நன்கு விளக்கும்.

உடல் ஒன்றுபட்ட பின்னர்த் தலைவன், தலைவியின் பல நலங்களைப் பாராட்டி அவளையும் மகிழ்வித்துத் தானும் மகிழ்கிறான்; தன் உள்ளத்தை நோக்கி, '' காணல், கேட்டல் முதலிய ஐம்புல நுகர்ச்சி நமக்கு இதுவரை ஒரே பொருளினிடத்து உண்டான

தில்லை; இன்று அவை ஐந்தும் இத்தலைவியிடமே பொருந்தியுள்ளன; இனி இவற்றுக்காகப் புறத்தே செல்லவேண்டுவதில்லை,'' எனத் தலைவி கேட்கக் கூறுகிறான்; பின்னர் அவளை அவள் தோழியர் உள்ள இடத்திற்குப் போகச்செய்து பிரிகிறான்.

**பாங்கியர் கூட்டம்**

இவ்வாறு சில நாட்கள் கழிகின்றன. தலைவன் தன் காதலியின் உயிர்த்தோழியை இரந்து, அவள் வாயிலாகத் தலைவியைப் பெற முயல்வான்; தலைவி, தோழி முதலியோர் இருக்கும் பொழிலிடம் தானே வலியச் சென்று, முன் அறியாதவன்போல, அவர் தம் ஊர், பெயர் முதலியவற்றை விசாரிப்பான்; தான் துரத்தி வந்த யானை அல்லது மான் வந்ததோ எனக்கேட்பான். தலைவியின் மெய் வேறுபாடுகளால் அவள் ஒருவனிடம் காதல் கொண்டுள்ளாள் என்பதை ஒருவாறு உணர்ந்திருந்த தோழி, தலைவனை நேரிற் கண்ட தலைவியின் முகப்பொலிவைக் கண்டதும் 'அவ்வொருவன் இவனே' எனத் தெளிவாள்.

ஆயினும், அவள் தலைவனுக்குத் தலைவியை உதவுவதில் முற்படாள். அவளை இசைவிக்க விரும்பிய தலைவன், ஒருநாள், "நீ தலைவியைக் கூட்டி வைக்காததால் நான் மிக்க துன்பப்படுகிறேன். இத்துன்பத்திலிருந்து நீங்க மடலேறுதலே ஏற்ற வழி"

"காமம் உழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி"

என்பான். "நாணும் நல்லாண்மையும் உடைய உம்மால் மடல் ஏறுதல் இயலாது,'' என்று தோழி கூறுவாள். தலைவன்,

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்"

என்று பதிலளிப்பான். தோழி இரங்கித் தலைவியைக் கூட்டுவிப்பாள். தலைவன் இங்ஙனம் தோழியின் உதவியால் பகலிலும் இரவிலும் சென்று சில நாட்கள் தலைவியைக்கூடி இன்பந் துய்ப்பான்.

பின்பு தோழி, "நினது களவொழுக்கம் ஊரில் அலரை உண்டாக்கிவிட்டது. உடனே தலைவியை மணந்துகொள்," என்பாள். தலைவன் அவள் கூற்றுப் படி மணஞ்செய்யாது சில நாட்களைக் கழிப்பான். ஊரில் அலர் உண்டாக, தலைவி இற்செறிக்கப்படுவாள். அதனால் தலைவி தலைவனைக் காணமுடியாது உடல் மெலிவாள். அவ்வேறுபாட்டுக்குக் காரணம் யாதெனச் செவிலி தோழியைக் கேட்பாள். தோழி தலைவியின் காதல் வாழ்க்கையை மிகவும் கண்ணியமான முறையில் குறிப்பாக எடுத்துக் கூறுவாள். இஃது அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

"(1) தலைவி விரும்பிய பூவினை ஒரு கட்டிளங்காளை பறித்துந் தந்தான்; (2) சுனையில் நீராடும்பொழுது கால் வழுக்கிய தலைவியை ஒரு கட்டிளங்காளை எடுத்துக் காத்தான்; (3) தலைவியைத் தாக்க வந்த யானையை ஒரு கட்டிளங்காளை தன் வேலால் வெற்றிகொண்டு தலைவியைக் காத்தான்" என்னும் இம்மூன்றில் ஒன்றையோ, இரண்டையோ, மூன்றையோ கூறி, அப்பெருந்தகையிடம் தலைவி ஒன்றுபட்ட உள்ளத்தினளானாள். ஆதலின் நீங்கள் வெறியாட்டயர்ந்து, வேறு மணம் பேசியும் போந்த செயல் கேட்டு மனம் வருந்தி மெலிந்திருப்பாள்," என்று தோழி கூறுவாள்.

அது கேட்ட செவிலி நற்றாய்க்குக் கூற, நற்றாய் தலைவியின் தந்தைக்கும் தமையன்மார்க்கும் கூறுவாள். அனைவரும் மகிழ்ந்து தலைவி விருப்பப்படியே மண முடித்தல் உண்டு. அங்ஙனம் முடிக்காது வேறு மணம் செய்விக்க நினைப்பாராயின், தோழியின் உதவியால் தலைவி தலைவனுடன் வீட்டைவிட்டு வெளியேறுவாள். இஃது 'உடன் போக்கு' எனப்படும். உடன் போக்கில் தலைவியின் உற்றார் உறவினர் மணமக்களைத் தடுத்துத் தலைவனுடன் போர் புரிவர். தலைவி அப்பொழுது தலைவனைச் சார்ந்து நிற்பதைக் கண்டு, அவளது உண்மைக் காதலுக்கு மதிப்புக் கொடுத்து, தாம் வந்த வழியே திரும்புவர். தலைவன் தலைவி ஊருக்கு வந்து மணம் செய்துகொள்வான்; அல்லது 'தன்னூர் சென்று மணத்தலும் உண்டு. இவ்விவரங்கள் அனைத்தும் 'களவு' என்னும் முதற் பிரிவைச் சேர்ந்தவை.

# 15. மார்கழி நோன்பு

**சங்க நூல்கள்**

ஆண்டாள் பாடியருளிய திருப்பாவையும் மணி வாசகப் பெருமான் பாடியருளிய திருவெம்பாவையும் மார்கழி நோன்பை அடிப்படையாகக் கொண்டது. **மார்கழி நோன்பு, சங்ககாலம் முதலே தமிழரிடம் இருந்துவரும் நோன்பாகும்** என்பது பரிபாடல், நற்றிணை, ஐங்குறு நூறு, கலித்தொகை என்னும் சங்ககால நூல்களால் அறியலாம்.

"மார்கழி மாதத்தில்—நிறைமதி நாளாகிய திரு ஆதிரையில் ஆகமங்களை உணர்ந்த பூசகர்கள் தெய் வத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினர். அப்போது **கன்னிப் பெண்கள்** ஒன்றுகூடி, 'நிலம் மழைவளம் பெற்றுக் குளிர்வதாகுக,' என்று சொல்லி அம்பா ஆடல் மேற் கொண்டனர். அந்நோன்பு முறையை அறிந்த முதிய பார்ப்பனிமார் அக்கன்னிப் பெண்களுக்கு நோன்பு நோற்கும் முறைமையைத் தெரிவித்தனர். அக்கன் னிப் பெண்கள், அவர்கள் தெரிவித்தபடி, பனி நிறைந்த கதிரவன் தோன்றும் காலத்தில் வையையில் நீராடினர்; கரையில் தங்கியிருந்த அந்தணர்கள் வளர்த்த வேள்வித் தீயை வணங்கினர். இங்ஙனம் இளைய ஆண்மக்களோடு காமக்குறிப்பு இல்லாத விளை யாட்டைப் புரியும் அக்கன்னிப் பெண்கள், தவமாகிய தைந் நீராடலை வாய்க்கப் பெற்றனர்."

இது **பரிபாடல்** என்னும் சங்க நூலில் பதினோராம் பாடலில் காணப்படும் செய்தி ஆகும். இப்பாடலில்

வரும் 'அம்பா ஆடல்' என்பது, 'அம்மன் பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டு' என்று பொருள்படும். அம்பா, அம்பாள் என்பவை அம்மனைக் குறிப்பவை.

நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பவை இதனைத் 'தைந்நீராடல்' என்று குறித்துள்ளன.

" வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
தையூண் இருக்கையின்"

என்பது நற்றிணை.

" நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப் பலர்படிந்து"

என்பது ஐங்குறுநூறு.

" வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ"

" இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்"

என்பன கலித்தொகை அடிகள்.

இங்ஙனம், பண்டை நூல்கள் மார்கழி நோன்பைத் 'தைந்நீரால்' என்று கூறக் காரணம் யாது? முழு நிலவும் திருவாதிரையும் மார்கழி மாதம் பதினைந்தாம் நாளிலேனும் அல்லது அதன் பின்பேனும் ஒன்று கூடுதல் இயல்பு. அக்காலத்தில் அமாவாசை தொடங்கி மறு அமாவாசையில் முடியும் கால அளவு ஒரு மாதம் என்றும், பௌர்ணிமை தொடங்கி மறு பௌர்ணிமையில் முடியும் கால அளவு ஒரு மாதம் என்றும் இருவகையாக முன்னோர் கணக்கிட்டனர். அவை முறையே 'அமாந்தம்' (அமாவாசையோடு முடிவுபெறும் மாத

1. பேராசிரியர் மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, பக். 194-195.

காலம்), **பூர்ணிமாந்தம்** பௌர்ணிமையோடு முடிவுபெறும் மாதகாலம், எனப்பெயர் பெற்றன. அம்முறைப்படி மார்கழித் திங்களின் இடையில் பௌர்ணிமைக்குப் பின் வரும் மாதம்—**மார்கழியின்** பிற்பகுதியும் **தையின்** முற்பகுதியும் ஆகும். அதனால்தான் மார்கழி நோன்பு **'மார்கழி நீராடல்'** என்றும், **'தைந் நீராடல்'** என்றும் இருவகையாக வழங்கப்பெற்றது.[2]

"திருவாதவூரடிகள் புராணத்துட் கூறப்பட்டபடி **மார்கழி நீராடல்** திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன் தொடங்கித் திருவாதிரையில் முடிவுபெறும் என்பதும், **தைந்நீராடல்** மார்கழித் திருவாதிரையில் தொடங்கி நடைபெறும் என்பதும் இங்கே கண்ட வேறுபாடாம். நூற்பிரமாணம் உள்ளனவும் இல்லனவுமாய் மக்கள் வழக்க வொழுக்கங்களிற் காணப்படும் இன்னோரன்ன நிகழ்ச்சிகள், இங்ஙனம் காலாந்தரத்தில் வேறுபடுதல் இயல்பே"[3]

"ஓலையைப் பிடித்துப் படிக்கும் இளைய ஆண் மக்களோடு காமக் குறிப்பில்லாத விளையாட்டைப் புரியும் சிறுமியர் மார்கழி நீராடினர்" என்பது பரிபாடற் கூற்று. மேலும் அப்பெண்கள், 'வெம்பாதாக வியனில வரைப்பு" (நிலம் மழை வளம் பெற்றுக் குளிர்வதாகுக!) என்று அம்மனை வேண்டி நோன்பிருந்தனர் என்பது நோக்கத் தக்கது.

## திருப்பாவை—திருவெம்பாவை

இங்ஙனம் பெண்மை நிரம்பாத சிறு பெண்கள் சங்க காலத்தில் **மழை வளத்தை வேண்டியே** மார்கழி நோன்பை மேற்கொண்டனர். ஆயின், ஆண்டாள்—

2. ஆராய்ச்சித் தொகுதி, பக். 196.
3. பண்டிதமணி, திருவெம்பாவை, பக். 14

மணிவாசகர் காலத்தில் (கி. பி. 8, 9-ஆம் நூற்றுண்டுகளில்)—மணப்பருவத்தை அடைந்த பெண்களும் இந்நோன்பை மேற்கொண்டனர்; அதனுல் நாடு செழிக்க மழையையும் தமக்கேற்ற கணவரையும் பெற அம்மன் அருளை வேண்டி மார்கழி நோன்பை மேற்கொண்டனர் என்பது தெரிகிறது. இவ்வுண்மை,

'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கும் பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்".

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்ரு மரைஅடியே போற்றும்; பொருள்கேளாய்;
பெற்றமேய்த் துண்ணுங் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா,
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னேடு
உற்ரேமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"

என்னும் ஆண்டாள் பாசுரங்களால் அறியப்பெறும். இதனை,

"முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்"

என்ற திருவெம்பாவை அடிகளாலும்,

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம் அன்னவரே எங்கணவர் ஆவார்"

"எம்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க"

என்னும் திருவெம்பாவை அடிகளாலும் அறியலாம்.

இச் சான்றுகளை நோக்க, முதலில் மழைவளம் வேண்டியே, சிறுபெண்களால் நோற்கப் பட்ட மார்கழி நோன்பு—காலப்போக்கில்—பத்திநெறி மிகுதியாகப் பரவிய பின் நூற்றுண்டுகளில்—பருவமடைந்த பெண்களாலும் மேற்கொள்ளப்பட்டது என்பது தெளிவாகும். வைணவப் பெண்கள் கண்ணனையே கணவனுகப் பெறவும் வேண்டிய ஆடவரையே கணவராகப் பெறவும் வேண்டிச் சிறப்பாக இந்நோன்பை மேற்கொண்டனர் என்பது அறியப்படும்.

## பெண்கள் வயது

சங்ககாலத்தில் இந்நோன்பை மேற்கொண்டவர் சிறுபெண்கள். மேற்பருவப் பெண்களும் ஆண்டாள்—மணிவாசகர் காலங்களில் சிறுபெண்களோடு இதனை மேற்கொண்டனர். மார்கழி நோன்பில் கலந்துகொண்ட சைவப் பெண்கள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12 **வயதுடையவர்கள்** என்று திருவெம்பாவை உணர்த்துவதைப் பண்டிதமணி அவர்கள் நன்கு வெளிப்படுத்தியுள்ளனர்.[4] **பிங்கல நிகண்டில்** ஐந்து முதல் ஒன்பது வயது வரையுள்ள பெண்கள் **பனிநீர் தோய்வர்** என்பது கூறப்பட்டுள்ளது. இது மார்கழி நீராடலையே குறிக்கும் என்பது அறிஞர் துணிபு.[5] எனவே பிங்கலந்தை ஆசிரியர் காலத்தில் மார்கழி நீராடல் 9 வயது வரையுள்ளபெண்களுக்கே உரியதாயிருந்தது என்பது தெரிகிறது. அவர்க்குப் பிற்பட்ட ஆண்டாள்—மணிவாசகர் காலத்தில் 9—க்கு மேற்பட்ட வயதுடைய மணமாகாத பெண்களும் இந்நோன்பை மேற்கொண்டனர் என்பது தெரிகிறது. இதனல் பிங்கலத்தை, ஆண்டாள் மணிவாசகர்க்கு முற்பட்டது என்பது தெளிவாகிறது.

---

4. திருவெம்பாவை, பக. 8—9
5 ஆராய்ச்சித் தொகுதி, பக். 197

## இந்நோன்பிற்கு அடிப்படைச் சான்று

இங்ஙனம் பெண்களால் கொண்டாடப்பெறும் இந்நோன்பு வேதங்களில் காணப்பெருதது—தொன்று தொட்டு மக்களால் பின்பற்றப்பட்டுவரும் நோன்புகளுள் ஒன்று என்பது சான்ருேர் கருத்து. பாகவதத்தில்—தசமஸ்கந்தம் 22-ஆம் பகுதியில் இந்நோன்பு பற்றின செய்திகள் குறிக்கப்பட்டுள:

"கோகுலத்துப் பெண்கள் மார்கழியில் **காத்யாயனி** (*சக்தி*) வழிபாடாகிய நோன்பினைத் தொடங்கி நடத்தினர்; வைகறையில் எழுந்து யமுனையில் நீராடினர்; ஈர நுண் மணலால் காத்யாயனி அம்மனது உருவத்தைச் சமைத்துச் சந்தனம், மலர், புகை, தளிர், பழம் முதலியவற்ருல் அவ்வம்மனை வழிபட்டனர்; கண்ணனைத் தங்கட்கு மணுளனுகத் தரவேண்டுமென்று வேண்டினர்; இங்ஙனம் ஒரு திங்கள் முழுமையும் நோன்பியற்றினர். அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் தங்கள் தோழிகளின் பெயர்களைச்சொல்லி அழைத்துக் கையைக் கோத்துக்கொண்டு கண்ணன் பற்றிய பாக்களைப் பாடி நடந்து சென்று, அவன் புகழைப் பாடிக்கொண்டே நீராடினர்," என்பது பாகவதச் செய்தியாகும்.

'ஹோரளை ஹோரளகம்' என்று பெயர் பெற்ற **காமன் நோன்பை** அடிப்படையாகக் கொண்டதே இந்நோன்பு என்பது திருப்பாவைக்கு விரிவுரை வரைந்த பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து.

"நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்" என்னும் தொடரால், அம்மன் உருவம் சமைக்கப் பெற்று உருவ வழிபாடு நடைபெற்றமை புலனுகின்றது. பாவையை வைத்து வழிபடுதல் பற்றி இது **பாவை நோன்பு** எனப்

டது; "பாவாய்," 'எம்பாவாய்' என்று விளிக்கப்பெற்ற சிறப்புப் பற்றி முறையே ஆண்டாள் பாக்கள் திருப்பாவை என்றும், மணிவாசகர் பாக்கள் திருவெம்பாவை என்றும் பெயர் பெற்றன.

நோன்பை மேற்கொண்ட பெண்களுள் தாமே துயில் நீத்து எழத்தக்க பருவமங்கையர் சிலர் எழுந்து நீராடச் செல்வர்; அங்ஙனம் செல்பவர் நீராடுதற்கு உடன் வருவதாக முதல் நாளில் ஒப்புக்கொண்டு உரிய நேரத்தில் எழாமல் உறங்கும் பெண்களை எழுப்புவர்; பின்னர் அனைவரும்,

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே யெங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்."

என்று இறைவன் புகழைப் பாடிக்கொண்டே நீராடச் செல்வர். பின்பு அப்பெண்மணிகள்,

"மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்"

எனவும்,

"ஆர்தார் குஞ்சியாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்,"

"போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்

எனவும் பலவாறு பாடிக்கொண்டு நீராடுவர்; தம் நோன்பின் பயனாக மழைபெய்ய இறைவியின் துணையை வேண்டுவர்; "எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க" என வேண்டுவர்; நீராடி முடித்த பின்பு, அதன் பயனாக இறைவனையும் அவனைப் பாடியாடுவதற்கு வாயிலாகிய மார்கழி நீரையும் வேண்டிக் கோடலாக,

போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்"

எனவும் பாடி மகிழ்வர்.

## முடிவுரை

சங்க காலத்தில் சிறு பெண்களால் மழை வளம் பற்றித் தொடங்கப்பெற்ற இந்நோன்பு, பின்னர்க் காலப் போக்கில் கணவரைப் பெறவும் பயன்படுத்தப்பட்டது என்பதும், அடியார்களால் இறை அடிப்படையில் பாடப்

பெறும் பெருமை பெற்றுவிட்டது என்பதும் இதுகாறும் கூறப்பெற்ற உண்மைகளால் அறியப்பெறும்.

இக்காலத்தில் திருப்பாவை வைணவ ஆடவர் மகளிர் ஆகியோராலும், திருவெம்பாவை சைவ ஆடவர் மகளிர் ஆகியவராலும் மார்கழியில் ஓதப்பெறுகின்றன; வழிபாடுகள் நிகழ்த்தப்பெறுகின்றன. இங்ஙனம் மார்கழி நோன்பு சமய ஒழுக்கமாக நாளடைவில் மாறிவிட்டது. திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன்பு தொடங்கி அவ்வாதிரையோடு திருவெம்பாவை 20 பாடல்களும் சைவரால் ஓதப் பெறுகின்றன; நாள் ஒன்றுக்கு ஒரு பாடலாகத் திருப்பாவை 30 பாக்களும் வைணவரால் திங்கள் முழுமையும் ஓதப்பெறுகின்றன.

திருப்பாவை—திருவெம்பாவை ஆகிய இரு பாக்களும் அவை தோன்றிய காலத்து அணிவகைகள், பழக்க வழக்கங்கள், சமய ஒழுக்கம் முதலியவற்றை அறியப் பெருந்துணை புரிகின்றன. இப்பாடல்கள் படிக்கப்படிக்க உள்ளத்தைக் குளிர்விக்கும் ஆற்றல் பெற்றவை.

# 16. காதலும் வீரமும்

## காதல்

### சங்க காலம்

இற்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்ட காலம் சங்க காலம் எனப்படும். அக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழரசர் தமிழகத்தை ஆண்டுவந்தனர். தமிழ் மொழி ஒன்றே இந்நாட்டில் சீரும் சிறப்பும் பெற்றுவந்தது. மன்னர் இந்நாட்டவராதலால் குடிமக்களைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தனர்; பயிர்த்தொழிலுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தனர்; கைத்தொழில்களை ஊக்கினர்; வாணிகத்தை வளம் பெறச் செய்தனர்; தொழிலில் சிறந்த வணிகருக்கு ஏனாதி போன்ற பட்டங்களும் பரிசுகளும் வழங்கினர்; நாட்டில் எல்லோரையும் கல்வி கற்கத் தூண்டினர்.

அரசர் இங்ஙனம் அறவழியில் நாடாண்ட காரணத்தால், அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வி கற்றனர். இன்று சமுதாயத்தில் பிற்பட்டவர் எனக் கருதப்படும் குறவன்—குறத்தி, பாணன்—பாடினி, வேட்டுவன்-வேட்டுவச்சி, முதலியோர் கவிபாடும் ஆற்றல் பெற்று மன்னரால் மதிக்கப்பெற்றனர் என்பது சங்க நூல்களால் தெரிகின்றது.

### களவு வாழ்க்கை

இங்ஙனம் கல்வி நலம் சிறந்திருந்த சங்க காலத்தில் பெரும்பாலான திருமணங்கள் காதலையே அடிப்படையாகக் கொண்டவை. இக்காதலுக்கு ஏற்றவை மலையும் மலை சார்ந்த இடமுமாகும். இதனால் ஏனைய நிலங்களில்

காதல் நிகழவில்லை என்பது கருத்தன்று. மணப் பருவத்தையுடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முள் எதிர்ப்பட்டு உள்ள நெகிழ்ச்சி அடைவதே காதல் என்று சொல்வது. இங்ஙனம் சந்தித்த இருவர் அடிக்கடி பகலிலும் இரவிலும் சந்தித்துப் பழகுவர். இப்பழக்கம் தோழனுக்கும் தோழிக்குமே தெரிந்திருக்கும். இவ்வாறு தலைவனும் தலைவியும் நெருங்கிப் பழகப் பழக, ஓருயிரும் ஈருடலுமாம் தன்மையை அடைவர். இங்ஙனம் இருவரும் இருதிறப் பெற்றோரும் அறியா வகையில் கொள்ளும் உறவு களவு எனப்படும்.

இக்களவினை அறியாத பெண்ணின் பெற்றோர் அவளுக்கு மணம் பேச முற்படுவர்.

இதனை அறிந்த தோழி களவை நயம்பட வெளிப் படுத்துவாள். "தலைவியும் நாங்களும் மலர் கொய்து கொண்டிருந்த போது, எட்டாத மரக்கிளையிலிருந்த பூங்கொத்து வேண்டுமென்று தலைவி விரும்பினாள். அப் பொழுது அங்குத் திடீரென்று தோன்றிய அழகிய இளைஞன் ஒருவன் மரத்தின்மீது ஏறித் தலைவி விரும்பிய பூங் கொத்தைப் பறித்துத் தலைவியிடம் கொடுத்தான். தலைவி அவனை நன்றியறிதலோடு நோக்கினாள்," என்று தோழி கூறுவாள்;

சில சமயங்களில், "நாங்களும் தலைவியும் சுனையில் நீராடும் பொழுது, தலைவி கால் வழுக்கிச் சுனையில் விழுந்துவிட்டாள். அப்பொழுது, நாங்கள் அலறினோம்; அவ்வமயம் கட்டழகு உடைய இளைஞன் ஒருவன் அங் குத் தோன்றினான். அவன் திடீரென்று சுனையிற் குதித் துத் தலைவியைக் காப்பாற்றினான். இங்ஙனம் தன் உயிர் காத்த உத்தமனுக்குத் தலைவி நன்றி செலுத்தினாள்," என்று சொல்லுவாள்.

அவள் சில நேரங்களில், "நாங்களும் தலைவியும் தினைக் கொல்லையருகில் விளையாடிக்கொண்டிருக்கையில், மதம் பிடித்த யானையொன்று பிளிறிக் கொண்டு வந்தது. நாங்கள் அஞ்சி அலறினோம். தலைவி எங்களைவிட மிகுதியாக அலறினாள். அவன் உடனே தலைவியைத் தன் இடப்பக்கத்தில் தழுவிக் கொண்டு, தன் வலக்கையிலிருந்த வேலை யானையின் துதிக்கையிற் பாய்ச்சினான்; குத்துப்பட்ட இடத்திலிருந்து வெளிப்பட்ட குருதி, அவ்வீரனின் வலப்பக்கம் பட்டுச் செந்நிறம் ஆக்கியது. தலைவியின் மையுண்ட கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் கருநிறமடைந்தது. அந்நிலையில் அவன், உமாதேவியை இடப்பாகத்தில் கொண்ட சிவ பெருமான் போலக் காட்சியளித்தான். அன்று முதல் தலைவி தன் உயிரைக் காத்த அவ்வீரனை அடிக்கடி நினைக்கின்றாள்," என்று மொழிவாள்.

இவ்வாறு தோழி தலைவியின் காதலை இம்மூன்று நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு விளக்காமல் விளக்குவாள். இங்ஙனம் புலப்படுத்துவது **அறத்தொடு நிற்றல்** எனப்படும். இதனை உணர்ந்த தாய் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தெரிவிப்பாள். அவர்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வர். இதற்கிடையில் தலைவன் முயற்சியால் அல்லது தோழன் முயற்சியால் அவனுடைய பெற்றோர் மணம் பேசச் செல்வர்.

சில சமயங்களில் பெண்ணின் பெற்றோர் மகளது காதலை அறியாது வேறு மண முயற்சியில் ஈடுபடுவராயின், தலைவி தலைவனோடு சென்றுவிடுவாள். இது **உடன் போக்கு** எனப்படும். பெண்ணின் தந்தையும் சுற்றத்தாரும் உடன் போக்கினை வழியில் தடுக்க முயல்வர். அப்பொழுது தலைவி தலைவனைச் சார்ந்து இருப்பின், அவனைச் சேர்ந்தவர் காதலரை அழைத்து வந்து மணம்

முடிப்பர்; சில சமயங்களில் மணமகன் வீட்டில் திருமணம் நடைபெறுவதும் உண்டு.

## கற்பு வாழ்க்கை

இங்ஙனம் நடைபெற்ற களவுக்குப் பின்னர்க் காதலர், பலர் அறிய இல்வாழ்க்கை நடத்துவர். காதல் அடிப்படையில் அவர்களது திருமணம் நடைபெற்றதால், ஓருயிரும் ஈருடலுமாக அவர்கள் வாழத்தொடங்குவர். ஒத்த உள்ளமும், ஒத்த செயலும், ஒத்த பண்பும் அவர்களிடையே காணப்படும். கோவலன் மணம் செய்துகொண்ட புதுமையில் கண்ணகியைப் பாராட்டியவாறு கணவன் மனைவியின் நலன்களைப் பாராட்டி மகிழ்வான்.

> *"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
> *பண்பும் பயனும் அது"*

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப, அன்பையும் அறனையும் வாழ்க்கையில் அக்காதலர் உணர்த்துவர்.

இங்ஙனம் வாழ்க்கை நடைபெறும் பொழுது தலைவன் உயர் கல்விக்காகத் தலைவியைவிட்டுப் பிரிவான்; தொழிலுக்காகப் பிரிதலும் உண்டு; நாட்டின் நலத்துக்காகப் பிரிதலும் உண்டு; சிற்சில சமயங்களில் பரத்தை காரணமாகவும் பிரிவான். பிரிவு தலைவிக்குத் தாங்க முடியாது எனினும், அவனது பிரிவு நன்னோக்கம் உடையதாயின், தன் அறிவுகொண்டு ஆற்றியிருப்பாள்.

அவன் பரத்தையின் பொருட்டுப் பிரிவானாயின், அப்பிரிவு அவளை வருத்தும். அவள் அவனை நன்முறையில் திருத்த முயல்வாள். அவன் தன் தவறான ஒழுக்கத்தை மறைக்கப் பொய் பேசுவான்; "தலைதொட்டேன் தண்பரங்குன்று" என்று சத்தியம் செய்வான்.

தலைவி நகைப்பாள்; "பெருமானே, உனது தவறான ஒழுக்கம் பலருக்கும் தெரிந்துள்ளது. சூரியனது ஒளியைக் குடைகொண்டு மறைக்க இயலாதது போல, ஒரு பொய் கொண்டு உனது தகாத செயலை மறைக்க முடியாது. இச்செயல் சிறுவர் செயல் போன்றது. உன்னை இந்நிலையில் காணும் பெரியோர் நகைப்பரே!" என்று நயமாக இடித்துரைப்பாள்.

அவன் திருந்தவில்லையாயின், அவள், "எனது வாழ்க்கை பயனற்றது ஆதலால் இறக்க விரும்புகிறேன். அங்ஙனம் இறந்து வேறு பிறவி எடுக்க நேரின், உனது நினைவு வருமோ வராதோ என்று அஞ்சுகின்றேன்," என்று உருக்கமாகக் கூறுவாள். அவள் மேலும், "இப் பிறப்பில் நாம் ஒன்றுபட்டு வாழமுடியாவிடினும் மறு பிறப்பிலேனும் ஒன்றுபட்டு வாழ விரும்புகிறேன். உன் மனத்திற்கு உகந்த மனைவியாக அடுத்த பிறவியிலேனும் யான் அமைவேனாகுக," என்று உள்ளம் கரைய உரைப்பாள்.

இச்சொற்கள் எத்தகைய ஒழுக்கக் கேட்டினையும் திருத்திவிடும் அல்லவா? இவ்வளவுக்கும் உள்ளம் இளகாது கொடியவனாக இருப்பின், தலைவி அவனோடு ஊடல் கொள்வாள். தலைவன் அவளது ஊடலைத் தணிக்கப் பல வழிகளிலும் முயல்வான். ஊடலால் பேசாத இருவரும் உறவினர் வந்தவுடன் பேசுவர்; விருந்தினர் வந்தவுடன் பேசுவர்; பெற்றோர்கள் வந்தவுடன் பேசுவர்; அறவோர் முதலிய சான்றோர்வரினும் பேசுவர். தலைவன் தெருவில் விளையாடும் தன் மைந்தனை எடுத்துக்கொண்டு வீட்டினுள் நுழைவான்; மைந்தன் காரணமாகவும் ஊடல் நீங்கும். உணவுக்கு உப்புத் தேவைப்படுதல் போல இல்லற இன்பத்திற்கு ஊடல் இன்றியமையாதது என்பது வள்ளுவர் கருத்து.

இங்ஙனம் பரத்தையரிடம் எல்லா ஆடவரும் பழகி வந்தனர் என்று நினைப்பது தவறு. சிறுபான்மையோர் அப்படி ஒழுகினர் என்று கொள்வதே பொருத்தமாகும். பழந்தமிழர், தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்னும் ஐவகையினரையும் கவனித்து வந்தனர்; இதுவே தம் அறமாகக் கொண்டனர்; விருந்தினரை உபசரித்தலையே பேரறமாகக் கருதினர். அரசமாதேவியரும் தம் கணவர் அரண்மனையில் இல்லாத பொழுதும் புலவரையும் பாணரையும் கூத்தரையும் வரவேற்று உபசரித்து விருந்தளித்தனர்.

புலவர்கள் தாம் வள்ளல்கள்பால் பெற்ற பொருளைக் கொண்டுவந்து தம் மனைவியரிடம் கொடுத்தனர். "உன்னை விரும்பியவர்க்கும், நீ விரும்பியவர்க்கும், உனக்குத் தேவைப்பட்டபோது உதவியவருக்கும் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் இப்பொருளை உதவுவாயாக. 'நமக்கு வேண்டுமே' என்று வைத்துக்கொள்ள வேண்டா," என்று அறிவுறுத்தினர். அம்மகளிரும் அங்ஙனமே பிறர்க்கு வழங்கி மகிழ்ந்தனர்.

## பக்திக்கு அடிப்படை

இங்ஙனம் இல்வாழ்க்கையின் அடிப்படையாகிய காதல்—பின் தோன்றிய பக்தி நெறிக்கும் அடிப்படையாக அமைந்தது. சங்க காலத்துக்குப்பின் வந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் வைத்துப் பாடல்களைப் பாடினர். உயிர்கள் இறைவனை அடைவதற்கு இக்காதல் வாழ்க்கை முதல்படியாக அமைந்திருக்கிறது என்ற உண்மையை அவர்கள் கண்டனர்.

## வீரம்

ஒரு நாடு உரிமைபெற்ற நாடாக இருந்தாற்றான் அந்நாட்டு மக்களது வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக

விளங்கமுடியும். அந்நாடு உரிமை பெற்றதாக இருக்க வேண்டுமாயின், அந்நாட்டு ஆடவருள் பலர் போரில் வல்லவராக இருத்தல் வேண்டும்; தேவை ஏற்பட்டால் வீட்டிற்கு ஒரு வீரனைப் போருக்கு அனுப்பும் நாடாக அது இருத்தல் வேண்டும். இவ்வுண்மையைப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தனர்; அதன் பயனாய்ப் போரை ஒரு கலையாகப் போற்றி வளர்த்தனர்; ஒவ்வொரு முறைப் போருக்கும் ஒரு பெயரிட்டனர். அப்பெயர் ஒரு பூவின் பெயராகும்; அப்பூவை அணிந்து கொண்டு அப் போர் புரிந்தனர்; ஒவ்வொரு போரிலும் பல படிகளை வகுத்தனர். ஒவ்வொருபடியும் ஒரு **துறை** எனப்பட்டது. ஒவ்வொரு வகைப் போரும் ஒரு **திணை** எனப் பெயர் பெற்றது.

## போரிலும் அறநெறி

ஒரு நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் அரசன் பகைவர் நாட்டார் கேட்கும்படி, "உங்கள் நாட்டின் மீது படையெடுக்கப் போகின்றோம்; ஆதலால் உங்கள் கால் நடைகளையும் குற்றமற்ற பெரியோரையும், மாதரையும், நோயாளிகளையும், பிள்ளை பெறாதோரையும் அப்புறப்படுத்துங்கள்," என்ற அறிவிப்பைக் கேட்கும் படி செய்வர்; பின்பு அந்நாட்டின் கால்நடைகளைக் கைப் பற்றச் செய்வர். இது 'மாடு பிடி சண்டை' எனப்படும். இது இலக்கணத்தில் **வெட்சித்திணை** எனப் பெயர் பெறும். இப்போரில் ஈடுபடுபவர் வெட்சிப் பூவைச் சூடுதல் மரபு. இவர்களை எதிர்த்துப் போரிடுதல் **கரந்தைத்திணை** எனப் படும். அவர்கள் கரந்தைப் பூவைச் சூடுவர்.

ஒரு நாட்டின்மேல் படையெடுத்துப் போர்புரிதல் **வஞ்சித்திணை** எனப்படும். இம்முயற்சியில் ஈடுபடுவர் வஞ்சிப் பூவைச் சூடுவர். இவ்வாறு படையெடுப்போரை

எதிர்த்துப் போரிடுதல் **காஞ்சித்திணை** எனப்படும். இப்போர் புரிபவர் காஞ்சிப்பூவைச் சூடுவர். கோட்டையுள் இருந்து பகைவரைத் தாக்குதல் **நொச்சித்திணை** எனப்படும். இப்போர் புரிபவர் நொச்சிப் பூவைச் சூடுவர். வெட்ட வெளியில் கடும் போர் புரிதல் **தும்பைத்திணை** எனப்படும். இது இருதிறத்தார்க்கும் பொது. போரில் வெற்றி பெறுதல் **வாகைத்திணை** எனப்படும். வெற்றி பெற்றவர் வாகைப்பூவைச் சூடுவர்.

இவ்வாறு ஒவ்வொருவகைப் போருக்கும் பல துறைகளை அமைத்து நம் முன்னோர் போர் முறைகளை நெறிப்படுத்திய விவரங்களைப் **புறப்பொருள் வெண்பா மாலை** என்னும் நூலில் விரிவாகக் காணலாம். இங்ஙனம் போருக்கு இலக்கணம் வகுத்த பெருமக்களின் நுண்ணறிவையும் போர்த்திறமையையும் என்னென்று பாராட்டுவது!

## வீரப் பெண்மணிகள்

மறம்—வீரம்; மறவர்—வீரர். தமிழ்நாட்டு வீரர் மறவர் எனப்பட்டனர். மறவர் போர்க் கலையில் வல்லுநர். பெண்கள் ஆடவரைப் போலவே வீரத்தில் சிறந்தவர்; தம் ஆடவரைப் போருக்கு அனுப்பி வீரமுழக்கம் செய்பவர். வயது முதிர்ந்த தாய் ஒருத்தி தனக்குப் பாதுகாவலாக இருந்த தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பினாள். அம்மகன் தன்னால் இயன்றவரையில் போரிட்டு மார்பில் வேல் பாய்ந்து இறந்தான். தன் மகன் முதுகில் காயம்பட்டு இறந்தான் என்று கிழவி கேள்விப்பட்டாள்; கடுங்கோபம் கொண்டாள்; "என் மகன் முதுகில் காயம்பட்டு இறந்திருந்தால், அவனுக்குப் பாலூட்டிய மார்பகத்தை அறுப்பேன்" என்று சூள் உரைத்து, வாள் ஏந்திப் போர்க்களம் சென்றாள்; தன் மகன் மார்பில் காயம்பட்டு இறந்து கிடந்ததைக் கண்டாள். அப்பொழுது, அவனைப் பெற்ற பொழுது

அடைந்த மகிழ்ச்சியைவிட மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

மற்றொரு தாயின் கணவன் முன்பு நடந்த போரில் இறந்துவிட்டான். அடுத்து நடைபெற்ற போருக்குத் தன் ஒரேமகனை—வயதில் சிறிய மகனைச் சீவிச் சிங்காரித்துப் போருக்கு அனுப்பினாள். அவன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன்; போர்ப்பயிற்சி இல்லாதவன்; ஆயினும் அவன்தான் அந்த வீட்டுக்கு ஆண்பிள்ளை. ஆதலால் அக்குடும்பத்தின் சார்பில் அச்சிறுவன் போர்க்களம் சென்றான்; தன்னால் இயன்ற அளவு போர் செய்து மாண்டான். அவனது தாய் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினாள்.

ஒரு பெண்ணின் தந்தை ஒரு போரில் இறந்தான். அவனுக்காகக் கல் நடப்பட்டது. அடுத்த போரில் அவள் தமையன்மார் இறந்தனர். அதற்கு அடுத்த போரில் அவளது ஆருயிர்க் கணவன் ஆவி துறந்தான். பிறகு நடைபெற்ற போரில் அவளது ஒப்பற்ற மகன் கலந்து கொண்டான். அவன் உடம்பு முழுமையும் பகைவர் விட்ட அம்புகள் தைத்திருந்தன. அவனைக்கண்டு மகிழ்ச்சிக் கண்ணீர் விட்ட தாய்,

> "கல்நின்றான் எந்தை; கணவன் களப்பட்டான்;
> முன்னின்று மெய்யவிந்தார் என்னைவர்;—பின்னின்று
> கைபோய்க் கணை உதைப்பக் காவலன் பின்னேடி
> எய்போல் கிடந்தானென் ஏறு."

என்று பாடினாள். இத்தகைய வீரப் பெண்மணிகள் அக்காலத்தில் மறக்குடி மகளிராக இருந்தனர்.

## வீர மன்னர்

தமிழரசர் தாங்கள் போருக்குப் புறப்படும் முன் சினந்து சூளுரைத்தல் மரபு. பூத பாண்டியன், "இந் நாட்

டின்மீது படையெடுத்து வந்த பகைவரை நான் வெல்லேனாயின், என் மனைவியைப் பிரிந்தவனாகுக! தென்னாட்டைக் காக்கும் பாண்டியர் மரபிலிருந்து யான் மாறிப்பிறப்பேனாகுக,'' என்று சூளுரைத்தான். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், ''என்மீது படையெடுத்து வந்துள்ள சேர சோழரையும் ஐம்பெருவேளிரையும் யான் வெல்லேனாயின், என்னைக் கொடுங்கோலன் என்று என் குடிமக்கள் தூற்றுவாராக; மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருமக்கள் எனது நாட்டைப் பாடாது ஒழிவாராக,'' என்று சபதம் செய்தான். சோழன் நலங்கிள்ளி, ''யான் எனது பகைவரை வெல்லேனாயின், பொதுமகளிர் மார்பில் எனது மாலை துவள்வதாக'' என்று சூள் உரைத்தான். இங்ஙனம் சூளுரைத்த மூவரும் அவரவர் செய்த போரில் பாராட்டத்தக்க முறையில் வெற்றி பெற்றனர். இத்தகைய வீர அரசரைப் பெற்ற போர்வீரர்களது வீரத்தைக் கேட்கவும் வேண்டுமோ!

போருக்குப் புறப்படும் முன் அரசன் தன் வீரர்களுக்குப் பெஞ்சோறு வழங்குவான்; நல்ல நேரத்தில் குடையையும் வாளையும் தான் படையெடுத்துச்செல்லும் திசை நோக்கி அனுப்புவான்; பிறகு கடவுளை வணங்கித் தன் வீரருடன் போருக்குப் புறப்படுவான். குடி மக்கள் பாதையின் இரு மருங்கிலும் இருந்து அவனுக்கு வெற்றி உண்டாக வாழ்த்துவர்; ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் நகரத்து எல்லை வரையில் அரசனுடன் சென்று மீள்வர். இவை பற்றிய விவரங்களையெல்லாம் செங்குட்டுவனது வடநாட்டு யாத்திரை பற்றிய செய்திகளிலிருந்து நன்கறியலாம்.

## முடிவுரை

மனிதன் வாழப் பிறந்தவன்; ஒருத்தியை மணந்து இன்ப வாழ்க்கை வாழக் கடமைப்பட்டவன். வாழ்வு

இன்பமாக இருக்க வேண்டுமாயின், இல்வாழ்க்கை நல் வாழ்க்கையாக இலங்குதல் வேண்டும். கருத்து ஒரு மித்த ஒருத்தியோடு வாழ்ந்தால்தான் இல்வாழ்க்கை சிறப்படையும். அச் சிறப்புக்குக் காதல் அடிப்படை யாகும். எனவே, நம் முன்னோர் காதல் திருமணத் தையே விரும்பினர். காதல் வாழ்க்கை சிறக்க வேண்டு மாயின், நாடு தன் ஆட்சி பெற்றதாக இருத்தல் வேண் டும். அடிமைப்பட்ட நாட்டில் காதல் வாழ்க்கை முற்றி லும் சிறப்படையாது. எனவே, காதல் வாழ்க்கைக்கு நாட்டு உரிமை இன்றியமையாதது. இதனாற்றான் பழந் தமிழர் போரை ஒரு கலையாகவே வளர்த்தனர்; அக்கலை யில் சிறந்து விளங்கினர். போருக்கு இலக்கணம் செய்த பெருமை உலகத்தில் தமிழர்க்கே உரிமையாகும். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் தமிழர்.

# 17. பண்டிதர் சவரிராயர்

## பாதிரிமார் தமிழ்த் தொண்டு

பெரும் புலவரும் சிறந்த ஆராய்ச்சியாளருமான பண்டிதர் சவரிராயர் கிறித்தவர். இவர் 1859-ஆம் ஆண்டில் பிறந்தவர்; 1923-ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தவர். இவரது தமிழ்த் தொண்டைப் பற்றி அறியு முன்பு கிறித்துவப் பெருமக்களின் தமிழ்த் தொண்டை இங்கு அறிதல் நலம் பயக்கும். ஏனெனில், அப்பெருமக்களின் தமிழ்த் தொண்டே சவரிராயர் தமிழ்த் தொண்டிற்கு அடிப்படை என்னலாம்.

கிறித்தவ சமயத்தைத் தமிழகத்தில் பரப்ப இத்தாலி, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய மேனுடுகளிலிருந்து வந்த பாதிரிமார்கள் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்துள்ளனர். அவர்கள் (1) தமிழ் உரை நடையை வளர்த்தனர்; (2) செய்யுள் நூல்களைச் செய்தனர்; (3) அகராதி நூல்களை இயற்றியனர்; (4) தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் மொழி பெயர்த்தனர்; (5) செய்தித் தாள்களையும், திங்கள் இதழ்களையும் தமிழில் தோற்றுவித்தனர்; (6) தமிழ் எழுத்து, மொழி, நூல்கள் இவற்றை ஆராய்ந்து ஆராய்ச்சி நூல்களை வெளிப்படுத்தினர்.

## தமிழ் உரைநடை நூல்கள்

உரைநடை அமைந்த முத்தமிழ் நூல்களை முதன் முதலில் எழுதி வெளியிட்டவர் மேனுட்டுப் பாதிரிமாரேயாவர். கி. பி. 1579-இல் 'கிறித்தவ வேதோபதேசம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. 1579-இல் 'கிறித்தவ வணக்கம்' என்னும் நூல் அச்சிடப்பட்டது. 17-ஆம்

நூற்றுண்டில் இராபர்ட்-டி-நொபிலி, ஜான் டிபிரிட்டோ என்ற பாதிரிமார்கள் உரைநடை நூல்களை எழுதினர்.

19-ஆம் நூற்றுண்டில் அச்சுப் பொறிகள் தமிழ் நாட்டிற்கு வந்த பிறகே உரைநடை நூல்கள் தமிழில் பெருகின. நாடெங்கும் பள்ளிகள் திறக்கப்பட்டன. எனவே, பலவகைப் பாட நூல்கள் தேவைப்பட்டன. சென்னைக் கல்விச் சங்கம், சென்னைப் பாடப் புத்தக சங்கம் என்ற சங்கங்கள் உலக சரித்திரம், இந்திய சரித்திரம், விஞ்ஞான பாடநூல்கள் முதலியவற்றை வெளிப்படுத்தின. †

## செய்யுள் நூல்கள்

வீரமாமுனிவர் 18-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் வாழ்ந்தவர்; சந்தாசாகிபின் காலத்தவர். அவர் ஏசுநாதர் வரலாற்றைத் 'தேம்பாவணி' என்ற பெயரில் ஒரு காவியமாகப் பாடினுர். திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை முதலிய செய்யுள் நூல்களை இயற்றினுர்.

## அகராதி நூல்கள்

தமிழில் வந்த முதல் அகராதி வீரமாமுனிவர் இயற்றிய சதுர் அகராதி என்பது. பெப்ரீசியஸ் என்ற செர்மன் பாதிரியார் 1779-இல் விரிவான அகராதி ஒன்றை வெளியிட்டார். ராட்லர் என்பவர் முப்பத்தோராயிரம் சொற்களைத் தொகுத்தார். அவர்க்குப் பின் டெய்லர் என்பவர் ராட்லர் முயற்சியைத் தொடர்ந்து, ஆயிரத்து நானூறு பக்கங்கள் கொண்ட பெரிய அகராதியை வெளிப்படுத்தினுர். பெர்சிவல் முதலிய அமெரிக்க அறிஞர் திரட்டிய பேரகராதியை வின்ஸ்லோ என்ற அறிஞர் வெளியிட்டார். அதில் அறுபத்தேழாயிரம் சொற்கள்

† மயிலை சீனி-வேங்கடசாமி, கிறிஸ்தவமும், தமிழும், பக். 24-29

வெளிப்படுத்தினர். **பெர்சிவல்** முதலிய அமெரிக்க அறிஞர்கள் திரட்டிய பேரகராதியை வின்ஸ்லோ என்ற அறிஞர் வெளியிட்டார். அதில் அறுபத்தேழாயிரம் சொற்கள் அடங்கியுள்ளன. காலப் போக்கில் தமிழில் வழங்கி வரும் சொற்களையும் சேர்த்துப் **போப் ஐயர்** வின்ஸ்லோவின் அகராதியை விரிவாக்கி வெளியிட விரும்பினர். அவர் இறந்துவிடவே, அம்முயற்சியைச் **சேண்டலர்** என்ற ஆங்கில அறிஞர் மேற்கொண்டனர்; சென்னை அரசாங்க ஆதரவில் அகராதியை வெளியிடத் தொடங்கினர். ஒரு பகுதி வேலை முடிந்த பிறகு அகராதியை வெளியிடும் பொறுப்பையும் உரிமையையும் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டது. இருபத்தைந்து ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு தமிழ்ப் பேரகராதி ஏழு பிரிவுகளுடன் வெளி வந்தது. இதில் நூறுயிரம் சொற்கள் காணப்படுகின்றன.[2]

## மொழி பெயர்ப்பு

திருக்குறளை **வீரமாமுனிவர்** இலத்தீனிலும், **கிரால்** என்பவர் செர்மானியத்திலும், போப் ஐயர் ஆங்கிலத்திலும், **லெமிரேசர்** என்பவர் பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்த்து வெளியிட்டனர். இப்பெருமக்களின் தொண்டினால் திருக்குறளின் சிறப்பு உலகமெல்லாம் பரவியுள்ளது. **போப் ஐயர்** நாலடியாரையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்; புறநானூற்றில் சில பாடல்களையும், புறப்பொருள் வெண்பா மாலையில் சில பகுதிகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; பரிதிமாற் கலைஞர் பாடிய 'தனிப் பாசுரத் தொகை' என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பலர் விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்தனர்.

---

2. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர், பக். 76—83.

## செய்தித் தாள்கள்

தமிழகத்தில் கிறித்தவரே தமிழ்ச் செய்தித் தாள்களையும் முதலில் வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்டவற்றுள் தமிழ்ப் பத்திரிகை (1831), சுவிசேஷப் பிரபல விளக்கம் (1840), நற்போதம் (1840), பாலதீபிகை (1840), சிறுபிள்ளையின் நேசத்தோழன் (1840), தினவர்த்தமானி (1856), மிஷின் பாடசாலைப் பத்திரிகை (1858), அருணோதயம் (1863), சுவிசேஷ தூதிகை (1863), சத்திய வேதக்கொடி (1881), தீர்க்க தரிசன சுப்பிர தீபிகை (1889), கிறிஸ்தவன் (1890) என்பன குறிப்பிடத்தக்கவை.[3] இச் செய்தித் தாள்கள் தமிழ் உரை நடையை நாட்டில் பரப்பிய பெருமையை உடையவை.

## ஆராய்ச்சி

திருநெல்வேலி மாவட்டத்தில் இடையன் குடியில் தங்கிச் சென்ற நூற்றுண்டில் சமயத்தொண்டு செய்து வந்த டாக்டர் கால்டுவெல் பல ஆண்டுகள் ஆராய்ந்து **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்னும் அரிய ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்; திருநெல்வேலி வரலாறு என்ற ஆராய்ச்சி நூலையும் ஆங்கிலத்தில் எழுதினுர். இப்பெரியார் பண்டைப் புகழ் வாய்ந்த கொற்கையில் ஆராய்ச்சி நிகழ்த்தினுர்; அந் நகரத்தை அகழ்ந்து அதன் தொன்மையை அறிய வேண்டும் என்று அரசினர்க்கு வேண்டுகோள் விடுத்தார். போப் ஐயர் தாம் ஆங்கிலத்தில் எழுதிய திருவாசகம் நாலடியார் என்னும் இரண்டு நூல்களிலும் எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரை அவரது ஆராய்ச்சி அறிவை நன்கு புலப்படுத்துவதாகும்.

---

3. மயிலை-சீனி வேஙகடசாமி, கிறிஸ்தவமும் தமிழும், பக். 82—86.

**ஜேகர்** என்ற செருமானிய அறிஞரும், **ரேயர்** என்பவரும் **ஆதிச்ச நல்லூர்** மேட்டின் ஒரு பகுதியை அகழ்ந்து ஆராய்ந்து, நமது பழமையையும் நாகரிகத்தையும் உலகிற்கு அறிவித்தனர். இந்திய மொழிகளில் மிகவும் பழமை வாய்ந்தது தமிழே என்பதையும், தமிழ், தெலுங்கு முதலிய தென்னாட்டு மொழிகளும், வட இந்தியாவில் உள்ள இராஜ்மகால் முதலிய திருந்தாத மொழிகளும் ஓரினத்தனவே என்பதையும் உலகறியச் செய்த பெருமை கால்டுவெல் ஐயருக்கே உரியதாகும். கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் மக்களுக்காகக் கல்வி நிலையங்களையும் மருத்துவ மனைகளையும் தோற்றுவித்தனர்; வாழ்வற்ற மக்களுக்கு வாழ்வளித்தனர். இன்றைய தமிழ்ச் சமுதாயத்திலிருந்து பெரும்பாலான கிறித்தவர் கல்வி கற்றிருப்பதற்குப் பாதிரியார் தொண்டே சிறந்த காரணமாகும்.

## இந்தியக் கிறித்தவர்கள்

மேனாட்டுப் பாதிரிமாரைப் போலவே தமிழ்க் கிறித்தவரும் தங்கள் தாய்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். திருநெல்வேலித் தமிழரான கிருஷ்ணபிள்ளை என்பவர் **இரட்சண்ய யாத்ரிகம்** என்னும் பெரிய செய்யுள் நூலைப் பாடியுள்ளார். முனிசீப் வேதநாயகம் பிள்ளை பல செய்யுட்களையும் உரைநடை நூலையும் இயற்றியுள்ளார். வேதநாயக சாஸ்திரிகள் பல செய்யுள் நூல்களைச் செய்துள்ளார். சற்குணம் உவின் பிரட் ஐயர் 'ஹோலி வார்' என்னும் ஆங்கில நூலைத் **'திருப்போராடல்'** என்னும் பெயரில் மொழி பெயர்த்தார். நயனப்ப முதலியார் சென்ற நூற்றுண்டின் முற்பகுதியில் திருக்கோவையார் முதலிய நூல்களை முதன் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் **'கருணாமிர்த சாகரம்'** என்னும் அரிய இசை நூலை எழுதி

அழியாப் புகழ்பெற்றுர். இவ்வாறே தமிழ்க் கிறித்தவர் இயற்றிய செய்யுள் நூல்கள் பல; உரைநடை நூல் களும் பலவாகும்.

## மேனுட்டு அறிஞர்கள்

**கிரியர்சன்** என்னும் அரசியல் உயர் அலுவலாளர் இந்திய மொழிகளை ஆராய்ச்சி செய்து, ஆங்கிலத்தில் பெருநூல் (Linguistic Survey of India) எழுதியுள்ளார். தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தென்னுட்டு மொழிகளுக்குரிய அகராதி நூல்களையும், இலக்கண நூல்களையும்[4] வடநாட்டு மொழிகட்குரிய அகராதி நூல்களையும் அரசாங்க உயர் அலுவலர் பலர் (மேனுட்டார்) அரிதின் ஆராய்ந்து தொகுத்து வெளியிட்டனர். அறிஞர் **அலெக்சாண்டர் ரீ, லாங்ஹர்ஸ்ட்** முதலிய அறிஞர் புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு நம் நாகரிகப் பழைமையை வெளிப்படுத்தினர்.[5] **ரீ, லாங் ஹர்ஸ்ட், துப்ரெயில்** முதலியோர் தமிழகக் கட்டடக்கலையை ஆராய்ந்து நூல் எழுதினர்.[6] **டாக்டர் டர்னல்** முதலியோர், தென் இந்திய எழுத்துக்களை ஆராய்ந்து நூல்கள் பல எழுதினர்.[7] **கில்பர்ட் சிலேட்டர்** போன்ற அறிஞர் திராவிடர் நாகரிகத்தை நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தினர்.[8] **ராலின்சன்** முதலிய அறிஞர் சங்க காலத்தில் தமிழகத்துக்கும் மேலை நாடுகளுக்கும் நடைபெற்ற கடல்

---

4. A. D. Campbell - A Grammar of the Telugu Language.
5. Alexander Rea-Catologue of the pre-historic Antiquities from Adichanallur and Perumbair.
   Longhurst-Annual Archaeological Reports, Madras.
6. Rea-Pallava Architecture.
   Longhurst-Pallava Architecture
   Dubreil-Dravidian Architecture.
7. Dr. Burnell-Elements of South Indian Paleography.
8. Dr. Gilbert Slater-Dravidian Element in Indian culture.

வாணிகத்தைப் பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதினர்.[9] இத்தகைய ஆராய்ச்சிக் காலத்தில்தான் பண்டிதர் சவரிராயர் பிறந்து வளர்ந்தார்.

## பண்டித சவரிராயர்

இப்பெரியார் நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளத்தில் 1859-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 20-ஆம் நாளில் பிறந்தார். இவர் முன்னோர் மருத்துவ அறிஞராயும், தமிழ்ப் புலவராயும் சிறந்திருந்தனர். இவர் தந்தையார் மருத்துவர்; தேவசகாயம் என்பவர்; தாயார் ஞானப்பிரகாசி அம்மையார்.

தந்தையார் புலமையில் சிறப்புற்றிருந்தாற் போலவே மைந்தரும் சிறக்க விரும்பினார்; கொப்பன் பட்டித் தமிழ்ப் புலவர் செபாஸ்தியன் பிள்ளையிடம் தமிழ் பயின்றார்; தமது பதினைந்தாம் வயதில் கொல்லம் குருமடத்தில் சேர்ந்தார். அங்கு இரண்டு ஆண்டுகளில் லத்தீன் மொழியிலும், சமய சாத்திரத்திலும் தேர்ச்சி பெற்றார்; 1878-இல் தாயார் விருப்பப்படி திருமணம் செய்துகொண்டார்.

பண்டிதர் சவரிராயர் முதலில் தூத்துக்குடி தூய சவேரியார் தொடக்கப்பள்ளியில் ஆசிரியரானார்; அப்பொழுது தம் இடைவிடா முயற்சியால் ஆங்கிலம் கற்றுச் சிறந்த புலமை பெற்றார்; வடமொழியையும் தாமே முயன்று பயின்றார்; பின்பு உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியரானார்; பாரதவம்ச விளக்கம் முதலிய நூல்களை எழுதினார். அவற்றால் இவரது பெயரும் பெருமையும் நாட்டில் பரவின.

---

9. Rawlinson-Intercourse between India and the Western World.

1894-ஆம் ஆண்டு திரிசிரபுரத்துத் தூய சூசையப்பர் கல்லூரித் தலைவர்கள் இப் பெரியாரைத் தம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராய் அமர்த்தினர். இவர் சில ஆண்டுகளுள் அக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவரானார்; அவ்வேலையில் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றினார்.

## பொதுநலத் தொண்டு

இப்பெரியார் தூத்துக்குடியில் இருந்தபொழுதே உழவர் கழகத்தை உண்டாக்கி அவர்கள் நலத்திற்கு உழைத்தார்; மதுரைத் தமிழ்ச் சங்க நலனுக்குப் பாடுபட்டார்; திருச்சிராப்பள்ளி நகரவையில் இரண்டு முறை உறுப்பினராக இருந்து பொதுநலத் தொண்டு செய்தார்; கூட்டுறவு பேங்கு ஒன்றை அமைத்தார்; ஏழை மாணவர்க்குப் பொருள் உதவி செய்தார். இங்ஙனம் தமிழ்த்தொண்டும் பொதுநலத்தொண்டும் செய்த இப்பெருமகனார் 1923-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24-ஆம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## தமிழ்த் தொன்மை ஆராய்ச்சி

இப்பெரியார் தம் காலத்தில் வெளிவந்த தமிழகம் பற்றிய ஆங்கில ஆராய்ச்சி நூல்களைப்படித்தார்; இந்திய வரலாற்று நூல்களைப் படித்தார்; தமிழின் பழமையை உள்ளவாறு எடுத்துக்கூறிய நூல்களையும் படித்தார்; 'தமிழில் உள்ள நல்லன எல்லாம் வடமொழியினர் கூட்டுறவால் உண்டாயினவே' என்று எழுதப்பெற்ற ஆங்கில ஆராய்ச்சி நூல்களையும் படித்தார்; தமது சிறந்த தமிழ்ப்புலமையைக்கொண்டு உண்மைகளை ஆராய்ந்தார்; தமிழர் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்தவர்—தமிழ்மொழி காலத்தால் பழமையும் இலக்கியத்தால் பெருமையும் உடைய மொழி என்பதை அறிந்தார்;

இவற்றைத் தக்க சான்றுகளுடன் ஆங்கிலத்தில் வெளியிட விரும்பினர்; அம் முயற்சிக்காகவே தமிழ்த்தொன்மை ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவினர்; அதன் சார்பில் “தமிழ்த் தொன்மை ஆராய்ச்சி” என்ற ஆங்கில இதழை வெளியிடத் தொடங்கினர்; சித்தாந்த தீபிகை முதலிய அக்கால ஆங்கில இதழ்களிலும் பல கட்டுரைகள் வரைந்தார்.

தமிழ்த்தொன்மை ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பண்டிதரோடு அவரது ஆங்கில ஆராய்ச்சி மலரில் கட்டுரை வரைந்த பெரியார் பலராவர். அவருள் வி. ஜே. தம்பிப் பிள்ளை, கே. ஜி. சேஷய்யர், வி. பி. சுப்பிரமணிய முதலியார், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை, இ. எஸ். டபிள்யூ. சேனாதிராசர், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், திவான்பகதூர் டி. தேசிகாச்சாரியார், திவான்பகதூர் டி. எம். அரங்காச்சாரியார், டி. சதாசிவ ஐயர், டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், வி. கனகசபைப் பிள்ளை, எம். சீவரத்தினம், சி. திருமலை நாயடு, மு. இராகவையங்கார் என்பவர் குறிக்கத்தக்கவராவர்.

## ஆராய்ச்சி அறிவு

சவரிராயர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவாகும். ஒவ்வொரு கட்டுரையின் அடியிலும் சிலர் மேற்கோளாகக் காட்டியுள்ள நூல்கள் பலவாகும்; ஆராய்ச்சி இதழ்கள் பலவாகும். அவை இவரது ஆழ்ந்த புலமையையும் அகன்ற அறிவினையும் நன்கு உணர்த்த வல்லவை.

இவர் எழுதியுள்ள பல கட்டுரைகளுள் பரத நிலம் அல்லது திராவிட இந்தியா, தமிழரசர்க்கும் பாண்டவர்க்கும் இருந்த உறவு, சேர—கேரள என்னும் சொற்கள் பற்றிய குறிப்பு, ஆரியர்—தமிழர் கலப்பு என்னும் கட்

டுரைகள் இவர்தம் பன்னூல் புலமையையும், பரந்த ஆராய்ச்சி அறிவையும் நன்கு விளக்க வல்லவை. பிறர் வரைந்துள்ள பொருத்தமற்ற கூற்றுக்களை இவர் எடுத்துக் காட்டிக் கண்டிக்கும் திறம் பாராட்டற்குரியது.

(1) "பலுசிஸ்தானத்தில் வாழும் 'ப்ராஹுயி' என்னும் மொழியைப் பேசுகின்ற மக்கள் தங்கள் முன்னோர் 'அலெபோ' என்னும் இடத்திலிருந்து வந்தவர் எனக் கூறுகின்றனர். அக்கூற்றை நம்பினால், இவர் முன்னோர் ஆரிய இனத்தவராகலாம்," என்று கால்டுவெல் கூறியுள்ளார். அதுபற்றி எழுதும்போது சவரிராயர், "டாக்டர் கால்டுவெல் எந்த அடிப்படைமீது இக் கருத்தை உணர்த்துகிறார் என்பது நமக்குத் தெரியவில்லை. இது தாமாக வலிந்துகொண்ட தேவையற்ற கருத்து என்பதை நாம் வருத்தத்தோடு சுட்ட வேண்டுபவராக இருக்கின்றோம்"[10] என்று எழுதியிருப்பது கவனிக்கத் தகும்.

(2) சந்திரகுப்த மௌரியன் காலத்தில் வாழ்ந்த மெகஸ்தனீஸ் தமிழகத்தைப் பற்றிக் கீழ்வருமாறு எழுதியுள்ளான்: "ஹெராக்ளிசுக்குப் பண்டேயா என்ற மகள் இருந்தாள். தந்தை அவளுக்கு இந்தியாவின் கடலோரத் தென்பகுதியை 365 கிராமங்களாகப் பிரித்துத் தந்தான்; ஒவ்வொரு கிராமத்தாரும் ஒரு நாளில் அவளுக்குக் கப்பம் கட்ட ஏற்பாடு செய்தான்." பண்டிதர் சவரிராயர், "அறிஞர் ஆர். சி. டட் தாம் வரைந்த 'பண்டை இந்தியா' (Ancient India) என்னும் நூலில் மெகஸ்தனீஸ் கூற்றைப் பயன்படுத்தவில்லை" என்

[1] "We do not know on what ground Dr. caldwell bases his Opinion. We are sorry to note it is an unwarrented assertion." Tamilian Antiquary, 1913, P. 7.

பதை மிகுந்த வருத்தத்துடன் ஒரு கட்டுரையில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.[11]

3. "இராவணன் சீதையை எடுத்துச் சென்றான் என்ற இராமாயணக் கதை, உழவர்தொழில் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்குச் சென்றது என்னும் உண்மையை உணர்த்துவதாகும்," என்று டட் தமது நூலில் கூறியுள்ளார்.

உழு - தமிழ், உர் - (உழு) துளு மொழி. ஊர் - வயல்களால் சூழப்பட்ட இடம் என ஆராய்ச்சி செய்த சவரிராயர், "உழவு என்பது தமிழ்ச் சொல்; உழவு தமிழகத்துக்கே பழையது. இந்த உண்மையை உணராமல், ஆர். சி. டட் என்பவா இராமாயணக் கதையைத் தம் மனம் போனவாறு பொருத்தமற்ற முறையில் பொருள் கொள்ளுதல் எவ்வளவு பொருத்தமற்றது," என்று வருந்தி எழுதியுள்ளார்.[12]

4. " 'சேர' என்னும் சொல் 'சேகரம்' (முடி) என்னும் வடசொல்லிலிருந்து வந்தது, 'கேரள' என்பது 'நாளிகேரம்' (தேங்காய்) என்னும் சொல்லிலிருந்து வந்தது" என்று வடமொழிவாணர் கூறியும் எழுதியும் வந்தனர். அதற்குப் பண்டிதர் சவரிராயர் கீழ்வரும் விளக்கத்தைத் தந்தார்.

---

[11] "It is regrettable that owing to utter want of information regarding Southern India, so great a historian as R. C. Dutt has not been able to claim the valuable evidence furnished by Megasthenies to any part of India." Tamilian Antiquary, 1913, P. 56.

[12] "How different is this from the assumption of Mr. Dutt that the art of agriculture spread from the north to the south and all from a fanciful and an ingenious reconstruction of the great stories!" Tamilian Antiquary, 1913, P. 20.

கன்னட நாடு சேர நாட்டின் வடக்கே இருப்பது. 'சேரர்' என்னும் சொல்லும் 'சேரலர்' என்னும் சொல்லும் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூறு முதலிய நூல்களில் காணப்படுகின்றன. ஆதலால் அவை காலத்தால் பழமை வாய்ந்த சொற்களாகும். தமிழில் 'செய்தான்' என்பது கன்னடத்தில் 'கெய்தான்' (Geydan) எனவரும்; 'சென்னி' என்பது 'கென்னி' எனவரும்; 'செவி' என்பது 'கிவி' என வரும். அதாவது, தமிழ்ச் 'ச' கன்னடரால் 'க' என உச்சரிக்கப் பெறும். ஆதலால் 'சேரர்' என்னும் பழந்தமிழ்ச் சொல் 'கேரர்' என்றும், 'சேரலர்' என்பது 'கேரலர்' என்றும் கன்னடரால் கூறப்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறே 'சேரலம்' என்பது 'கேரலம்', 'கேரளம்' என வந்திருத்தல் வேண்டும் என்று சொல் ஆராய்ச்சி கொண்டு பண்டிதர் விளக்கியிருத்தல் பாராட்டத்தக்கது. [13]

### வேண்டுகோள்

மாண்பு மிக்க இவ்வாராய்ச்சிப் பேரறிஞரது பெரும் புலமையும் ஆராய்ச்சி அறிவும் இன்று உள்ள தமிழர்க்குத் தெரிய வழியில்லை. சவரிராயர் காலத்துத் தமிழ் மக்களுக்கு இருந்த தமிழ்ப்பற்றைவிட இன்றுள்ள தமிழ் மக்களுக்கு மிகுந்த அளவு பற்று வளர்ந்து வருகிறது. ஆராய்ச்சிக் கண்கொண்டு எதனிலும் உண்மை காண வேண்டும் என்னும் பேரவா இக்கால இளைஞரிடம் பெருகி வருகிறது. இப் பொற்காலத்தில்தான் சவரிராயரின் அழுத்தமான ஆராய்ச்சி தமிழ் மக்களிடையே

---

[13] "Thus we can have no hesitation in saying that 'chera' is a contraction of 'cheralam' and that cherala and Kerala are etymologically and historically the same and that Kerala is of more recent origin than cherala, the south Indian classical word, as the latter is recorded inPurananuru of the Sangam Age."-Tamilian Antiquary, 1913, pp. 63-64.

பரவுதல் வேண்டும். தமிழரின் தொன்மையையும் பெருமையையும் அழுத்தந் திருத்தமாக அறையும் அவர் கட்டுரைகள் இக்கால இளைஞர்க்கு இனிய விருந்தாக அமைதல் வேண்டும். ஆதலால் (1) அவற்றைத் தொகுத்து வெளியிடல் அவர்தம் நன்மக்கள் கடமையாகும்; (2) அக்கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால்தான் தமிழ்நாட்டுப் புலவர்களும் பொது மக்களும் படித்து ஊக்கம் பெற இடமுண்டாகும். இத் திருத்தொண்டினைச் செய்யும்படி பண்டிதர் சவரிராயருடைய நன்மக்களையும் தமிழ் ஆர்வம் கொண்ட பெரு மக்களையும் வேண்டுகிறேன்.

பண்டிதர் சவரிராயர் பற்றிய விழாவை மட்டும் கொண்டாடுவதில் பயனில்லை. 'அவரைப்போல் நாமும் தமிழ்ப்புலமை பெறவேண்டும் - ஆராய்ச்சி அறிவைப் பெறவேண்டும் - நாட்டுப் பற்றுக் கொள்ளவேண்டும் - பொதுநலத் தொண்டு செய்யவேண்டும்' என்று இளைஞர்கள் உறுதி செய்துகொள்ளவேண்டும், என்று வேண்டுகிறேன்.

பண்டிதர் சவரிராயர் மரபு இந்நாட்டில் வாழ்வதாக! அவரது திருப்பெயர் தமிழர் உள்ளங்களில் நின்று நிலவுக!

# 18. பாரதியார்

## காலத்துக்கேற்ற கவிஞர்

சங்ககாலத் தமிழர் போரையும் காதல் வாழ்வையும் தம் இரு கண்களாகக் கருதினர். ஆதலால் சங்க காலச் சான்றோர் இவ்விரண்டு பற்றியே நூல்களைச் செய்தனர். அவையே அகப்பொருள் நூல்கள் என்பன. பல்லவர் காலத்தில் பக்திநெறி தமிழகத்தில் பெருக்கெடுத்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திப் பாடல்களைப் பாடிக் குவித்தனர். சோழர் காலத்தில் மொழி பெயர்ப்பு வேலை தொடங்கியது; வடமொழி நூல்களைத் தழுவித் தமிழ்ப்புலவர்கள் பெருங் காவியங்களைப் பாடினர். சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் என்பன இவ்வகையைச் சேர்ந்தவை.

சோழர்க்குப் பிற்பட்ட காலத்தில் பௌராணிக சமயம் நாட்டில் பரந்தது. தமிழ்ப் புலவர்களை ஆதரிக்க அரசு இல்லை. பௌராணிக சமயம் பரவிய அக்காலத்தில் எண்ணற்ற தலபுராணங்கள் தோன்றின. கிறிஸ்துவம் இந் நாட்டில் பரவுவதற்காகவே வீரமாமுனிவர் தேம்பாவணி என்னும் காவியத்தைப் பாடினார். அவ்வாறே இசுலாத்தைத் தமிழரிடையே பரப்புவதற்கும் தமிழ் முஸ்லிம்கள் நபிநாயகத்தின் வரலாற்றை அறியவுமே உமறுப் புலவர் சீறாப்புராணம் பாடினார். இவ்வாறு தமிழ் இலக்கியம், மக்கள் மனப்பான்மைக்கு ஏற்ப-காலத்தின் தேவைக்கு ஏற்ப - அவ்வப்பொழுது புலவர் பெருமக்களால் செய்யப் பட்டது என்பதை நாம் உணர்வது நல்லது.

## இருபதாம் நூற்றுண்டில்

வெள்ளேயர் ஆட்சியில் வெறுப்புற்ற மக்கள் உரிமை வேண்டுமென்று இருபதாம் நூற்றுண்டில் காங்கிரஸ் இயக்கத்தை வளர்த்தனர்.

உரிமையின் தேவையைப் பற்றிச் சொல்லவல்லார் மக்களிடையே சொற்பொழிவுகள் ஆற்றினர். செய்தித் தாள் ஆசிரியர்கள் உரிமை வேட்கையைத் தம் எழுத்தின்மூலம் வளரச்செய்தனர். அக்காலச் சூழ்நிலே பாரதியாரை நாட்டுக் கவிஞராக்கியது.

## பாரதியார்

பாரதியார் எட்டையபுரத்தில் பிறந்தவர்; எட்டையபுரத்து அரசவைக் கவிஞரின் மகனுர்; தந்தையார் கவிஞர் ஆதலாலும், அரசவையில் கவிஞர் பலரைக் காணும் வாய்ப்பிருந்தமையாலும், இயல்பாகவே கவி பாடும் ஆற்றல் இருந்தமையாலும் பாரதியார் கவிஞர் என்று மன்னரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர் ஆங்கிலம், இந்தி, வடமொழி இவற்றையும் அறிந்தவர்.

## சாதிகளும் சமயங்களும்

நாட்டின் உரிமைக்கு மக்களது ஒருமுகமான ஒத்துழைப்புத் தேவை என்பதை அவர் உணர்ந்தார்; அவ்வொத்துழைப்புச் சமுதாயத்தில் இல்லே என்பதையும் அறிந்தார்; அதற்குரிய காரணங்களேயும் ஆராய்ந்தார். ஒரு நாட்டில் பிறந்த-ஒரே சமயத்தைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்களுள் ஆயிரக்கணக்கான சாதிகள் இருப்பதைக் கண்டார் ; அச் சாதிகளேக் கூறிக்கொண்டு உயர்வு தாழ்வுகளேக் கற்பித்துக்கொண்டு, மக்கள் தனித்தனிப் போக்கில் வாழ்வதை அறிந்தார்; இத்துடன் ஒரு சமயத்தார் மற்ருெரு சமயத்தாருடன் நெருங்

கிப் பழகாது, ஒருவர் மற்றொருவரை இழிந்தவராகக் கருதியதையும் கவனித்தார்; இந்தச் சாதி, மத வேறுபாடு களே இந்த நாட்டின் உரிமைக்கு யமனாய் இருக்கின்றன என் பதை எளிதில் அறிந்துகொண்டார்; தாம் அறிந்த வற்றைத் தாம் ஆசிரியராக இருந்த செய்தித்தாளில் கட்டுரைகளாக வரைந்தார்; பேசிய கூட்டங்களில் விளக்கிப் பேசினார்; நாட்டில் இருந்த குறைகளைச் சுட்டி அவை நீக்கப்படல் வேண்டும் என்று தம் பாக்களிலும் எழுதிவைத்தார்.

" ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே."

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்."

என்பது அவரது அழுத்தமான கருத்து.

## மூடப் பழக்க வழக்கங்கள்

சேர, சோழ பாண்டியர் ஆண்ட சங்க காலத்தில் அரசன் முதல் ஆண்டி ஈருக அனைவரும் கல்வி கற்றிருந் தனர். அரசன், அரசமாதேவி, கொல்லன், மருத்துவன், கூலவாணிகன், பாடினி, குறத்தி, குயத்தி, வேட்டுவச்சி முதலிய பலரும் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். ஆயின், பின் நூற்றாண்டுகளில் இந்நிலை மாறுபட்டது. தொழில் பற்றிய மக்கள் பிரிவுகள் பிறவி பற்றிய பிரிவுக ளாக மாறிவிட்டன. தாழ்ந்த சாதி மக்கள் கல்விகற்க வசதியில்லை. மேல் சாதிகளிலும் பலர் கல்வியின்றியே வாழ்ந்தனர். பல நூற்றாண்டுகள் தொடர்ந்துவந்த

இந்த அவலநிலையால் மக்களிடம் எதையும் எண்ணித் துணியும் ஆற்றல் குறைந்துவிட்டது. சமயக் கட்டுக் கதைகளும் (Mythologies), மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்கவழக்கங்களும் மக்களிடையே வேரூன்றி விட்டன. "ஏன் ?" "எப்படி ?" என்று கேள்விகேட்டு உண்மை அறியத் துணிவு இல்லாத காரணத்தால், மக்கள் ஏறத்தாழ விலங்கு நிலையில் வாழலாயினர். இந்த அவலநிலை பாரதியார் காலத்தில் இருந்தது; இன்றும் ஆராய்ச்சி அறிவைப் பயன்படுத்தாத பாமர மக்களிடம் இருந்து வருகிறது.

பகுத்தறிவாகிய ஆறுவது அறிவைப்பெற்ற மனிதன் அதனைப் பயன்படுத்தாது, மாக்கள் நிலையில் இருப்பதைக் கண்ட பாரதியார் உள்ளம் பதைத்தார்; மூட நம்பிக்கைகளாலும் பழக்க வழக்கங்களாலும் மனிதன் வாழ்வாங்கு வாழ முடியவில்லையே என்பதை எண்ணி எண்ணி மனம் நொந்தார்; அம் மக்களிடம் கோபமும் வருத்தமும் ஒருங்கே கொண்டார். இவ்விரண்டாலும் வெளிப்பட்டதே, "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்று தொடங்கும் நொண்டிச்சிந்து.

"நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே."

... ... ... ...
... ... ... ...

"ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்."

## நாட்டுப் பற்று

இந்திய நாடு அயலார் ஆட்சியில் இருத்தலாகாது-இந்தியரே இந்தியாவை ஆளவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையாகத் தோன்றியதே உரிமைக் கிளர்ச்சி. இதுபற்றிய பாரதியார் பாக்கள் உள்ளத்தில் ஊக்கத்தை வளர்த்தன. அப் பாடல்கள் அவரது உரிமை வேட்கையை உள்ளவாறு உணர்த்தவல்லவை.

“ இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.”

பாரதியாரின் உரிமை வேட்கையை உள்ளவாறு உணர்த்துவதற்கு இவ்வொரு செய்யுளே போதும் அன்றோ ?

## உரிமை இயக்கத் தலைவர்கள்

காந்தி அடிகள், திலகர், லஜபதிராய், வ. உ. சி. முதலிய உரிமை இயக்கத் தலைவர்களிடம் பாரதியார் அளவற்ற அன்பு கொண்டவர். ஆதலால் அவர் அப் பெருமக்கள்மீது சில செய்யுட்களைப் பாடியுள்ளார்.

## தெய்வப் பாடல்கள்

விநாயகர், முருகன், பராசக்தி, கண்ணன், கலைமகள், திருமகள் முதலிய தெய்வங்கள்மீது பாரதியார் பல பாக்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அவரது ஆழ்ந்த கடவுள் பற்றைக் கவினுறக் காட்ட வல்லவை. ‘ அறிவே தெய்வம் ’ என்ற தலைப்பில் அவர் பாடியுள்ள

பாக்கள் அவரது தெளிந்த அறிவைத் தெற்றெனத் தெரிவிக்கின்றன.

" ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!—பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?"
" மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப்—பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ ?"

## புதிய ஆத்திசூடி

ஔவையார் இயற்றிய ஆத்திசூடி அவர் காலத்துக்கு ஏற்றது. பாரதியார் பாடிய ஆத்திசூடி இக்காலத்திற்கு ஏற்றது. அச்சம் தவிர் - உடலினை உறுதிசெய் - எண்ணுவது உயர்வு - ஒற்றுமை வலிமையாம் - கூடித் தொழில் செய் - கேட்டிலும் துணிந்து நில் - கைத்தொழில் போற்று - சரித்திரத் தேர்ச்சிகொள் — சொல்வது தெரிந்து சொல் - தூற்றுதல் ஒழி - தையலை உயர்வு செய் - புதியன விரும்பு — பேய்களுக்கு அஞ்சேல் - வீரியம் பெருக்கு - வையத் தலைமைகொள் என்பன தன்னம்பிக்கை இழந்து நடைப் பிணங்களாயிருந்த தமிழர்க்கு ஏற்ற அறிவுரைகளாம்.

## பாப்பாப் பாட்டு

இக் குழந்தைப்பாடல் என்றும் அழியாது நிற்கும் தலைசிறந்த பாட்டாகும். கல்வி, உயிர்களிடத்து அன்பு, தமிழ் நாட்டுப்பற்று, தமிழ் மொழிப்பற்று, இந்திய நாட்டுப்பற்று, சாதி ஒழிப்பு ஆகிய கருத்துக்களைக் குழந்தையின் உள்ளத்தில் இளமையிலேயே பதியச் செய்ய வேண்டும் என்னும் ஆவலால்தான் பாரதியார் பாப்பாப் பாட்டுப் பாடியுள்ளார். பள்ளிகளில் இப்பாடல் முழுமை

யையும் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்; மனப் பாடம் செய்யும்படியும், அதன் பொருளுணர்ந்து நடக் கும்படியும் பிள்ளைகளைப் பழக்கவேண்டும். இளம் பரு வத்தில் இத்தகைய நற் கருத்துக்கள் உள்ளத்தில் பதியு மாயின், சிறுவன் பெரியவனாகும்போது இந்த எண் ணங்கள் எளிதில் செயல்படும். அதனால் நாடும் நலம் பெறும்.

" காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

" சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்;
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

" உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா!"

இப் பாடல்களின் எளிமையும் கருத்தருமையும் எண் ணிப் பார்க்கத்தக்கவை.

**மாதர் முன்னேற்றம்**

இறைவன் ஆண்களைப் போலவே பெண்களையும் அறிவுடையவராகவே படைத்தான். மனித சமுதாயத் தில் பெண்கள் தொகை ஏறத்தாழப் பாதியாகும். ஆணும் பெண்ணும் சேர்ந்ததே வாழ்க்கை. அவ்விருவர் வாழ்க்கையால்தான் மனித சமுதாயமே வளர்கிறது. எனவே, அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி முதலிய யாவும் ஆடவரைப் போலவே பெண்களுக்கும் இன்றியமை யாதவை ஆகும்.

இந்த உண்மையை இடைக்கால ஆண்கள் மறந்து பெண்களை அடிமை கொண்டனர். இதனால் சமுதாயத்தின் ஒரு பகுதி அறிவிழந்தது. அறிவற்ற பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எப்படி அறிவுள்ளவராக வளரமுடியும்? இல்லறத்தைத் திறம்பட நடத்தவும், குழந்தைகளை நன்னெறியில் வளர்க்கவும், கணவனுக்கு ஏற்ற உயிர்த்துணைவியாக வாழவும், ஒழுக்க மேம்பாட்டுடன் விளங்கவும் பெண்களுக்குக் கல்வி தேவை.

கல்வி என்னும் மலர்வனத்தில் மான்போன்ற மங்கையரை உலவ விடுதலே அறிவுடைய மக்கள் கடமை. கல்வித் தகுதியால் வாழ்வரசியாக விளங்க வேண்டுவது பெண்ணின் கடமை. இல்லத்தை ஆள்பவள் ஆதலால் அவள் **இல்லாள்** எனப்பட்டாள்; மனைக்கு உரியவள் ஆதலால் **மனைவி** எனப்பட்டாள்; இல்வாழ்வுக்கு அரசி ஆதலால் **வாழ்வரசி** எனப்பட்டாள். இம் மூன்று உரிமையும் பெண்ணுக்கே உரியவை என்பது, இச் சொற்களுக்கு ஆண்பால் சொற்கள் இல்லாதிருத்தலைக் கொண்டு நன்கு தெளியலாம்.

இந்த உண்மைகளைப் பாரதியார் நன்கு உணர்ந்தவர். சமுதாயத்தில் பெண் கல்வி இருந்தால்தான் குடும்பம் நல்ல முறையில் இயங்கும். குடும்பங்கள் நல்ல முறையில் இயங்கினால் சமுதாயம் அறிவு பெற்றதாகும். அறிவுடைய சமுதாயமே நாட்டுக்குத் தேவை. எனவே, நாகரிகம் வளர—நாடு நலம் பெற—மக்கள் நலம் பெறப் **பெண் கல்வி தேவை.** இவ்வுண்மையை நன்குணர்ந்த பாரதியார், பெண்கள் முன்னேற்றம்பற்றிப் பல பாக்கள் பாடியுள்ளார்.

> *" பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி*
> *பேணி வளர்த்திடும் ஈசன்;*
> *மண்ணுக் குள்ளே சிலமூடர்—நல்ல*
> *மாதர் அறிவைக் கெடுத்தார்.*

> "கண்கள் இரண்டினில் ஒன்றைக்—குத்திக்
> காட்சி கெடுத்திட லாமோ?
> பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம்
> பேதமை யற்றிடுங் காணீர்"

புதுமைப் பெண்கள் தம் கருத்துக்களை வெளியிடுவ தாகப் பாரதியார் சில பாக்களைப் பாடியுள்ளார். அவற்றுள் கீழ் வரும் இரண்டைக் காண்க:

> "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
> பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
> எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
> இளைப்பில்லை காணென்று கும்மியடி."

> "காதல் ஒருவனைக் கைபிடித்தே அவன்
> காரியம் யாவினும் கைகொடுத்து,
> மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச்செய்து வாழ்வமடி."

## இயற்கை வருணனை முதலியன

காலை, மாலை, நிலவு, விண்மீன், மழை, புயற்காற்று, அழகு என்பன பற்றிய இயற்கைப் பாடல்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. கைத்தொழில் பாடல் இக்காலத்திற்கு இன்றியமையாதது.

## முப்பெரும் பாடல்கள்

**கண்ணன் பாட்டுப்** பாரதியாரின் புலமையை உயர்த்திக் காட்டுவது; அவரது கற்பனைத்திறனைக் கவினுறக் காட்டுவது. கண்ணனைத் தோழனாகவும், தந்தையாக வும், சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும், ஆசிரி யனாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும், காதலனாகவும், பாடியுள்ள பாக்கள் படிக்கப் படிக்க இன்பத்தை உண் டாக்குவன. இவ்வாறே கண்ணம்மாளைப் பற்றிய பல திறப் பாக்களும் கருத்தைக் கவர்வன.

**பாஞ்சாலி சபதம்** ஒரு சிறந்த காவியம். பாரதியாரின் தமிழ்ப்புலமைக்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**குயில் பாட்டு** என்பது தேனூறும் தெவிட்டாத பாடல். சமுதாயப் பழக்க வழக்கங்களேயும், கருத்துக்களேயும் குயில் பாட்டில் நுழைத்துப் பல அறிவுரைகளேப் புகுத்தும் ஆசிரியர் திறமை எண்ணி எண்ணி வியக்கத் தக்கது.

## பாரதியார் தமிழ்ப்பற்று

பாரதியார் பல மொழிகளே அறிந்தவர்; அவ்வறிவு கொண்டு தமிழின் பழைமையையும் பெருமையையும் பாங்குறத் தெளிந்தவர்; அதனுற்ருன் துணிவுடன்,

*“ யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்கும் காணேம்;”*

என்றும்,

*“ யாமறிந்த புலவரிலே கம்பனேப்போல்*
*வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லே*
*உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லே”*

என்றும் பாடியுள்ளார்.

இத்தகைய சீரிய செந்தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பெற்ற தமிழர்கள், அம்மொழியைப் பற்றிய அறிவின்றிப் பாமரராய் விலங்குகளாய் வாழ்வது கண்டு வருந்தினுர்;

*“ தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவுவகை செய்தல் வேண்டும்”*

*“ சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்*
*தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்”*

என்றும் அறிவுறுத்தினர்.

பலகலை அறிவு வளர்ந்து வரும்போது அப்பலகலை நூல்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்று விரும்பினர்; மேலும் என்றும் இறவாத புகழுடைய புதிய நூல்களைச் செய்தல் வேண்டும் என்று ஆவல் கொண்டார்; பழைய கதைகளைப் பேசி ஆக்க வேலையில் ஈடுபடாதிருத்தல் அறிவீனம் என்று கண்டித்தார். கீழ் வரும் அவர் பாடலைப் பாருங்கள் :

*" பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமை இல்லை;*
*திறமான புலமையெனில் வெளிநாட்டார்*
*அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்."*

குழந்தையின் இளம் உள்ளத்தில் தாய்மொழிப் பற்று வேரூன்றி வளரவேண்டும் என்பது பாரதியார் விருப்பம். அதனல் அப் புலவர் பெருமான்,

*" சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்*
*தொழுது படித்திடடி பாப்பா "*

என்று பாப்பாப் பாட்டில் தெளிவாகக் கூறியுள்ளார்.

## பாரதியார் எழுத்தாளர்

திருவை ஆள்பவன் 'திருவாளன்' என்பது போல, எழுத்தை ஆள்பவன் 'எழுத்தாளன்'. இங்கு எழுத்து என்பது எழுத்தாலாகிய சொற்களையும் சொற்களாலாகிய இலக்கியத்தையும் குறிக்கும். நினைத்தபோது தம் படைப்புக்களில் இலக்கியச் சொற்களையும் தொடர்களையும் கருத்துக்களையும் எடுத்து ஆள்பவனே எழுத்தாளன்

என்று கூறப்பெறுவான். இத்தகைய எழுத்தாளரே **தொல்காப்பியர்** முதலிய சான்றோர். அச்சான்றோர் வரிசையில் பாரதியாரும் தமது தமிழ்ப்புலமையால் - எழுத்தாளும் திறமையால் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டார்.

### பாரதியார் பரம்பரை

இலக்கிய நூல்களைப் படித்துத் ' தமிழ் எனது தாய்மொழி ' என்னும் இறுமாப்போடு பாரதியாரின் வழித்தோன்றல் என்று கூறிப் பெருமையடையும் **பாரதிதாசன்** இறவாத புகழுடைய கவிஞராவார். புலமையாலும் - கவிதை இயற்றும் திறனும் இக் கவிஞர் பெருமான் பாரதியாருக்கு 'நேர் வாரிசு' என்று துணிந்து கூறலாம். இவருக்கு வாரிசாகக் **கவிஞர் முடியரசன்** முதலியோர் விளங்குகின்றனர். இவர் அனைவரும் பாரதியாரின் பரம்பரையினர். பாரதியாரும் அவரது பரம்பரையும் வாழ்க !

# 19. சிறு தெய்வ வணக்கம்

சிறு தெய்வ வணக்கம் பற்றிய ஆராய்ச்சி, சமய ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகும். ஆதலின் இவ் வாராய்ச்சி செய்து உண்மை காணுதல் அறிஞர் கடனு கும். இவ்வாராய்ச்சிக்கு இக் கட்டுரை ஓரளவு துணை செய்தல்கூடும். இங்கு அவ்வணக்கத்தின் தோற்றுவாய், பரவல், இற்றைய நிலை-இன்ன பிறவற்றை நூல் வழக் கோடும் பொருத்தி ஆராய்ச்சி நிகழ்த்துவோம்.

## தொல்காப்பியம்

உலகில் பண்டைநாளில் சிறு தெய்வ வணக்கம் இல்லாத நாடோ - ஊரோ இல்லை என்பது உலக வர லாறு உரைப்பதாகும். தமிழகத்துப் பெரு நூலாய் விளங் கும் தொல்காப்பியம் இதுபற்றி யாது கூறுகிறதென்ப தைக் காண்போம் :

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

அகத்திணை இயல், சூ. 5

இதில் குறிஞ்சி நிலத் தெய்வம்-முருகன் ; முல்லை நிலத் தெய்வம்-திருமால் ; மருதநிலத் தெய்வம் - வேந்தன் (இந்திரன்); நெய்தல் நிலத் தெய்வம்-முருகன் தாயாகிய பழையோள் (துர்க்கை). இத் தெய்வங்களுள் இன்று சிறு தெய்வங்களாகக் கருதப்படுவன இந்திரன், வரு ணன், துர்க்கை. இனி இந் நிலங்கள் ஒவ்வொன்றிலும்

கூறப்பட்ட தெய்வமே அன்றிச் சிறு தெய்வங்களும் உண்டென்பது இலக்கியத்தாலும் நச்சினார்க்கினியர் உரையாலும் உணரலாம். அவருட் சிறந்தார் காமன், சூரர மகளிர் முதலியோர். இடை நிலத்தாராய ஆயர், திருமால் மகனான காமனை வணங்கல் கலித்தொகையிற் (109) காண்க. குறிஞ்சி நிலத்தார் சூரர மகளிரை வணங்கல் குறுந்தொகை (53) யிற் காண்க.

## நடுகல் தெய்வங்கள்

போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்க்குக் கல் எடுத்து விழாச் செய்தல் மரபு. அதுவே தமிழகத்துள் சிறப்புற்ற தெய்வ வணக்கமாக இருந்ததென்பது தொல்காப்பியர் விரிவாகக் கூறலால் நன்கு விளங்கும். (1) கற்காண்டல், (2) கால்கோள், (3) கல்லை நீர்ப்படுத்தல், (4) கல்லை நடுதல், (5) வீரன் பெயர்-செயல் முதலியவற்றைக் கல்மீது பொறித்தல், (6) கால்கொண்ட தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தல் என இக் கல் எடுப்பு விழா ஆறு வகைப்படும் என்பர் தொல்காப்பியர். நடு கல்லைப் பீலியாலும் மலராலும் அணிசெய்து, பல்லியம் ஒலிக்க விழவு செய்தல் தமிழர் மரபு. இங்ஙனம் நாட்டப்படுங் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புக்களும் செய்தலும் பழந் தமிழர் மரபு. இதனைச் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்ததனைக் கொண்டு விளக்கமாக அறியலாம்.

இங்ஙனம் வீரர்க்குக் கல் நட்டமை-நட்டு வழிபட்டமை பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பலவிடத்தும் பரக்கக் காணலாம்.

1 " கல்லே.........தொழாதனை கழிதல் ஓம்புமதி "
(வீரனது கல்லைத் தொழாமற் போகாதே.)

(புறநானூறு-263)

2 " அணிமையிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்(து)
இனிநட் டனரே கல்லும்." (ஷை-264)

3 " ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்
போங்கைஅயந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் தோன்றல் !"
(புறநானூறு-265)

4 " (கோப்பெருஞ் சோழன்) கெடுவி னல்லிசை சூடி
நடுகல் ஆயினன் புரவலன் எனவே" (ஷை-221)

5 எழினி என்னும் சிற்றரசன்,
" நடுகற் பீலி சூட்டி......கல்லாயினன் " (ஷை-232)

6 " உயரிசை வெறுப்பத் தோன்றிப் பெயரே
மடஞ்சான் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே" (ஷை-260)

7 " நடுகல் ஆகிய வென்வேல் விடலை "

8 " ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் "

9 " புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி
நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்" (ஷை-329)

10. " ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பில் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே " (ஷை-335)

11 " அடும்புகழ் பாடி அழுதழுது நோனா(து)
இடும்பையுள் வைகி இருந்த—கடும்பொடு
கைவண் குரிசில்கல் கைதொழூஉச் செல்பாண !
தெய்வமாய் நின்றான் திசைக்கு "
(புறப்பொருள் வெ. மாலை.)

12 " வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி அனன குரிசில்கல் - ஆட்கடிந்து
விற்கொண்ட வென்றி விறல்மறவர் எல்லோரும்
இற்கொண்டு புக்கார் இயைந்து."

(இல்-கோயில்) (ஷ-14)

எனப் பலபட வரும் அடிகளால் தமிழ் மரபு நன்கு விளங்கும்.

இங்ஙனம் நடப்பட்டுக் கோவில் அமைக்கப்பெற்ற இடங்களே, இன்று நாடெங்கும் பெருங்கணக்கில் அழிந்த நிலையில் இருந்துவரும் ஐயனார் கோயில், வீரபத்திரன் கோயில், மதுரைவீரன் கோயில், முனியன் கோயில், சங்கிலி கறுப்பன் கோயில், பாவாடைராயன் கோயில் முதலியன. சில கோயில்களில் குதிரைகள் சுடு மண்ணால் செய்யப்பட்டு வைக்கப்பெற்றிருத்தலை இன்றும் காணலாம். அவை பண்டைத் தமிழ் வீரர் குதிரைகளைக் குறிப்பன. ஐயனார் குதிரை வீரர்; சேனைக்குத் தலைவர். ஐயன்-தலைவன்; 'ஆர்' விகுதி உயர்வைக் குறிப்பது. 'தொல் காப்பியன் + ஆர்—தொல்காப்பியனார்' என்றார் போல 'ஐயன் + ஆர்—ஐயனார்' என்பது இலக்கண அமைதி பெற்ற உயர் சொல்லாகும். மதுரைவீரன் என்பவன் பாண்டியர் படையைச் சேர்ந்த பெருவீரன். அவன் சிறந்த போர் செய்து விழுப்புண்பட்டு மாய்ந்தவனாதல் வேண்டும்.

மேளதாளம் இன்றித் துடி (உடுக்கை) கொட்டிப் பரவும் முறையாலேயே—இவ்வீரர் வணக்கம் சங்க காலத் தமிழர் வணக்கத்தை மெய்ப்பித்தல் காணலாம். இவ் வீரர் வணக்கத்தின் பொருள், தாய்நாட்டின் பொருட்டுப் போரிட்டு உயிர் நீத்த வீரத் தமிழனுக்கு—நினைவுக் கல்லை நட்டு—அவ்வீரனைப் போற்றல்—அவனை ஒரு சான்றாகக்கொண்டு மற்ற தமிழர் நடக்க முயலல்—

அவனது புகழ், உலகம் உள்ளளவும் நிலவுக என்பனவே யாகும். இத்துணைச் சிறந்த பொருளுடைய தமிழர் வணக்கம் பிற்காலத்தில் தவருகக் கருதப்பட்டது. பல மதக் கோட்பாடுகள் தமிழகத்தே புகுந்து நிலை பெற்ற போது, இவ்வீரர் வணக்கம் நாளடைவில் சிறப்பிழந்தது. எனினும் இன்றும் தமிழகம் முழுவதும் இவ் வழிபாடு இருந்தே வருகிறது. இன்று நடைபெறும் வழிபாட்டு முறை ஓரளவு தவருகக் காணப்படில், அதனைத் திருத்தி இவ் வணக்கம் என்றும் நிலைபெறச் செய்தல் தமிழ் அறிஞர் நீங்காக் கடனாகும் அன்ருே? தமிழ் மக்கட்கு இவ் வணக்கத்தின் இன்றியமையாமையை விளக்கித் தமிழர் வீரத்தை உணர்த்தல் தமிழ்நாட்டை நன்னிலைக் குக் கொண்டுவரப் பாடுபடுவோர் இன்றியமையாக் கடன் அன்ருே?

இன்று தமிழகத்தே காந்தியடிகள் போன்ற பெரி யார் படங்களைத் தூக்கித் தமிழர் வழிபாடு செய்தல் பொருந்தும்போது, வீர வணக்கம் மட்டும் எவ்வகையிற் பொருந்தாததாகும்? பெரியோரையும், வீரரையும், பாராட்டத்தகு சிறப்பு மிக்கோரையும் வழிபடல் தமிழர் மரபாக இருந்துவருகிறது. இதனை மாற்றுவது இயலாது. நம் முன்னேர் பகுத்தறிவுடைய தமிழர்—மூடத்தன மான வீரர் வணக்கம் வைத்திலர்—நாட்டுப் பற்றையும் வீரச் சிறப்பையும் விளக்கவே நடுகல் வழிபாடு தமிழ கத்தே ஏற்பட்டது என்பதை நாம் மறத்தல் ஆகாது. இவ் வீரர் வணக்கம் ஒன்றே, நம் முன்னேர் போர்த் திறமையை இன்றும் சுட்டிக்காட்டப் போதுமன்ருே? இக் கோயில்களைக் கண்டு இன்றைய தமிழன் தன் பண்டை மரபின் மாண்பினை எண்ணி எண்ணி இறு மாந்து பீடுநடை நடக்க அறியாது, அதனை இகழ்தல் பேதைமை அன்ருே?

ஒரு தமிழ்ப் பெண்மணி—மறக்குடி மகள் பகைவரைப் பார்த்துக் கூறல் காண்க:

> "கல் நின்றான் எந்தை; கணவன் களப்பட்டான்;
> முன்னின்று மொய் யவிந்தார் என்னையர்;-பின்னின்று
> கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
> எய்போல் கிடந்தானென் ஏறு,"

-புறப்பொருள் வெண்பா மாலை—வாகைப்படலம், செ 22

"எந்தை கல் ஆனான்; கணவன் போரில் இறந்தான்; என் ஐயர் (தமையன்மார்) இறந்தனர். என் மகனும் போரிட்டு மாண்டான்," எனக் கூறும் தமிழ்ப் பெண்மணியின் தமிழ் வீரம் காண்க.

வீரர் வணக்கம் ஒரு காலத்தில் திராவிடநாடு முழுவதும் பரவி இருந்த தொன்றாகும். தெலுங்கு இடையர் (Gollas), ஈதிகர் (Idigas), பியதர் (Byadare) முதலிய பழைய திராவிடர் இன்றும் வீர வணக்கத்தைக் கையாண்டு வருகின்றனர்.

'ஒழுக்கம் உடையவரும் இறந்தபின், வீரர் ஆகின்றனர்' என்பது அவர்தம் நம்பிக்கை.

நீலகிரி மலைப் பகுதிகளில் வாழும் குறும்பர் என்னும் வகுப்பார் வணங்கும் கடவுளுக்கு 'இறைய தேவன்–வீர தேவன்' என்னும் பெயர்கள் உண்மை, அவர்தம் வீரர் வணக்கத்தை வலியுறுத்தல் காணலாம்.[2] மைசூர் சம்ஸ்தானத்தில் வாழும் குருபரு (குறும்பர்) என்னும் வகுப்பாரும் வீரர் வணக்கம் உடையவரே. ஆயின், இவ் வீரர் என்பவர் மணமானவரும் போரில் மாண்டவரும் ஆவர். குருபரு இவர்தம் சிலைகளை வைத்து ஆண்டு விழாக் கொண்டாடிப் படையல் இடுதல் மரபு.[3]

---

1 N. Venkataramanayya's 'origin of the S. I. Temple', P.7.
2 தென் இந்தியச் சாதிகளும் குடிகளும், 4, பக். 154–155.
3 புச்சானன், 'யாத்திரை' 1, பக். 275-6.

## உயர்ந்தோர் நடுகல்

போரில் இறந்தவர் அல்லாமல் அறிவிலும் ஒழுக்கத்திலும் மிக்கார் நினைவின் பொருட்டுக் கல் எடுத்தலும் உண்டு. இப்பழக்கம் எல்லாத் திராவிட மக்களிடத்தும் உண்டு. பட்டினத்தடிகள் அடக்கமான இடத்தில் கோவில் எடுத்து வழிபடல் திருவொற்றியூரிற் காணலாம். கோப்பெருஞ்சோழன் நடுகல் ஆயினன் என்பதைப் புறநானூற்றால் அறியலாம் (புறம்,221). கண்ணகி 'பத்தினிக்கடவுள்' ஆனதைச் சிலப்பதிகாரத்தால் உணரலாம்.

> "நம் அகல்நா டடைந்தஇப்
> பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"
>
> (காதை 25, வரி 113-4)

என்று சேரன்—செங்குட்டுவன் கோப்பெருந் தேவியான இளங்கோ வேண்மாள் கூறுதல் காண்க.

> " அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
> ஒருங்குடன் மாண்ட பெண்டிர்க் காயினும்
> ..................................................
> குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
> சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்"
>
> (மணிமேகலை, காதை 6, வரி 54-59)

காவிரிப்பூம்பட்டினத்துச் சுடுகாட்டில் இருந்தமை அறியத்தகும். இவை அக்கால மக்களால் வழிபடப் பட்டன ஆகும்.

## அச்சத்தால் வழிபாடு பெற்ற சிறு தெய்வங்கள்

கொடியவர்களாக இருந்து இறந்தவர், அவ்வக் குடும்பத்தவராலும் ஊராராலும் வழிபடப்பட்டனர். இதனை விளக்க நூற்றுக்கணக்கான சான்றுகள் தரலாம். இறந்தவரை வழிபடாவிடில் அவர்கள் பல நோய்களை உண்

டாக்கித் தம் ஊரை அழித்திடுவர் என்று பண்டை மக்கள் நம்பினமையே, இவர்தம் வழிபாட்டுக்குக் காரணமாகும். ஆண்டுதோறும் இறந்த இக்கொடியவர் பொருட்டுக் கோவில்கள் அமைக்கப்பெற்றன; வழிபாடுகள் பெருகின. திடீர் இறப்பும் கொடிய இறப்பும் நேர்ந்தவரும் வழிபாடு பெற்றனர். ஆந்திர நாட்டில் உள்ள கனக துர்க்கம்மை, போதிலம்மை, தோட்டக்கூர் அம்மை, கோட்டப்ப கொண்டசாமி முதலிய நூற்றுக் கணக்கான சிறு தெய்வங்கள் இத்தகையனவே.[4]

பெஜவாடாவில் வணங்கப்படும் கனகம்மை ஒரு பார்ப்பனப் பெண்ணின் ஆவி. அவள் ஒழுக்கம் தவறிச் சகோதரர்களுக்குப் பயந்து கிணற்றில் விழுந்து மாண்டாள். அவள் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கோவில் எடுப்பித்து, அவள் துர்க்கையாக வழிப்படப் படுகிருள். அவளது பெயர் ஆந்திர நாடெங்கும் பரவியுள்ளது.[5]

நெல்லூர் மாவட்டத்தில் 'முப்பராசுவாரி பாளையம்' என்னும் கிராமத்தில் ஒரு பணக்காரர் வீட்டில் களவு போன நகைகள் காரணமாகச் சந்தேகிக்கப்பட்ட வேலைக்காரி 'லிங்கம்மை' என்பவள் கிணற்றில் விழுந்து மாண்டாள். அவள் அப்பணக்காரன் கனவில் தோன்றித் தான் இறந்தமைக்குக் காரணனை அவனே தனக்குக் கோயில் எடுத்து வழிபடல் வேண்டும் என்பதை வற்புறுத்தினாள். அவன் அது செய்யாதொழிய, அவள் அக்கிராமத்தில் 'விஷபேதியை' உண்டாக்கித் துன்புறுத்தினாள். உடனே ஊரார் அனைவரும் கோவில் கட்டி லிங்கம்மையை வழிபடலாயினர். அதே மாவட்

4 தென் இந்தியக் கோவில்கட்கு மூலம், பக். 7.
5 Dr. Elmore's Dravidian Gods in Hindu Religion, and Ibid. No. 7. pp. 27-28.

டத்தில் ஒழுக்கம் தவறிய காரணத்தால் உடன் பிறந்தா ரால் கொல்லப்பட்ட 'போதிலம்மை' என்னும் இள மங்கை (குடியானவள்) கோயில் கட்டி வழிபாடு பெற்றுள்ளாள்.[6]

ஓர் இடைப் பெண்ணைக் கெடுத்ததற்காகக் கொல் லப்பட்ட 'கோட்டையன்' என்னும் 'லிங்கபலிஜ' வகுப் பைச் சார்ந்த இளைஞன், இன்று 'கோட்டப்ப கொண்ட சாமி' என்றும், 'சிவபிரான்' என்றும் தெலுங்கரால் வழி படப்படுகிறுன். அவனுல் கெடுக்கப்பட்டுக் கணவனுல் கொல்லப்பட்ட இடைப்பெண் 'சக்தி' யாக வணங்கப் படுகிறுள். இப்பொழுது இவ்வரலாறு மறைப்புண்டு, அங்குச் செல்வோர் கோட்டப்பக் கொண்ட சாமியைச் சிவனுக வணங்கி வருகின்றனர். அவன் புதைக்கப்பட்ட இடத்தில் கோவில் விளங்குகிறது! மனிதர் எங்ஙனம் தெய்வமாயினர் - ஆகின்றனர் என்பதற்கு இவை போதிய சான்றுகள் அல்லவா?[7]

14ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த ஸ்ரீநாதர் என்னும் ஆந்திரப் புலவர், "இத்தெய்வங்கள் யார்?" என்பதை அழகுற அறைந்துள்ளார்: "வீரர்களே திவ்ய லிங்கங் கள்; 'சென்னன்' என்பவன் விஷ்ணு ஆயினன்; நன்கு ஆராயின், 'கல்லுபோது ராசன் என்பவனே 'கால பைரவன்' ஆயினன்; 'அங்கம்மை' அல்லது 'சக்தி' எனப்படுபவள் 'அன்னபூரணம்மை' ஆவள்.[8]

இங்ஙனம் ஆந்திர நாட்டில் மட்டுமின்றித் தமிழகத் தும் இக்கொடியவர் வழிபாடு இருந்து வருகிறது. தமிழ்ச் சிற்றூர்களில் வணங்கப்படும் நூற்றுக்கணக்கான தெய் வங்கள் கொடிய இறப்பினை உடையவை; அச்சத்தால்

6 தென் இந்தியக் கோவில்கட்கு மூலம், பக். 28.
7 தென் இந்தியக் கோவில்கட்கு மூலம், பக். 29.
8 Prabakara Sastri's Chatu Verses in Telugu, p. 125

வணங்கப்படுபவை. 'காளியாத்தாள்' எத்துணை அச்சங் காரணமாக வணங்கப்படுகிறாள் என்பதைக் கூறுதலும் வேண்டுமோ? அம்மை, காலரா, முதலிய தீய நோய்கள் இத் தேவதையால் உண்டாவதாகத் தமிழர்தம் அறியாமை காரணமாக நம்புதலும்—வழிபடலும் அனைவரும் அறிந்தனவே அல்லவா?

## கிராம தேவதைகள்

தீய தெய்வங்கள் அல்லாமல் மக்களால் அச்சமின்றி வழிபடப்படும் கிராம தேவதைகளும் உண்டு. அவை நடுவீதி அம்மன், ஊரம்மன் முதலியன. பயங்கரத் தோற்றத்தை உடையன காளியம்மன், அங்காளம்மன், அங்கம்மன், முத்தியாலம்மன் முதலியன. பின்னவை அனைத்தும் சுடுகாட்டுத் தொடர்பை உடையன. ஆந்திர நாட்டில் 'காட்டி (காட்டு) அங்கம்மா' என்பது, பிணங்களைச் சுடும்—இடும் இடத்தில் உள்ள அதிதேவதை. இத்தேவதையோடு 'காடு கிழாள்' என்னும் தமிழ்த் தேவதையின் பெயரை ஒப்பிடுக. அங்காளம்மன் சுடுகாட்டுக்கு அருகில் உள்ள தெய்வம். மலையனூரில் ஆண்டு தோறும் 'சுடுகாட்டுக் கொள்ளை' என்னும் விழவு நடைபெறும். சிவராத்திரி முடிந்தவுடன் நடைபெறும் இத்தேவதையின் திருவிழா, ஆயிரக்கணக்கான மக்களால் வழிபடப்படுகிறது. 'முத்தியாலம்மா' (முத்தம்மை) என்பது சுடுகாட்டுத் தெய்வமே ஆகும். இதன் உருவம் பார்க்கத்தக்கது. இதன் கழுத்தில் மண்டை ஓடுகள் மாலையாக உள்ளன. இதன் ஒரு கால் அடியில் பிணம் காணப்படுகிறது. இந்த நிலையில் பலவகைக் காளிகள் திராவிட நாட்டில் பல்வேறு பெயர்களில் உள்ளன. இதன் மண்டை மாலையும், காலடியில் உள்ள பிணமும், இதன் பழைய இருப்பிடத்தைக் குறிக்கப்

போதியவை அல்லவா?[9] இதனை மறைக்கவே பிற்காலப் புராணக் கதைகள் ஏற்பட்டன. காளி—துர்க்கை என்னும் பெயர்களையுடைய தேவதைகள் ஊருக்கு வெளியில் இருத்தலே, அவை புறங்காட்டில் ஒரு காலத்தில் இருந்தவை என்பதைக் குறிக்கப்போதியது. கடைச்சங்க காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்துச் சுடுகாட்டுக் கோட்டத்துள் காளி கோவில் பெரியதாக இருந்தது என்பதொன்றே காளியின் பழைய இடத்தைக் குறிக்கப் போதியது. இக்காளியின் பல்வேறு பெயர்கள்—உருவங்கள் அனைத்தும் பிற்காலத்தில் 'சக்தி' எனப்பட்டன.

அச்சக்தி உமையின் 'ஓர் அம்சம்' எனவும், கிராம தேவதைகள் எல்லாம் உமையின் அல்லது காளியின் பணிப்பெண்கள் எனவும் பிற்கால இந்து மதத்துள் கூறப்பட்டுவிட்டன. எனினும், அவை ஏட்டளவில்தாம் இருக்கின்றன என்பதையும், பண்டைத் திராவிட மக்களின் வழிவழி வந்த கிராமத்துவாழ் மக்கள் இன்றும் இச்சிறு தெய்வங்களையே பெருந்தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர் என்பதையும் நுண்ணறிவும் நூலறிவும் ஒருங்குடையார் நன்கறிதல் கூடும்.

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால், சிறு தெய்வங்களுள் பாராட்டத்தக்கனவும் உள, அஞ்சத்தக்கனவும் உள என்பன அறியலாம். அகால மரணம் ஆனவர், ஒழுக்கங்கெட்டு இறந்தவர், தீயவராக இருந்து இறந்தவர் முதலியோர் நாளடைவில்—பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் உண்டான மாறுபாடுகளால்—தெய்வங்களாகப் பாமர மக்களால் வழிபடலாயினர். உண்மை அறிந்து இவற்றை நீக்குதல் அறிவுக்குப் பொருத்த

9 தென் இந்தியக் கடவுளர், பக். 225.

மாகும். வீரர் — ஒழுக்கத்தில் உயர்ந்தோர் - பத்தினிப் பெண்டிர் — இவர்தம் கோயில்களை அப்படியே வைத்திருத்தலும், அத்தெய்வங்களின் உண்மை நிலைமையை மக்கட்கு உணர்த்தலும் அறிவுடையோர் செயல்களாகும். இச்சிறு தெய்வங்களுட் பல, தெலுங்குக் கவிஞரான ஸ்ரீநாதர் கூறினாற்போல — நாளடைவில் பெருந் தெய்வங்களாக மாறினமையும் உண்டு. ‘காலம்’ எதைத்தான் செய்யாது!

# 20. தமிழில் பழமொழிகள்

## பழமொழிகளின் தோற்றம்

1. கோபாலனும் கோவிந்தனும் நண்பர்கள். ஒரு நாள் அவர்கள் இருவரும் ஒரு வீட்டில் உண்ணச் சென்றனர். உண்ட பிறகு இருவரும் சேர்ந்து வந்துகொண்டிருந்தனர். கோவிந்தன் கோபாலனிடம் தான் விருந்துண்ட வீட்டிலிருந்து திருடிக்கொண்டு வந்த மோதிரத்தைக் காட்டினன்; தான் எடுத்து வந்த விதத்தையும் சொன்ஞன். கோபாலன் அது கேட்டு மிக்க வருத்தமும் சீற்றமும் அடைந்தான்; "கோவிந்தா, **அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா?"** என்று மன வேதனையோடு கேட்டான்.

இவ்வாறு கோபாலன், "அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா?" என்று சொன்னது நாளடைவில் சமுதாயத்தில் பரவியது. அது பொருத்தமான—பொருள் பொதிந்த வாக்கியமாக இருந்ததால், மக்கள் உள்ளங்களில் பதிந்தது. எந்தக் காலத்தில் கோபாலன் இதைச் சொன்ஞன் என்பது யாருக்கும் தெரியாது. ஆஞல் இன்று அது மக்கள் பேச்சு வழக்கில் இருக்கிறது. இது காலப்போக்கில் அறிஞர்களின் நூல்களிலும் இடம் பெற்றுவிட்டது; எனவே, இப்பழமொழி (பழைய மொழி) பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலும் அழியாத இடம் பெற்றுவிட்டது. இது எப்பொழுதோ சொல்லப்பட்டது; ஆதலால் பழமொழி (பழைய மொழி) என்ற பெயரும் பெற்றுவிட்டது. இப்பழமொழி இவ்வாறு ஒரு நிகழ்ச்சியிலிருந்து பிறந்தது என்று சொல்லலாம்.

௨. நான்குபேர் ஒருவர் வீட்டிற்குச் சென்றனர்; அவ்வீட்டுக்காரனுடன் பேசிப் பொழுதுபோக்கினர். நால்வருள் ஒருவன், வீட்டுக்காரன் மாடத்தில் வைத்திருந்த சிறிய பணப்பையை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டான். சிறிதுநேரம் கழித்து வீட்டுக்குரியவன் ஏதோ வாங்குவதற்காகப் பணம் எடுக்க மாடத்தைப் பார்த்தான். அங்குப் பணப்பை இல்லை. அவன் முகம் வாடிவிட்டது; அந்த நால்வருள் ஒருவர்தான் எடுத்திருக்க வேண்டும் என்று தன்னுள் எண்ணினான்; ஆயினும் அவர்களை எவ்வாறு கேட்பது என்று விழித்தான்.

அவனுடைய முகவாட்டத்தையும் அவன் விழிப்பையும் கண்ட நண்பர் நால்வருள் ஒருவன், "ஏன் உங்கள் முகம் திடீரென்று மாறிவிட்டது? என்ன செய்தி? கூறுங்கள்," என்று துடிப்போடு கேட்டான். மேலும் இருவர் அவ்வாறே துடிதுடித்துக் கேட்டனர். பையைத் திருடியவன் வாயைத் திறக்கவேயில்லை.

அப்போது வீட்டுக்காரன், "நண்பர்களே, இந்த மாடத்தில் ஒரு சிறிய பணப்பை வைத்தேன். நீங்கள் இங்கு வந்த பிறகும் அது இந்த மாடத்திலே இருந்தது. இங்கு வேறு யாரும் வரவில்லை. அப்படி இருந்தும் அது காணப்படவில்லை. இதை உங்களிடம் எப்படிச் சொல்வது என்றுதான் தயங்கினேன்," என்று விட்டுவிட்டுப் பேசினான். அந்நால்வருள் ஒருவன் மிகுந்த வியப்போடு, "அப்படியா? என்ன வியப்பு! நாங்கள் தவறாகக் கருதமாட்டோம். எங்களுள் ஒவ்வொருவரையும் சோதித்து விடுங்கள்," என்று கூறினான். அவனைப் பின்பற்றி மற்ற இருவரும் அவ்வாறே கூறினர்.

பையைத் திருடியவன் அப்போதும் பேசவில்லை. அவன் முகம் இருண்டு கிடந்தது. அவன் உள்ளம் 'திக்-

திக்', என்று அடித்துக்கொண்டது. நண்பர் மூவரும் அவன் முகத்தைப் பார்த்தனர். அவருள் ஒருவன் அவனைப் பார்த்து, "என்ன நண்பா, உன் முகம் வாடியிருக்கிறதே! நீ ஒன்றும் பேசவில்லையே! நீ அப்பையைப் பார்த்தாயா?" என்று கேட்டான். பையைத் திருடியவன் "இல்லை, இல்லை" என்று கத்தினன்.

உடனே முதல் நண்பன், "நண்பர் பை காணப்படவில்லை என்று சொன்னவுடன் நாங்கள் மூவரும் பதைபதைத்தோம். நீயோ வாய் திறக்கவில்லை. நாங்கள் மூவரும் 'எங்களைச் சோதித்துக்கொள்ளுங்கள்' என்று நண்பரிடம் கூறினோம். நீ அப்போதும் வாய் திறக்கவில்லை. நீ 'திருதிரு' என்று விழிக்கிறாய். நீ பையை எடுக்கவில்லை என்று சொன்னாலும் நீதான் எடுத்தவன் என்பதை உன் முகம் கூறுகிறதே! அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறதே," என்று கூறினன். கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்டவன் பையைக் கொடுத்துவிட்டுத் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன்.

இப்படி ஒரு நிகழ்ச்சி பழைய காலத்தில் நடந்திருக்கலாம். அப்பொழுது ஒருவன் கூறியதே 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற மொழி. அம்மொழி காலப்போக்கில் சமுதாயத்தில் பரவிவிட்டது. உலகப் புகழ் பெற்ற திருக்குறள் செய்த திருவள்ளுவர்,

> "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்,"

என்று இப்பழமொழியைத் தம் பாவில் அமைத்துள்ளார். மற்றொரு புலவர், "முகம்போல முன்னுரைப்பதில்" என்று தம் பாவில் இப்பழமொழியைப் புகுத்திவிட்டார். இவ்வாறு ஒருவன் கூறிய மொழி சமுதாயத்தில் பரவிக்

காலப்போக்கில் புலவர் செய்த நூல்களிலும் அழியாத இடம் பெற்றுப் பழமொழியாகிவிடுகிறது.

## மேனாட்டுப் பழமொழிகள்

ஒரு மனிதன் கையில் ஒரு பறவை அகப்பட்டுக் கொண்டது. அப்பொழுது வேறொருவன் அவனைப் பார்த்து; "அப்புதரில் இரண்டு பறவைகள் இருக்கின்றன; இக்காட்டில் பத்துப் பறவைகள் இருக்கின்றன; வானத்தில் நூறு பறவைகள் பறக்கின்றன," என்றான். முதல் மனிதன், "புதரில் இருக்கும் இரண்டு பறவைகளையும், காட்டில் உள்ள பத்துப் பறவைகளையும், வானத்தில் பறக்கும் நூறு பறவைகளையும் இனித்தான் பிடிக்க முயல வேண்டும். அவற்றுள் எத்துணை பிடிபடும் என்று உறுதியாகக் கூற இயலாது. இந்த நிலையில் என் கையில் ஒரு பறவை இருப்பது உறுதி. **கையில் உள்ள ஒன்று புதரில் உள்ள இரண்டுக்குச் சமம் (A bird in the hand is worth two in the bush.)** என்று கூறினான். அவன் இறுதியில் கூறினது அறிவுக்குப் பொருத்தமானது. எனவே, அது நாளடைவில் சமுதாயத்தில் பரவி வேரூன்றிப் பழமொழியாகிவிட்டது.

இங்ஙனம் பேச்சு வழக்கில் பழமொழியான ஒன்றை ஒரு நூலாசிரியர் தம் நூலில் நேர்முகமாகவோ ஒரு கருத்தை வெளிப்படுத்தவோ எடுத்தாள்கிறார்.

இவ்வாறு இங்கிலாந்து நாட்டில் அந்நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ற முறையில்-சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் பலமொழிகள் காலப்போக்கில் தோன்றின. இவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் பழமொழிகள் உண்டு. கல்வி மிகமிக, இப்பழமொழிகள் எழுத்து வடிவில் அழியாத இடத்தைப் பெற்றுவிடுகின்றன.

## பழமொழிகள்

மேலே கூறப்பெற்ற சான்றுகளைக் கொண்டு ஆராயின், மனிதனது தெளிந்த அநுபவத்திலிருந்து தோன்றுவதே பழமொழி என்பது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். அதாவது, மக்கள் தங்கள் அநுபவத்திலிருந்து எடுத்து மொழிந்த வாசகங்களே பழமொழிகள் என்பது. இப் பழமொழிகள் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகையின பொதுமக்களிடமிருந்து வருவன; இரண்டாம் வகையின அறிஞர்களிடமிருந்து வருவன. அறிஞர் என்போர் மக்களால் போற்றப்பட்ட சமயத் தலைவர்கள், துறவிகள் முதலியோர். அவர்கள் கூறிய சமுதாய வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை உண்மைகளைப் பொதுமக்கள் அவற்றைத் தாமே முயன்று கண்டறிய அறிவுத்திறனோ நேரமோ போதாமையால் அல்லது வாய்க்காமையால் அப்படியே ஏற்றுக்கொண்டனர். எனவே, அவை வாழ்க்கை விதிகளாக அமைந்துவிட்டன.

இவ்விருவகைப் பழமொழிகளும் பொதுமக்களிடமிருந்து அறிஞர்களிடத்திலும், அறிஞரிடத்திலிருந்து பொதுமக்களிடமும் முதலில் பேச்சு வழக்கில் பரவுகின்றன; பின்பு நூல் வழக்கில் இடம் பெற்றுவிடுகின்றன. பேச்சு வழக்கில் மட்டும் இருந்தால் எல்லாப் பழமொழிகளும் மக்கள் நினைவில் இருப்பது அருமை. அவை நூல்களில் இடம் பெற்று விடுவதால் என்றும் இறவாமல் காக்கப்படுகின்றன. பண்டை மக்களால் பேசப்பட்ட பழமொழிகள் நூல்களில் இடம் பெற்றுவிட்டமையால், நூல் வழக்கிலிருந்து பேச்சு வழக்கிற்கு வந்து கொண்டேயிருக்கின்றன. இங்ஙனம் பழமொழிகளை

வாழ்விப்பதில் நூல்கள் மிகுந்த அளவு தொண்டு செய்கின்றன.*

மக்களுள் உழவர், கைத்தொழிலாளர், சோதிடர், வேட்டுவர், மருத்துவர், உளநூல் ஆசிரியர் எனப்பல திறத்தோர் இருக்கின்றனர். இவ்வாறே மலைகளில் வாழ்பவர்-வயல்வளப் பகுதிகளில் வாழ்பவர்-புல்வெளிகளில் வாழ்பவர்-கடற்கரைப் பகுதிகளில் வாழ்பவர் என்பவரிடமிருந்து, அவரவர் நிலத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பவும் பழமொழிகள் அமையும். எனவே, இப்பல துறை மக்களுடைய அநுபவங்களிலிருந்து வெளிப்படும் பழமொழிகளே பலதுறைப் பழமொழிகளாக இருப்பதைக் காணலாம். உளநூல், அரசியல், சமயம், கல்வி, மருத்துவம், நட்பு, பிள்ளை வளர்ப்பு, சமையற்கலை முதலிய பல்வேறுபட்ட கலைகள் பற்றிய பழமொழிகளும் நாட்டில் நடமாடுகின்றன.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''. இப்பழமொழி நான்கு சொற்களால் ஆனவை. இதிலுள்ள சொற்செறிவும், பொருட்செறிவும் கவனிக்கத்தக்கவை. இவ்வாறே ஒவ்வொரு பழமொழியும் சொற்சுருக்கமும் பொருள் ஆழமும் கொண்டவையாக இருப்பதைக் காணக்காண, இப்பழமொழிகளை உண்டாக்கிய பண்டை மக்களின் நிறைந்த அநுபவத்தையும் நுட்ப அறிவையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இவை பண்டை மக்களுடைய வாழ்க்கை அநுபவங்களையும், பலகலைப் புலமையையும், பழக்க வழக்கங்களையும், இன்ன பிறவற்றையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

பழமொழிகள் எவ்வாறு தோன்றின-அவற்றின் வகை—அவற்றின் நடை-அவை அறிவுறுத்தும் உண்மை

* Oxford Dictionary of English Proverbs, Int. P. VIII.

கள் எனப் பல தலைப்புக்களில் பழமொழிகளை ஆராய லாம். இவ்வாராய்ச்சி மிக்க பயனுடையது. இதனால் அறியப்பெறும் உண்மைகள் மனித இனத்துக்கு மிக்க பயனைத்தரும்.

## மேனாட்டார் ஆராய்ச்சி

ஒவ்வொரு அறிவுத் துறையிலும் சிறந்து விளங்கும் மேனாட்டார் இத்துறையிலும் நமக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளனர். பைபிளில் பல பழமொழிகள் காணப் படுகின்றன. அவை எகிப்து, கிரீஸ், பாபிலோனியா முதலிய நாடுகளின் பண்பாட்டை உணர்த்துகின்றன. அவற்றையும் காலப்போக்கில் உண்டான பழமொழிகளை யும் அறிஞர்கள் தொகுத்துக்கொண்டே வந்தனர். கி. பி. 1546 இல் **முதல் ஆங்கிலப் பழமொழி நூல்** வெளி வந்தது. ஆங்கிலப் பழமொழிகளை அகர வரிசையில் தொகுத்து ஆக்ஸ்போர்டு கம்பெனியார் மிகப் பெரிய நூலை வெளியிட்டுள்ளனர். இங்கிலாந்தில் கி பி. 16, 17 ஆம் நூற்றுண்டுகளில் வழங்கப்பெற்ற பழமொழி களை அகர வரிசையில் தொகுத்து ஒரு பெரிய நூலைப் **பேராசிரியர் டில்லே** (Prof. Tilley) என்பவர் வெளியிட் டுள்ளார்.[2]

## தமிழில் பழமொழிகள்

நமது இந்திய நாட்டில் வடமொழியைப் போன்ற பழைமையும் பெருமையும் உடையது தமிழ் என்பதை மொழிநூல் வல்லார் அனைவரும் அறிவர். அழிந்தன போக இன்று எஞ்சியுள்ள சங்க நூல்கள் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை உடையவை என்பது அறிஞர் அறிந்த உண்மை. எனவே, இலக்கண இலக்கியப்

1. Oxford Dictionary of Proverbs, Int P. 20.
2. A Dictionary of Proverbs in England by Prof. Tilley.

பழைமை வாய்ந்த இம்மொழியில் பழமொழிகளும் பண்டைக்கால முதலே நாட்டில் வழங்கி வந்திருக்க வேண்டும் என்பது கூறுமலே அமையும் அன்றே! பழமொழி நானூறு என்ற நூல் ஒன்று தமிழ் மொழியில் இருக்கிறது. அதன் காலம் ஏறத்தாழக் கி. பி. 550–650 என்னலாம்.* இதனை இயற்றியவர் முன்றுறை அரையனார். அவர் ஒரு சமண சமயப் புலவர். அவர் காலத்தில் நாட்டில் பல பழமொழிகள் வழக்குப் பெற்றிருந்தன. அவற்றுள் அவர் நானூறு பழமொழிகளைத் தேர்ந்தெடுத்தார்; ஒரு பழமொழியையும் அது கொண்டு விளக்குதற்கேற்ற ஒரு சிறந்த கருத்தினையும் ஒரு செய்யுளில் கூறினார்; இவ்வாறு நானூறு பழமொழிகளையும் அவை கொண்டு விளக்குதற்கேற்ற உண்மைகளையும் நானூறு செய்யுட்களில் பாடியுள்ளார். அச்செய்யுட்கள் வெண்பாவில் அமைந்தவை.

இப்பழமொழிகள் பொருட்செறிவு உடையவை. இவற்ருல் அக்காலத் தமிழ்மக்கள் இயல்பையும் பிறவற்றையும் அறியலாம்; சான்றாக இரண்டினை இங்குக் காண்க.

1. "இடைநாயிற்கு என்பிடுமாறு" என்பது ஒரு பழமொழி. ஆடு திருடச் செல்பவர், ஆடுகளுக்குக் காவலாக இருக்கும் இடையரது நாய்க்கு எலும்புத் துண்டத்தை இடுவர். அது அந்த எலும்புத் துண்டத்தின்மீது கவனத்தைச் செலுத்தும்; காவலில் தவறிவிடும். அதனால் கள்வர் எவ்வித இடையூறும் இல்லாமல் தாம் விரும்பிய ஆட்டைத் திருடிச் செல்வர். இந்த உண்மையை இப் பழமொழி உணர்த்துகிறது. இவ்வாறே தம் பகைவரை

* பேராசிரியர் S. வையாபுரிப் பிள்ளை, திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும், பக். 23.

வெல்ல விரும்புவோர், அப்பகைவரோடு வாழும் நண்பர்களைத் தம்மவராக ஆக்கிக் கொண்டு, அப்பகைவர்களை எளிதில் வெல்ல வேண்டும். ஆசிரியர் இக்கருத்தை முன் சொன்ன பழமொழியின்மூலம் விளக்குகிருர்.

*"யானுமற் றிவ்விருந்த எம்முனும் ஆயக்கால்*
*வீரஞ் செயக்கிடந்த தில்லென் று-கூடப்*
*படைமாறு கொள்ளப் பகைதூண்ட லஃதே*
*இடைகாயிற் கென்பிடு மாறு."*

2. "அம்பலம் தாழ்க் கூட்டுவார்" என்பது ஒரு பழமொழி. அம்பலம் என்பது இக்காலச் சத்திரம் போன்ற ஒரு பொது இடம். அம்பலத்தில் எப்பொழுதும் பலரும் வருவதும் போவதுமாக இருப்பதால், அதன் வாயிற் கதவைத் தாழிடல் இயலாது. அதனைத் தாழிட முயல்வது அறிவிலார் செயல். அதுபோலவே, தம்மை நோக்கிக் குறை கூறும் மூடர் வாயை அடக்கப் புகுதலும் அறிவிலார் செயலாகும். அதாவது, 'தம்மைக் குறை கூறும் மூடர் வாயை அடக்கப் புகுதல்—அம்பலம் தாழ்க் கூட்டுவோர் செயலை ஒத்தது—அறிவற்ற செயல்' என்று ஆசிரியர் கூறுகிருர். ஆசிரியர் காலத்தில் ஊர்களில் அம்பலங்கள் இருந்த உண்மையை இப்பழமொழி உணர்த்துகிறது.

*"தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்*
*பரியாதார் போல இருக்க-பரிவில்லா*
*வம்பலர் வாயை அவிப்பான் புகுவரே*
*அம்பலம் தாழ்க்கூட்டு வார்."*

இந்நூலில் தமிழகத்தை ஆண்ட தூங்கெயில் எரிந்த தொடித்தோள் செம்பியன், பொற்கைப் பாண்டியன், மநுநீதிச் சோழன், கரிகால் சோழன், சேரன் செங்குட்டுவன் என்ற முடியுடை மூவேந்தர், பாரி,

பேகன் போன்ற சிற்றரசர் என்பவரைப் பற்றிய சில செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன.

## நாலடியாரும் தேவாரமும்

நாலடியார் என்பது நானூறு வெண்பாக்களைக் கொண்ட நீதிநூல். இதுவும் சமணர் செய்த நீதி நூலாகும். இதன்கண் "ஒருவர் பொறை இருவர் நட்பு" (ஒருவரது பொறுமை இருவரது நட்புக்குக் காரணமாகும்), "கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு" (மனிதரினும் உயர்ந்த தேவரே தின்றாலும் வேம்பு கசந்துதான் தீரும்) என்பன போன்ற பழமொழிகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமய ஆசாரியரான திருநாவுக்கரசர் தம் தேவாரப்பதிகங்களில் (Hymns) சில பழமொழிகளை எடுத்தாண்டுள்ளார். அவற்றுள், (1) "கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வன்" (2) முயல் விட்டுக் காக்கைப் பின் போன ஆறு" (3) "அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்ட ஆறு"

என்பன குறிக்கத்தக்கவை. இவ்வாறே ஒவ்வொரு நூற்றுண்டு இலக்கியத்திலும் பழமொழிகள் எடுத்தாளப் பட்டுள்ளன.

## தமிழில் பழமொழி நூல்கள்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் பீட்டர் பெர்சிவல் ஐயர் என்ற பாதிரியார் 1873 பழமொழிகளைத் திரட்டி யாழ்ப் பாணத்தில் ஒரு நூலாக அச்சிட்டார். திருநெல்வேலியில் இருந்த லாசரஸ் என்ற ஒரு பெரியார் பதினாயிரம் பழமொழிகளைத் தொகுத்து மொழி பெயர்த்து ஒரு பெரிய நூலாக வெளியிட்டார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதினாயிரத்து நானூற்று ஐம்பது பழமொழிகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளனர்.

## பலதுறைப் பழமொழிகள்

1. **"அகல உழுவதைவிட ஆழ உழுவது மேல்".** நிலத்தை ஆழமாக உழுதால்தான் நெற்பயிர் நன்கு வேரூன்ற வசதி ஏற்படும். ஆழமாக உழாது அகலமாக (பரவலாக) உழுவது நெற்பயிருக்கு எவ்வித நலனையும் தராது. ஆதலால்தான் இப்பழமொழி உழவர் அநுபவத்திலிருந்து எழுந்தது. இது உழவர் பழமொழி.

1 **ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்"** நாட்டில் மருத்துவத் துறையில் சிறந்தவரும் இருக்கின்றனர். கற்றுக்குட்டிகளும் இருக்கின்றனர். கற்றுக்குட்டிகள் மனிதருக்குப் பல மருந்துகளைக் கொடுத்துத்தான் பல மருத்துவ உண்மைகளை அறிகின்றனர். அவர்கள் செய்யும் சோதனைகளில் பலர் இறத்தல் கூடும். இவ்வாறு பலரைக் கொன்ற பிறகுதான் அவர்கள் மருத்துவ அநுபவம் பெறுகின்றனர். இன்றும் சில கிராமங்களில் இத்தகைய மருத்துவரைக் காணலாம். அதனுல்தான் இப் பழமொழி எழுந்தது.

3 **"அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் உருப்படா".** முறுக்கி வளர்க்காத மீசை வாயை மூடிக்கொள்ளும்; உணவு முதலியவற்றை உண்ணும் போது இடையூறு விளைக்கும்; முகப் பொலிவையும் கெடுக்கும். அதுபோலவே இளமையில் பிள்ளைகள் தீயவர் சேர்க்கையால் கெடுவர்; சோம்பலால் கெடுவர்; பெற்றோர் காட்டும் அளவுகடந்த அன்பினுலும் கெடுவர். பிள்ளைகள் தவறு செய்யும்போதே அடித்துத் திருத்துதல் வேண்டும். பெற்றோர் தம் அன்பின் சிறப்பை உணர முடியாத இளம் பருவத்தில் பிள்ளைகளை அடித்துத்தான் திருத்த வேண்டும். இது நம் முன்னோர் அநுபவத்திற்

கண்ட உண்மை. எனவே, பிள்ளை வளர்ப்புப் பற்றி இப்பழமொழி எழுந்தது.

4 "ஆயிரங் காலத்துப் பயிர்"

திருமணம் என்பது ஒருவர் வாழ்க்கையின் உயிர் நாடியாகும்; இல்வாழ்க்கைக்கு அடிப்படையாகும். அந்த அடிப்படை செவ்வையாக அமைந்தால்தான் அதன் மீது கட்டப்பெறும் இல்வாழ்க்கைக் கட்டடம் உறுதியாக இருக்கும். இல்வாழ்க்கையின் பயனாய்ப் பிறக்கும் பிள்ளைகள் மேன்மக்களாக இருப்பர். குடும்ப வாழ்க்கையும் சிறப்புற்று விளங்கும். பெற்றோர் நடத்தும் இல்வாழ்க்கை சிறந்த முன்மாதிரியாகப் பிள்ளைகளுக்கு அமையும். இவ்வாறே பெற்றோர் இல்வாழ்க்கையைப் பிள்ளைகள் பின்பற்ற, அப்பிள்ளைகளது இல்வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு அவர்தம் பிள்ளைகள் பின்பற்றுவர். இவ்வாறே தலைமுறை தலைமுறையாக நல்ல இல்வாழ்க்கை அமையப்பெறும். இவ்வளவுக்கும் அடிப்படை, குடும்பத்தில் முதலில் அமையும் பொருத்தமான திருமணமேயாகும். அதனால்தான் திருமணத்தை "ஆயிரங்காலத்துப் பயிர்" என்று நம் முன்னோர் கூறினர். திருமணம் செய்துகொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் எல்லாப் பொருத்தங்களும் நன்கு அமைந்திருக்கின்றனவா என்பதைச் சோதித்தபின்பே - அவசரப்படாமல் அமைதியாக ஆராய்ந்து தெளிந்த பின்பே திருமணம் செய்தல் வேண்டும். இந்த விளக்கத்தை அடக்கிக்கொண்டு இருப்பதே "ஆயிரங்காலத்துப் பயிர்" என்னும் பழமொழி. இது திருமணம்பற்றி எழுந்த பழமொழியாகும்.

5 ஆயத்துறையில் அநியாயம் பெய்யாதே"

ஆயம் - சுங்கம். ஆயத்துறை—சுங்கச் சாவடி. பழைய காலத்தில் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு

வாணிகத்தின் பொருட்டுச் செல்லும் பொருள்களுக்கு ஆயம் வசூலிக்கும் இடங்கள் ஊருக்கு வெளியில் அமைந்திருந்தன. ஆயத்தை வசூலிப்பவர் நேர்மையாளராக இருந்தால்தான் பொருள்களை விற்பவரிடம் நியாயமான வரியை வாங்குதல் கூடும். இவர்களிடம் அதட்டி மிரட்டி அநியாயம் செய்து அதிகமாகச் சுங்கம் வாங்குவோரும் அக்காலத்தில் இருந்தனர்; அதிகப்படியாக வாங்கியதைத் தாம் வைத்துக்கொண்டனர். இத் தகைய தீ நெறிகளால் கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் சோழப் பெருநாட்டில் வணிகர் பெரிதும் துன்புற்றனர். அவர்களது முறையீட்டைக் கேட்ட முதற் குலோத்துங்க சோழன் சுங்கம் வசூலிப்பதை நிறுத்திவிட்டான்; அதனுல் **'சுங்கம் தவிர்த்த சோழன்'** என்று குடிமக்களால் பாராட்டப் பெற்றுன். ஆயத்துறையில் நடைபெற்ற முறை கேடான செயல்களைக் கண்டே நம் முன்னோர்கள் "ஆயத்துறையில் அநியாயம் செய்யாதே" என்று கூறியிருத்தல் வேண்டும். அது நாளடைவில் பழமொழியாகச் சமுதாயத்தில் வழங்கலாயிற்று.

**6 அட்டமத்துச் சனி கிட்டவந்தது போல**

இது சோதிட அநுபவத்தால் வந்த பழமொழியாகும். அட்டமத்துச் சனி பல தொல்லைகளை மனிதனுக்கு உண்டாக்கும் என்பது **சோதிட நூல்** துணிபு. அதுபோல் விரும்பத்தகாதவர் நம்மோடு பழகுதல் அல்லது நம்மிடம் அடிக்கடி வருதல் ஆபத்தானது என்னும் பொருளில் இப்பழமொழி மக்களால் ஆளப்படுகிறது. இப்பழமொழி நம் முன்னோரது சோதிடக்கலை அறிவை விளக்க வல்லது.

**7 "அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயில் மண்ணு"**

சங்க காலத்திலும் பல்லவர் காலத்திலும் இக் கருத்தே தமிழ் மக்களிடம் வேரூன்றி இருந்தது என்று சொல்லலாம். ஆனால் சோழப் பேரரசர் காலத்தில் சைவ வைணவ சமயங்கள் ஒன்றோடொன்று மாறுபட்டன. சைவமே உயர்ந்த சமயம், சிவனே உயர்ந்த கடவுள் என்ற எண்ணம் சைவரிடையே தடித்தது; இதனால் வைணவர்க்குப் பல தீமைகள் விளைந்தன. ஆனால் கி. பி. 12–ஆம் நூற்றாண்டில் தோன்றிய கம்பர் "அரியும் சிவனும் ஒன்று" என்பதைத் தாம் பாடின இராமாயணத்தில் மேகத்தின் வாயிலாக நன்கு விளக்கியுள்ளார். ஏறத்தாழ அக்காலத்தில் இப்பழமொழி எழுந்திருத்தல் வேண்டும். சமயவாதிகளை மட்டந்தட்டவே இப்பழமொழி எழுந்தது என்று சொல்லலாம். இது சமயம்பற்றி எழுந்த பழமொழியாகும்.

## 8 "கோவிற் சொத்து குல நாசம்"

பண்டைக்காலம் முதலே கோவில் ஆட்சி பெருமக்கள் சிலரிடம் இருந்துவந்தது என்பது பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கும் உண்மையாகும் விசயநகர ஆட்சிக்குப் பிறகு திடமான ஆட்சி தமிழகத்தில் இல்லாமையால் கோவில் ஆட்சியும் கெட்டது. கோவிலைக் கண்காணித்து வந்தவருள் பலர் தம் கூடாவொழுக்கத்தால் தமது செல்வத்தையும் இழந்து கோவிற் செல்வத்திலும் கை வைக்கலாயினர். அங்ஙனம் செய்தவர் காலப்போக்கில் வறுமை வாய்ப்பட்டும் நோய்வாய்ப்பட்டும் அழிந்தனர். அக்குடும்பங்களில் பிறந்த பிள்ளைகளும் மாக்கள் நிலையில் இருந்தனர்; பின்னர் அவரும் அழிந்தனர். இக்கேடுகளை நேரிற் கண்ட மக்கள், "கோவிற் சொத்து குல நாசம்" என்று கூறினர் போலும்! அம்மொழி இன்று பழமொழியாகிவிட்டது.

9 **''திகம்பர சந்நியாசிக்கு வண்ணான் உறவு ஏன்?''**

ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே திகம்பர சமண முனிவர் தமிழகத்திற்கு வந்துவிட்டனர் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அங்ஙனம் வந்தவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரையில் இங்குச் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதும் வரலாற்று உண்மை. திகம்பரத் துறவிகள் ஆடையற்றவர்கள். எனவே, அவர்களுக்கு வண்ணான் உறவு தேவையில்லை என்பது வெளிப்படை. அதுபோலத் தேவையற்றோருடன் உறவு கொள்வது தவறு என்னும் கருத்தில் இப்பழமொழி தோன்றியிருத்தல் கூடும்.

10 ''படிப்பது இராமாயணம்; இடிப்பது பெருமாள் கோவில்''

சமுதாயத்தில் பலர் அறநூல்களைப் படிப்பர்; ஆயின் அவற்றில் சொல்லப்பட்ட அறநெறிகளுக்கு மாறாகவே நடப்பர். அஃதாவது, சொல்லும் செயலும் ஒத்திருப்பதில்லை. இதனை விளக்குவதற்கே இப்பழமொழி எழுந்தது.

விசயநகர ஆட்சிக் காலத்திலும் தமிழகத்தில் நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் தெலுங்கர் தமிழகத்தில் குடியேறினர். அதனால் தெலுங்கு மொழி இங்குப் பரவியது. தமிழ் மக்களும் அம்மொழியை ஓரளவு அறிந்தனர். அக்காலத்தில் சில பழமொழிகள் இந்நாட்டில் தோன்றின.

1 **''அவசரக்காரருக்கு ஆக்குலோ பெட்டு, நாக்கு சேத்திலோ பெட்டு.''**

2 **''டில்லிக்கு ராஜாவானாலும் தல்லிக்குப் பிட்டா.''**

3 **''மரியாதை கெட்டால் மாலவாடு.''**

4 **''காது காது என்றால் நாதி நாதி என்கிறான்.''**

இப்பழமொழிகளுள் தமிழ்ச் சொற்களும் கலந்திருப்பதைக் காணலாம்.

நாயக்கர் ஆட்சிக்குப் பின்பு தமிழகத்தில் கருநாடக நவாபுகளின் ஆட்சி ஏற்பட்டது. அப்போது இந்துஸ்தானி, அராபிய, பாரசீக, உருதுச் சொற்கள் இந்நாட்டில் வழங்கின. அப்போது தோன்றிய பழமொழிகள் சில. அவற்றுள்,

1 "நவாப் அத்தனை ஏழை, புலியத்தனை சாது."

2 "காகம் இல்லாத ஊர், சோனகன் இல்லாத ஊர்."

3 "துலுக்கத் தெருவில் தேவாரம் ஓதினதுபோல" என்பவை குறிக்கத்தக்கவை.

நவாபுகளின் ஆட்சிக்குப் பிறகு தமிழகம் ஐரோப்பியர் ஆட்சிக்கு உட்பட்டது. அப்போது இந்நாட்டில் கிறித்துவம் நன்கு பரவியது. அக்காலத்தில் உண்டான பழமொழிகள் சில. அவற்றுள்,

1 "ஊசியின் காதிலே ஒட்டகம் நுழையுமா?"

2 "ஒரு சுருட்டுப் பத்து நாளில் பிடிப்பான்,"

3 தண்ட சோற்றுக்காரா, குண்டு போட்டால் வாடா."

4 "துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தது போல" என்பன குறிக்கத் தக்கவை.

## முடிவுரை

சங்க நூல்கள் முதல் இன்றைய நூல்கள் வரையிலும் ஏடுகளில் உள்ள பழமொழிகள் பலவாகும். மக்கள்

பேச்சு வழக்கில் உள்ளவை மிகப் பலவாகும். அவை அனைத்தையும் தொகுக்க வேண்டும்; அவற்றைப் பல் வேறு துறையினவாகப் பிரித்தல் வேண்டும்; ஒவ்வொரு பழமொழிக்குரிய விளக்கமும் அது தோன்றிய உத்தேச காலமும் அது இடம் பெற்றுள்ள இலக்கியமும் குறிக்கப் பெறுதல் வேண்டும். இங்ஙனம் ஒரு முயற்சி மேற் கொள்ளப்படுதல் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பேருத வியாக அமையும்.

பாரதி பிரிண்டர்ஸ், 119, பிராட்வே, சென்னை-1.